உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 31 சனிக்கிழமை (17.09.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 295



09
இரட்டைத் திருமணம் ஒரு வருட சிறை



14
கூத்தாடும் கூட்டம்



21
இவரும் இலவசம் தொடங்கி விட்டார்



நிதான ஆட்டம்

# 13 ஆம் திருத்தம் தாண்டி சென்று அரசியல் தீர்வு காண இணக்கம்

## நேற்றைய பேச்சு சுமுகமாக முடிவு

கொழும்பு, செப்ரெம்பர் 17

**இனப்பிரச்சினைக்கு 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று தீர்வு காண அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணங்கி இருக்கின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஏற்கனவே கையளித்த தீர்வு யோசனையில் தெரிவிக்கப்பட்டிருந்த 18 அதிகாரங்கள் 13ஆவது திருத்தத்துக்கு அப்பாலானவையாக இருந்தபோதும் அவை தொடர்பில் பேசித் தீர்த்துக்கொள்ளலாம் என்று அரசு தெரிவித்திருக்கிறது. நேற்றுப் பிற்பகல் இரு தரப்பினருக்கும் இடையில் அலரி மாளிகையில் நடைபெற்ற பேச்சில் இந்த இணக்கம் எட்டப்பட்டுள்ளது.**

தடைப்பட்டிருந்த அரசு - கூட்டமைப்புப் பேச்சு நேற்று மீண்டும் ஆரம்பமானது. கடந்த ஜனவரியில் ஆரம்பமான இந்தப் பேச்சுக்கள் ஓகஸ்ட் மாதம் வரை 10 சுற்றுக்களுக்கு நீண்டன. எனினும் அவற்றில் காணப்பட்ட இணக்கங்கள் நடைமுறைப்படுத்தப்படாமை மற்றும் அரசியல் தீர்வு தொடர்பில் அரசு தீர்க்கமான பதிலைத் தராமை போன்ற காரணங்களால் தொடர்ந்து பேச்சுக்களை நடத்துவதற்கு கூட்டமைப்பு மறுத்துவிட்டது.

அதன் பின்னர், 40 நாள்கள் கடந்த நிலையில் நேற்று பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. ''கடந்த 2ஆம் திகதி ஜனாதிபதிக்கும் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தனுக்கும் இடையில் நடைபெற்ற தனிப்பட்ட சந்திப்பின் பின்னர் இன்றைய (நேற்று) பேச்சுக்கான திகதி குறிக்கப்பட்டது'' என்று அரசு - கூட்டமைப்பு இணைந்துவிட்ட அறிக்கை தெரிவித்தது.

நேற்றைய பேச்சில் இரு தரப்பினருக்கும் இடையில் அரசியல் தீர்வு குறித்த விடயங்களே முக்கியமாக ஆராயப்பட்டன என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்

பக் 27

அன்பு மழை



இலங்கை வந்துள்ள ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் நேற்று கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிறுவர் பிரிவுக்குச் சென்று பார்வையிட்டனர். அங்கு சத்திர சிகிச்சை செய்யப்பட்ட நிலையில் தங்கியுள்ள தமிழ் சிறுமி ஒருத்தியை ஆஸ்திரேலிய வீரர் வொட்சன் தூக்கி வைத்து அன்பைப் பொழிகிறார்.

## மோசடி நபர் சிக்கினார்

யாழ்ப்பாணம், செப்.17

'கவரிங்' நகைகளுக்குத் தங்கமுலாம் பூசி யாழ் நகரப் பகுதியில் உள்ள வங்கி ஒன்றில் அவற்றை அடகு வைத்து

பக் 27

# இலங்கை வழியாக தமிழகத்துக்குள் ஊடுருவுகின்றனர் பாக்.தீவிரவாதிகள்

## இந்திய உள்துறை அமைச்சர் திடீர் குற்றச்சாட்டு

டில்லி, செப்.17

பாகிஸ்தான் தீவிரவாதிகள் இலங்கையின் ஊடாகத் தமிழகத்துக்குள் நுழைகிறார்கள் என்று இந்தியா குற்றம் சுமத்தியுள்ளது. உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அண்டை நாடுகளான இலங்கை, பங்களாதேஷ், நேபாளம் போன்றவற்றின் ஊடாக இந்தியாவுக்குள் பாகிஸ்தான் தீவிரவாதிகள் ஊடுருவ முயற்சிக்கின்றனர் என்றார் அவர்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-இந்தியாவுக்குள் நுழைவதற்கான வழியாக இலங்கையை தீவிரவாதிகள் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

தீவிரவாத அச்சுறுத்தல்கள் இல்லாத நாடே கிடையாது, அமெரிக்காவிலும் அச்சுறுத்தல்கள் காணப்படுகின்றன. இந்த ஆண்டில் இதுவரையில் 22 நாடுகளில் 279 தீவிரவாத சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

உலகின் முக்கியமான தீவிரவாத அமைப்புக்களில் பெரும்பான்மையானவை பாகிஸ்தானை மையமாகக் கொண்டு இயங்கி வருகின்றன - என்றார். (உ)

# தன்னாட்சி உரிமையே தமிழரின் தேவை பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் முழக்கம்

லண்டன், செப். 17

தமிழர்களுக்குத் தன்னாட்சி உரிமையை பெற்றுக்கொடுப்பதே இலங்கையில் பிரச்சினை தீர்வதற்கான ஒரே வழி என்று பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் மாலை இலங்கை மற்றும் காஷ்மீர் நிலைமைகள் தொடர்பாக சிறப்பு விவாதம் நடத்தப்பட்டது.

விவாதத்தில் உரையாற்றிய கொன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த - இல்போட் வடக்கு தொகுதி உறுப்பினர் - லீ ஸ்கொட், ''இலங்கையில் உள்ள

பக் 27

# கூட்டமைப்பு எதிர்த்தால் தெரிவுக்குழுவும் நாசம்

## சுட்டிக்காட்டுகிறார் பேரா. திஸ்ஸ விதாரண

கொழும்பு, செப். 17

நாடாளுமன்றத் தெரிவுக் குழு விவகாரத்தை ஏனைய விடயங்களைப் போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தட்டிக் கழித்துவிடக் கூடாது என்று தெரிவித்துள்ள பேராசிரியர் திஸ்ஸ விதாரண, கூட்டமைப்பு ஆதரித்தால் தான் மற்றைய கட்சிகளும் தெரிவுக் குழுவை ஏற்றுக் கொள்ளும் என்று கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் 'உதயனுக்குத்' தெரிவித்ததாவது:-

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சியாக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை

பக் 04

# சிதம்பரத்தின் குற்றச்சாட்டை அடியோடு நிராகரித்தது அரசு

கொழும்பு, செப். 17

இந்தியாவுக்குள் நுழைவதற்கு பாகிஸ்தான் தீவிரவாதிகள் இலங்கையைத் தளமாகப் பயன்படுத்த முயற்சிக்கின்றனர் என இந்தியா முன்வைத்துள்ள குற்றச்சாட்டை இலங்கை அரசு நிராகரித்துள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக் குறித்து உத்தியோகபூர்வ தகவல் எதுவும் புலனாய்வுப் பிரிவினரிடமிருந்து கிடைக்கவில்லை என்று இலங்கை அரச தரப்பினர் தெரிவித்தனர்.

இது தொடர்பாக தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஷ்மன் ஹுலுகல்ல தெரிவித்ததாவது:-

பக் 27

# அமைச்சர் டக்ளஸை கைகழுவியது அரசு

கொழும்பு, செப். 17

அமெரிக்காவின் இராஜாங்க திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான துணைச் செயலர் றொபேர்ட் ஓ பிளேக் குறித்து அமைச்சர் டக்ளஸ் வெளியிட்டது அவரது தனிப்பட்ட கருத்தே தவிர என்று அது அரசின் கருத்து அல்ல. எனக் கைவிரித்து விட்டது மஹிந்த அரசு.

அமைச்சரவைப் பேச்சாளரான

பக் 26

# நவி பிள்ளைக்கு எதிராக முறையிட அரசு முடிவு

## ஒருதலைப்பட்சமாக நடக்கிறார் எனக் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 17

இலங்கை விவகாரங்களில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் நவி பிள்ளை (நவநீதம் பிள்ளை) ஒருதலைப்பட்சமாக - தமிழர் தரப்புக்குச் சாதகமாக - நடந்துகொள்கிறார் என்று போர்க்கொடி தூக்கியிருக்கும் அரசு, இதுகுறித்து ஐக்கிய நாடுகள் சபையின் பொது செயலாளர் பான் கீ-மூனுக்கு எழுத்து மூலம் முறையிடுவது என்று தீர்மானித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக் கூட்டம் ஜெனிவாவில் நடந்தபோது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் நவி பிள்ளை, இலங்கைக்கு எதிரான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் குறித்து கூடுதல் கவனம் செலுத்தி

பக் 04

# 10 ஆண்டுகள் சிறை வாசத்தின் பின் குற்றம் ஏதுமின்றித் தமிழர் விடுதலை

கொழும்பு, செப். 17

விடுதலைப் புலிகளுக்காக ஆயுதங்கள் கடத்தினார் என்ற சந்தேகத்தில் கடந்த 10 வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழர் ஒருவர் நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பொலிஸார் இவரிடம் பெற்ற குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை இவருக்கு எதிரான சாட்சியமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்று நீதிமன்றம் கூறியுள்ளது.

அரச படையினருக்கு எதிராகத் தாக்குதல் நடத்த வெடிப் பொருள்களை எடுத்து வந்தார் என்று சந்திரகுமார் ராபர்ட் புஷ்பராஜன் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. 2000ஆம் ஆண்டு நீர் கொழும்பு பகுதியில் வைத்து இவர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பொலிஸாருக்கு இவர் வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் இவருக்கு எதிரான சாட்சியமாக வழக்கில் பயன்படுத்தப்பட்டு வந்தது.

பக் 28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com

# கொழும்புத் தபால்கள் 24 மணி நேரத்தில் யாழ்ப்பாணத்தில் விநியோகிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப்.17

நாடுமுழுவதும் இடப்படும் தபால்களை இருபத்தி நான்கு மணி நேரத்தில் உரிய முகவரியில் விநியோகிக்கி அஞ்சல் திணைக்களம் தயாராகி வருகிறது.

''இதன்மூலம் இதுவரை தபால்களை விநியோகிப்பதில் ஏற்பட்டு வந்த தாமதங்கள் தவிர்க்கப்படும்'' என்று யாழ். மாவட்ட பிரதேச அஞ்சல் அத்தியட்சகர எஸ். ஜெபரட்ணம் தெரிவித்தார்.

கொழும்பு அஞ்சல் திணைக்கள தலைமையகத்துக்கு கிடைக்கப் பெறும் தபால்கள் அனைத்தும் 24 மணி நேரத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் விநியோகிக்கக் கூடியதான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாண அஞ்சல் திணைக்களத்துக்கு திணைக்கள வாகனம் மூலம் தபால்கள் எடுத்து வரப்படவுள்ளன.

கொழும்பிலிருந்து குருநாகல், குருநாகலிலிருந்து அநுராதபுரம், அநுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் என்று அஞ்சல் வாகனத்தின் மூலம் தபால்கள் எடுத்துவரப்படவுள்ளன.

நாளாந்தம் கொழும்பிலிருந்து இரவு 7 மணிக்கு யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படும் தபால்கள் அடுத்த நாள் முற்பகல் 11 மணிக்கு முன்னதாக உரிய முகவரிக்கு விநியோகிக்கப்பட்டு விடும்.

இதே போன்றுதான் யாழ்ப்பாணத்தில் கிடைக்கப்பெறும் தபால்கள் கொழும்புக்கு எடுத்துச் சென்று 24 மணி நேரத்தில் விநியோகிக்க ஏற்பாடாகி வருகிறது.

இதுவரைகாலமும் ரயில் மூலம் எடுத்து வரப்படும் தபால்கள், வவுனியாவில் இருந்து திணைக்கள வாகனம் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன. அதே போன்று கொழும்புக்கும் தபால்கள் அனுப்பப்பட்டன. இந்த நடைமுறையும் தாமதத்துக்குக் காரணமாயிற்று - என்றார். (ஒ-14)




அனைத்து மாவட்டங்களிலும் இடி மின்னலுடன் கூடிய வானிலை நிலவக் கூடிய சாத்தியம்.

# இலங்கை வரும் இராஜதந்திரிகள் சந்திப்புகளுக்கு அரசு கட்டுப்பாடு

## புதிய விதிமுறைகள் விரைவில் அறிவிப்பு

இலங்கைக்கு வருகைதரும் வெளிநாட்டு இராஜதந்திரிகளைச் சந்திப்பது தொடர்பில் புதிய விதிமுறைகள் அறிமுகம் செய்யப்பட உள்ளன. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைய இந்த புதிய விதிமுறைகள் அறிமுகம் செய்யப்படவுள்ளன.

இலங்கைக்கு வரும் இராஜதந்திரிகள் தற்போது யாரை வேண்டுமானாலும் சந்திக்க முடியும் என்ற நிலைமையே காணப்படுகின்றது. இந்த நடைமுறையில் மாற்றம் ஏற்படுத்தப்பட உள்ளது. குறிப்பாக யார் யாரைச் சந்திக்க முடியும் என்பது குறித்த பட்டியல் ஒன்று தயாரிக்கப்படவுள்ளதாகவும் பதில் அமைச்சரவைப் பேச்சாளர் லக்ஸ்மன் யாப்பா அபேயவர் தன தெரிவித்துள்ளார்.

அரசியல்வாதிகள் மற்றும் அரச உயர் அதிகாரிகளின் பதவிப் பட்டியல் ஒன்று தயாரிக்கப்படவுள்ளது.

இந்த பதவிகளை வகிக்கும் நபர்கள் மட்டுமே வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் பேச்சு நடத்த முடியும்.

இராஜதந்திரிகள் கடை நிலை ஊழியர்களுடன் பேச்சு நடத்துவதனால் நாட்டின் நன்மதிப்புக்கு களங்கம் ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுவதாக ஜனாதிபதி அமைச்சரவைக் கூட்டத்தில் தெளிவுபடுத்தியதாக அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா தெரிவித்துள்ளார்.

## விளையாட்டுப் பயிற்சி

யாழ். வலய பாடசாலைகளில் பயிலும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விளையாட்டுப் பயிற்சி இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வலயக் கல்வி அலுவலகத்துக்கு அருகில் உள்ள நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையில் இடம் பெறவுள்ளது. விசேட தேவையுடையயோர்களுக்கான விளையாட்டு விழாவினை முன்னிட்டு நடத்தப்படும் இந்தப் பயிற்சியில் விசேட தேவையுடைய மாணவர்களைக் கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ-313)

CSE
COLOMBO STOCK EXCHANGE
பங்குப்பரிவர்த்தனை யாழ்ப்பாணம்.
398/1, ஆஸ்பத்திரி வீதி. 2221455.
புரட்டாதி 16 2011
பங்குச் சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6,870.92↑
மிலங்கா(MPI) 6,209.24↑
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 1,800.08Mn
பங்குகளின் அளவு(No.) 154.70Mn
வியாபாரம்(No.) 19,190
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
செலான் மேச்சன்(w15) 1.40
சதோசா மோட்டர் 412.00
மல்ரி பைனான்ஸ் 54.70
ஈஸ்வெஸ் 41.00
றிக்னிஸ் 218.00
குறைவு(Top 5 losers) - விலை Rs.
புளு டைமன் 9.70
புளு டைமன்(x) 4.40
கபுகஸ் தென்ன 61.50
கென்பீ(ரி)பி(f) ஹொட்டல் 210.00
சிலோன் கொன்பிரல்(x) 75.00
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# குடாநாட்டில் பொலிஸ் பாதுகாப்பு இரவு நேரத்தில் அதிகரிப்பு

## மர்ம மனிதனின் நடவடிக்கை அடுத்து

யாழ்ப்பாணம், செப். 17

குடாநாட்டில் மர்ம மனிதனின் நடமாட்டத்தினால் பொது மக்கள் பெரும் அச்ச மடைந்துள்ள நிலையில், பொலிஸாரின் ரோந்து நடவடிக்கைகள் இரவு நேரத்தில் பரவலாக அதிகரிக்கப்பட்டுள்ளன.

கடந்த சில நாள்களாக குடாநாட்டில் பல பகுதிகளிலும் மர்ம மனிதன் எனக் கூறி பொது மக்கள் மிரட்டப்பட்டதால் பலத்த அச்ச உணர்வுடன் தமது இரவுப் பொழுதை கழித்து வருகிறார்கள். இது குறித்து யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளினால் பொது மக்களிடையே கூட்டங்கள் நடத்தப்பட்டு அவர்களை அச்சம் கொள்ளவேண்டாம் என்று அறிவுறுத்தி இருந்தனர்.

இந்தநிலையில் தற்போது குறிப்பிட்ட மர்ம மனிதனின் நடமாட்டம் அதிகம் காணப்பட்ட பகுதிகள் என்று பொது மக்களினால் தெரிவிக்கப்பட்ட சங்கானை, உடுவில் உட்பட ஏனைய பகுதிகளிலும் இரவு நேர பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. (ஒ-86)

# சாவகச்சேரி வைத்தியசாலைக்கு மற்றொரு அம்புலன்ஸ் வழங்குக

## நகர சபைக் கூட்டத்தில் தீர்மானம்

தென்மராட்சி, செப்.17

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களின் நலம்கருதி மேலும் ஒரு அம்புலன்ஸ் வழங்குமாறு மாகாண சுகாதார திணைக்களத்தினரை சாவகச்சேரி நகர சபையினர் கோரியுள்ளனர்.

சாவகச்சேரி வைத்தியசாலை நோயாளர்களை யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லவும் 110 இலக்க அவசர அழைப்புகளுக்கு சென்று நோயாளர்களை ஏற்றி வைத்தியசாலைக்கு கொண்டு வருவதற்குமென இரு அம்புலன்ஸ்கள் சேவையில் இருந்தன.

இவற்றில் ஒன்றை சுகாதாரத் திணைக்களத்தினர் அண்மையில் மீளப்பெற்று நெடுந்தீவு வைத்தியசாலைக்கு வழங்கியுள்ளனர். இதனால் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதன் காரணமாக மீளப் பெறப்பட்ட அம்புலன்ஸ்க்கு மாற்றீடாக புதிய அம்புலன்ஸ் ஒன்றை சாவகச்சேரிக்கு வழங்குமாறு உரிய அதிகாரிகளை கோரும் தீர்மானம் சாவகச்சேரி நகர சபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (ஒ-207)

# நிகழ்வுகள்

**கருத்தரங்கு**

சர்வதேச சமாதான தினத்தை ஒட்டிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30மணிக்கு செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் நடைபெறும். யாழ். சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகம் ஏற்பாடு செய்துள்ள 'சமாதானமும் நல்லி ணக்கமும்' என்ற கருப்பொருளில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெறும். (உ-160)

* * *

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில்' வேலையில்லாப் பிரச்சினையும் அதிகரித்துவரும் மனஉளைச்சலும்'எனும் தலைப்பிலான கருத்துப்பகிர்வு நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல.23,ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தில் இடம்பெறவுள்ளது.யூனியன் அஷ்யூரன்சின் வட மாகாண மனிதவள முகாமையாளர் ம.விஜேந்திரன் கருத்தரங்கை நெறிப்படுத்துவார். (உ-313)

**பாடசாலை பரிசளிப்பு விழா**

புத்தூர், வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று காலை 9.30ம மணிக்கு பாடசாலை மண்டபத்தில், பாடசாலை அதிபர் ஜே.ஏ. தவநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணக் கல்வி வலயம் பதில் வலயக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். (ஒ-5)

**தீவக அதிபர்களுக்கான கூட்டம்**

தீவக வலயக் கல்வி அலுவலகத்தின் பிரிவுக்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு தீவக வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கூட்டத்துக்கு வரும் அதிபர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேற்று மீளாய்வு, சி.எவ்.எஸ். பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட ரூபா ஒரு லட்சத்துக்கான வேலைத் திட்ட விவரம் மற்றும் வேலை முன்னேற்ற அறிக்கை, சி.எவ்.எஸ். கூட்டங்களுக்கான கொடுப்பனவு [illegible] மேற்கொள்ள வேண்டிய சிறந்த வேலைகள் தொடர்பான விவரங்கள் தங்கள் பாடசாலையில் இருந்து நல்லாசிரியர் தெரிவுக்கு சிபாரிசு செய்யப்பட்ட ஆசிரியர் விவரம் என்பவற்றைத் தனித்தனியாகத் தயாரித்துக் கொண்டு வருமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (உ-319)

**150 ஆவது ஆண்டு நிறைவு விழா**

நவாலி அமெரிக்கன் சிலோன் மிஷனின் 150ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறும். வண. ஏ.பி. தேவதாஸ் தலைமையில் நிகழ்வில் பிரதம அதிதியாக அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை தலைவர் வணக்கத்திற்குரிய அன்னப்பா ஜெயக்குமாரன் அவரது பாரியார் இந்திராணி ஜெயக்குமார் ஆகியோர் கலந்துகொள்வர். சிறப்பு விருந்தினர்களாக அமெரிக்கன் சிலோன் மிஷன் யாழ். பிராந்தியத் தலைவர் வண. வி.ராஜ்குமார் அவரது பாரியார் திருமதி ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொள்வர். (உ-302)

**அரசியல் கருத்தரங்கு**

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியும் இணைந்து நடத்தும் அரசியல் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு காங்கிரஸ் இல்லம், இல-43 மூன்றாம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது. இந்தக் கருத்தரங்கில் சமகால அரசியல் தொடர்பான விவரங்கள் கலந்துரையாடப்படவுள்ளதால் அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-313)

**அழகியல் பாட செயலமர்வு**

யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் புதிதாக நியமனம் பெற்ற அழகியல் பாட (சித்திரம், சங்கீதம், நடனம், நாடகம்) ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று காலை 8.30 மணிக்கு ஆசிரியர் வள நிலையத்தில் (இந்து மகளிர் கல்லூரி) நடத்தப்பட உள்ளது. அழகியல் பாட ஆசிரியர்களை தவறாது சமுகம் தருமாறு யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

**சுய தொழில் கருத்தரங்கு**

இலங்கை வங்கி, புனர்வாழ்வு அமைச்சு ஆகியன இணைந்து போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்துள்ள சுய தொழில் வேலை வாய்ப்புக்கான ஆலோசனைக் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 9 முதல் மாலை 4 மணி வரை கிளிநொச்சி தர்மபுரம் மகா வித்தியாலயத்திலும், நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை பளை மத்திய கல்லூரியிலும் நடைபெற உள்ளது. (உ.313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருத்தித்துறையில் வைத்து அறுவரால் வானில்

# கடத்திச் செல்லப்பட்ட முன்னாள் போராளி மயங்கிய நிலையில் கிளிநொச்சியில் மீட்பு

அங்கு சிகிச்சைபெற்ற அவர் தற்போது யாழ். ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், செப்.17

முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் இனந் தெரியாத 6 பேரினால் இந்த மாதம் 8ஆம் திகதி கடத்திச் செல்லப்பட்டு மயங்கிய நிலையில் மறுநாள் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்தார். அங்கு சிகிச்சை பெற்று வந்த அவர் மேலதிக சிகிச்சைகளுக்காக நேற்றுமுன்தினம் யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை செட்டித் தெருவைச் சேர்ந்த கந்தப்பு கோமிதன் (வயது - 44) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு கடத்திச் செல்லப் பட்டவராவார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

இந்த மாதம் 8ஆம் திகதி குறித்த நபர் தமது வீட்டிலிருந்து பி.ப. 2 மணியளவில், யாழ். நகரிலுள்ள ஜெய்ப்பூர் நிறுவனத்துக்கு புறப்பட்டுள்ளார். நாளை தான் வருவேன் என்று கூறிவிட்டு புறப்பட்ட அவர் பருத்தித்துறை பஸ் டிப்போ நோக்கி சென்றுள்ளார்.

பருத்தித்துறை, மருதடிக்கும் - வெள்ளவாய்க்காலுக்கும் இடைப்பட்ட பகுதியில் குறித்த நபர் வானொன்றில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட் டுள்ளார். பின்னர் கிளிநொச்சி கண்டாவளை பாலத்தினுள் மறுநாள் 9ஆம் திகதி வீசப்பட்டுள்ளார். அந்தப் பகுதி இராணுவத்தினர் அன்றைய தினமே கிளிநொச்சி வைத்தியசாலையில் கோமிதன் என்ற அந்தக் குடும்பஸ்தரை அனுமதித்துள்ளனர். தற்போது மேலதிக சிகிச்சைகளுக்காக அவர் யாழ். போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

கோமிதன் கிளிநொச்சி வைத்தியசாலையில் அளித்த வாக்கு மூலத்தில்; பருத்தித்துறை மருதடிக்கும் வெள்ளவாய்க்காலுக்கு மிடையில் என்னை வானொன்றில் பலவந்தமாக இழுத்து ஏற்றினர். வானில் 6 பேர் வரை இருந்தனர். அவர்கள் எனக்கு சோடா போன்ற ஒன்றை குடிக்குமாறு பலவந்தமாகத் தந்தனர். அதைக் குடித்தபொழுது கசக்கவே துப்பினேன். பின்னர் அவர்கள் வலுக்கட்டாயமாக எனக்குப் பருக்கினர். அதனை விருப்பமின்றி அருந்தினேன்.

அதன் பின்னர் நடந்தது எனக்குத் தெரியாது. பின்பு சேற்றுப் பகுதியில் இருப்பதை போன்று நான் உணர்ந்தேன். பின்னர் மெல்லமெல்ல தவழ்ந்து வீதிக் கரையை அடைந்தேன். பின்பு என்னை இராணுவத்தினர் வைத்தியசாலைக்குக் கொண்டு வந்து சேர்ந்தனர் - என்றார்.

கோமிதனின் சொந்த இடம் மட்டக்களப்பு, களுவாஞ்சிக் குடி. கிளிநொச்சி வைத்தியசாலையினால் மட்டக்களப்பிலுள்ள அவரது உறவினர்களுக்கு தகவல் கொடுக்கப்பட்டு பின்னர் வரமராட்சியிலுள்ள உறவினர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது. கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த நபர் தற்போது மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இவர் தற்போது சுவாச செயலிழப்பினால் பாதிக்கப்பட்டிருப்பதாகவைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வருடம்மே மாதமே இவர் தடுப்பிலிருந்து விடுதலை யானார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-15)




# புதிய ஊடகவியலாளர் அமைப்பு உதயம்

## தொடக்க நிகழ்வும் நிர்வாகக் குழுத் தெரிவும்

கடந்த 21.08.2011 ஆம் திகதி யாழ் பாடி விருந்தினர் விடுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் ஒன்று கூடலின்போது ஏகமனதாக எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி,

**18.09.2011 ஞாயிற்றுக்கிழமை**

**காலை 10 மணிக்கு**

**யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில்**

ஊடகவியலாளர்களின் புதிய அமைப்பின் தொடக்க நிகழ்வும் நிர்வாகக் குழுத் தெரிவும் நடைபெறும். ஊடகவியலாளர்கள், ஊடக மாணவர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஏற்பாட்டுக் குழுவினர்


நுகர்வோர் பாதுகாப்பு விதிகளை மீறிய

# சாவகச்சேரி வர்த்தகர்களுக்கு 55 ஆயிரம் ரூபா அபராதம்

தென்மராட்சி, செப்.17

நுகர்வோர் பாதுகாப்பு விதிமுறைகளை மீறிய 11 வர்த்தகர்களுக்கு நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் 55 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட செயலக நுகர்வோர் பாதுகாப்பு புலனாய்வு உத்தியோகத்தரால் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 11 வர்த்தகர்களுக்கு எதிராக நுகர்வோர் பாதுகாப்பு விதிமுறைகளை மீறி பொருள்கள் விற்பனை செய்தது தொடர்பாக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

வழக்குகளை தனித்தனியாக விசாரித்த நீதிவான் மா. கணேசராஜா வர்த்தகர்கள் தமது குற்றங்களை ஒப்புக்கொண்டதையடுத்து தலா 5 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் தலா 2 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார்.

விலைப்பட்டியல் வைக்கப்படாமை, விற்பனை விலையை விட கூடுதல் விலைக்கு பொருள்கள் விற்பனவு செய்தமை, காலாவதியான பொருள்கள் விற்பனை செய்தமை, போன்றவை தொடர்பாக வர்த்தகர்கள் மீது வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. (ஒ-207)

# புதிய ஊடகவியலாளர் அமைப்பு யாழ்ப்பாணத்தில் நாளை உதயம்

யாழ்ப்பாணம், செப்.17

புதிய ஊடகவியலாளர் அமைப்பு ஒன்றை உருவாக்கு வதற்கான ஆரம்ப நிகழ்வும் நிர்வாகக் குழுத்தெரிவும் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

குடாநாட்டில் ஊடகவியலாளர்கள் மீது தொடர்ந்து கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகளை அடுத்து சுதந்திரமான ஊடகவியலாளர் அமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான தேவை உணரப்பட்டது. இதனை அடுத்தே புதிய ஊடகவியலாளர் அமைப்பு ஒன்றை உருவாக்கு வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் கடந்த ஒகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி யாழ்பாடி விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பாக விரிவாக ஆராயப் பட்டது.

புதிய செயற்திறனுள்ள ஊடகவியலாளர் அமைப்பை உருவாக்குவது என்று இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர். நாளை இடம் பெறும் நிர்வாகக்குழுத் தெரிவில் குடாநாட்டு ஊடகவியலாளர்களையும், ஊடக மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறும் ஏற்பாட்டுக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர். (த-14)

# வீடுகளுக்கு கல்லெறி அச்சத்தில் மக்கள்

நவாலி, செப்.17

ஆனைக்கோட்டை, சோம சுந்தரம் வீதிப் பகுதியிலுள்ள சில வீடுகளுக்கு கடந்த இரு நாள்களாக இரவு வேளையில் இனந்தெரியா தோர்கல்லெறிவதால் மக்கள் அச்சத்துடன் இரவுப் பொழுதைக் கழிப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

கடந்த செவ்வாய் இரவு 10 மணியளவில் சில வீடுகளுக்கும், புதன் இரவு 8 மணியளவில் மேலும் சில வீடுகளுக்கும் கற்கள் வீசப்பட்டுள்ளன.

இதில் ஒருவரின் வீட்டின் ஓடு உடைந்து பெரிய துவாரமாக உள்ளதை காண முடிகிறது. இதனால் இப்பகுதியைச் சேர்ந்தவர்கள் இரவில் நீண்ட நேரம் அச்சத்துடன் விழித்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (த-100)

# திகதி நீடிப்பு

பருத்தித்துறை, சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றங்களில் பறிமுதல் செய்யப்பட்டதும் மற்றும் உரிமை கோரப்படாத மோட்டார் வாகனங்களை விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்களை ஏற்றுக் கொள்ளும் நாள் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட வாகனங்களை அந்தந்த நீதிமன்றங்களில் அலுவலக நாள்களில் பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிட முடியும். (ஒ)


## வடமராட்சி மக்களின் நலன்கருதி..

வடமராட்சி மக்களின் நலன் கருதி **உதயனின் கிளைக் காரியாலயம்** நெல்லியடி **HNB** வங்கிக்கு அருகில் உள்ள மேல்மாடியில் இயங்கி வருகின்றது என்பதை எமது வாசகர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*காலை 8.30 மணியில் இருந்து மாலை 6 மணிவரை உங்கள் தேவைகளை நிறைவேற்ற நாம் காத்திருக்கின்றோம்.*

பொது முகாமையாளர் :
உதயன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ். வண்ணை வேங்கடேச வரத ராஜப் பெருமாள் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங் கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 5 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக் கிழமை காலை 9 மணிக்குத் தீர்த்தத்திரு விழாவும் இடம்பெறும்.

இடம்பெறும் திருவிழாக்களில் காலை 9 மணிக்கு சந்திப்பூசையும், காலை 9.30 மணிக்கு ஸ்தம்பபூசையும், முற்பகல் 10.15 மணிக்கு வசந்த மண்டபப் பூசை யும், மாலை 4.15 மணிக்கு சாய ரட்சைப் பூசையும் மாலை 4.30 மணிக்கு இரண் டாம் காலப்பூசையும் மாலை 5 மணிக்கு ஸ்தம்ப பூசையும், மாலை 6 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம்பெறும்.(த-313)

* * *

யாழ். கன்னாதிட்டி காளியம்பாள் ஆலயத்தின் கேதார கௌரிவிரதம் எதிர் வரும் ஒக்ரோபர் மாதம் ஆறாம் திகதி வியாழக்கிழமை முதல் ஆரம்பமாகி ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி புதன்கிழமை வரை இடம்பெற வுள்ளது.

விரத ஆரம்பத் தில் இருந்து எதிர் வரும் ஒக்ரோபர் மாதம் 11 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை வரை முற் பகல் 10 மணி வரை சிவலிங்க பூசை இடம்பெறு வதுடன் அத னைத் தொடர்ந்து பிற்பகல் 3.30 மணி வரை பூசை கள் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து விரத பூர்த்தி தினமாக ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி புதன் கிழமை காலை 6.30 மணிக்கு சிறப்பு உருத்திரா பிசேசமும், சிவலிங்கப் பெருமானுக்கு சோடசஉபசாரபூசை களும், வில்வ அர்ச்சனையும் காப்புக் கட்டும் நிகழ்வும் இடம் பெறும். (ம-313)

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி

எமது நிறுவனத்தில் பணிபுரியும் சக ஊழியர்
பி.சர்வானந்தன் அவர்களின் தந்தை
அமரர் பாவிலுப்பிள்ளை பேதுருப்பிள்ளையின்
நித்திய இளைப்பாற்றுக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
தலைவர், நிர்வாகிகள், ஊழியர்கள்
யா.மா.க.தொ.கூ.ச.சமாசங்களின்
சம்மேளனம்.

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தசாமி காமாட்சியம்மா (யோகம்மா)



17/18, பண்டாரக்குளம் மேற்கு,நல்லூர் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி காமாட்சியம்மா (15.09.2011) வியாழக்கிழமை காலமாகி விட் டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமியின் மனைவியும், தங்கம்மா (சின்னக்கிளி) ருக்கு மணி (வெள்ளையம்மா) துரைராஜா (ராஜன்) உத்தமிப் பிள்ளை (ராசம்),காலஞ்சென்ற சரஸ் வதி (சரசு) மற்றும் தவபாலன் (தவபாலு) ஆகி யோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம், சர்வேஸ்வரி மற்றும் தர்மராஜா (பாதுகாப்பு உத்தியோகத்தர் - யாழ். பல்கலைக்கழகம்), நகுலேஸ்வரி (கிளி), காலஞ்சென்றவர்களான சுகுணராஜா (சுகுணன்), வரதராஜா மற்றும் சற்குணேஸ்வரி (தேவி -சுவிஸ்) பாக்கியராஜா (விஜயன்),குகராஜா (குகன் - லண்டன்) ஆகி யோரின் அன்புமிகு தாயும், வள்ளிநாயகி (ராணி), பரமலிங்கம் (தேவா -கொக்குவில்), செல்வகாந்தன் (செல்வம் -சுவிஸ்) லோகேஸ்வரி (சசி),யசோதா (யசோ) ஆகியோரின் பாசமிகு மாமி யும், நீபன், நர்த்தனன்,மகிந்தன், மாதுரி, காலஞ்சென்ற வேணு மற் றும் மயூரி, மதுரசன்,சாருஜன், ஆதிசன், நதீபன் ஆகியோரின் பேர்த் தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.09.2011) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல, 17/18, பண்டாரக்குளம் மேற்கு,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்: மகன்மார்.
க.தர்மராஜா[தருமண்ணை -நல்லூர்],
க.பாக்கியராஜா [விஜயன் -நல்லூர்]

## வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பம் ஒன்றுக்கு திருநெல்வேலி, பிறவுண் வீதி, நல்லூர், பட்டினத்தை அண்மித்த பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்புக்கு: 0779955588

## ஆசிரியர் தேவை

07/10 வயதுப்பிள்ளைகளுக்கு வீட்டில் மாலை நேரம் ஆங் கிலம், கணினி பாடங்கள் கற்பிப்பதற்கு ஆண் அல்லது பெண் ஆசிரியர் தேவை. (வல்வெட்டித்துறை நகரத் துக்குள்)

தொடர்பு: தொ.பே.:0757621331

## தவறிவிட்டது

அளவெட்டி மேற்கு, முருங்கயப்புலம் என்னும் முகவரியை உடைய வீ.சிவகுமார் என்பவரது தேசிய அடையாள அட்டை (740152335V) சுன் னாகத்துக்கும் அளவெட்டிக்கும் இடையில் தவறி விட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள்,

0779320114 தொடர்பு கொள்ளவும்.

## மணமகன் தேவை

யாழ்.இந்து உயர் கௌரவ குடும்பம், 1975, உத்தரட்டாதி, மீனராசி (சைவ போசனம்) 20 கிரகபாவம், 5'5'' மாநிறம் B.Sc. SLAS, MA,Asst. Divisional Secretary (AGA) 1979 திருவோணம், மகரராசி 70½ கிரகபாவம் 5'1'' BBA (HON) M.Com, HNDA அரச கணக்காளர் மணப் பெண் களுக்கு தகுந்த பட்டதாரி அரச பணிபுரியும் மணமகன் தேவை. அணுகவும்:- Shivaalaya International Marriage Bureau, Henady Lane, Ramalingam Road, Thirunevely, Jaffna T.P. 0750741451, 0215681126

## தொழில் துறை சார் கல்வியின் புதிய பிரிவுகள் ஆரம்பம்

* Spoken English (Week days & Weekend Classes) Fee - 5000/=

BRITISH COUNCIL
* IELTS * CAE
* PET * CPE
* KET * TKT
* FCE

தமிழ், ஆங்கில மொழி மூலம்

scholarship

* CBF - Certificate in Banking
* DBF - Diploma in Banking
(தமிழ், ஆங்கில மொழி மூலம்)

A/L English, A/L Commerce & Maths பிரிவுகளும் ஆரம்பம். (தமிழ்,ஆங்கில மொழி மூலம்)

Free Registration for all Subjects on or Before 18.09.2011

All our Courses are conducted by lecturers with several years of teaching and industrial experience.

spectra skills

E- Mail :jaffna@spectraskills.com
Web:www.spectraskills.com

No. 15, Stanley road,
(2nd floor- People's Bank) Jaffna.
tel: 021 222 1422 & 1423

## நவி பிள்ளைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தார். இது அரசுக்குக் கடும் அதி ருப்தியை ஏற்படுத்தி இருக்கிறது.

ஐ.நா. பொதுச் செயலாளரால் மனித உரிமைகள் சபைக்கு நிபுணர் குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட இருந்தமை குறித்து, அதற்கு முன்னரே சபையின் உறுப்பு நாடுகள் பலவற்றுடன் ஆணை யர் நவி பிள்ளை, இலங்கைக்கு அறி விக்காமல் கலந்துரையாடியமை மற்றும் இலங்கையில் பயங்கரவாத தடைச்சட் டம் நீக்கப்படவேண்டுமென அழுத்தம் கொடுத்தமை போன்ற விடயங்கள் அவர் மீது அரசுக்கு கடும் எரிச்சலை ஏற்படுத்தி உள்ளது.

இறையாண்மை கொண்ட நாடொன் றின் மீது ஐ.நா. ஆணையர் ஒருவர் எப் படி இவ்வாறு அதிகாரத்துடன் நடந்து கொள்ளலாம் என்று கேட்கும் இலங்கை அரசு, இதுபற்றி ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூனுக்கு எழுத்து மூலம் முறையிடுவது என்று முடிவு செய் துள்ளது.

இதுகுறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூத்த அமைச்சர்களுடன் தீவிரமாக ஆலோசனை நடத்தி வரு கிறார்.

(உ-சி)

## கூட்டமைப்பு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைக்கும் நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன. நாடாளுமன்றத் தெரிவுக்குழு விடயம் தொடர்பாக அனைத்துக் கட்சிகளுக்கும் தெளிவு படுத்தியுள்ளோம். இந்த யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்ற எதிர்க்கட்சிகளுடனும் பேச்சு நடத்தி னோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆத ரவு தெரிவிக்கும் பட்சத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஆதரவு தெரிவிக்கும் என அக்கட்சி தெரிவித்தது. எனவே, தெரிவுக்குழு விடயத்தை ஏனைய விடயங்களைப்போன்று புறந்தள்ளி விடாமல் கருத்துடன் சிந்தித்துத் தீர்மா னம் எடுக்குமாறு தமிழ்த் தேசியக் கூட் டமைப்பைக் கோருகிறேன்.

அனைத்துக் கட்சிகளுக்கும் இந்த விடயம் தொடர்பாக விளக்கமளித் துள்ளேன். இதற்கு அடுத்து என்னால் ஒன்றும் செய்யமுடியாது. ஜனாதிபதி அடுத்தகட்ட முடிவை எடுப்பார் - என்றார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு காலத்தை வீணடிக்கும் செயல் என தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. என்பன தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நாடாமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கத் தத்தமது கட்சி சார்பான உறுப்பினர்களின் விவ ரங்களைத் தமக்கு அனுப்பி வைக்கு மாறு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ சகல அரசியல் கட்சிகளையும் கோரியுள்ளார் என்று ஊடக மற்றும் செய்தித்துறைப் பிரதி அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபே வர்த்தனா தெரிவித்துள்ளார். (உ-சி)

## காணி கட்டடம் விற்பனைக்கு

யாழ்.பொன்னாலை பிரதான வீதியில் மருதடி விநாயகர் ஆலயத்துக்கு அரு கில் அமைந்துள்ள மானிப்பாய், கோயில்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு சொந்தமான காணி மூன்று துண்டுகளாக பிரிக்கப்பட்டு கூறுவிலை மூலம் விற்பனைக்கு உண்டு. காணித் துண்டுகளின் விவரம் வருமாறு:

### காணித் துண்டு A

யாழ்.பொன்னாலை வீதி முகப்பில் 3 பரப்பு 6 குழி அளவுடையது. 60 அடி நீளமும் 25 அடி அகலமும் கொண்ட மாடிக் கட்டடத்துடன் 50 அடி நீளமும் 22 அடி அகலமும் கொண்ட வாகனத்தரிப்பிடமும் உடைய காணித்துண்டு.

### காணித் துண்டு B

யாழ்.பொன்னாலை வீதிக்கு வழிப்பாதை உடையதும் கட்டுக்கிணற்றுடன் 7 பரப்பு 11.4 குழி அளவுடைய காணித் துண்டில் 100 அடி நீளமும் 70 அடி அகலமும் உடைய கட்டடமும் 51 அடி நீளமும் 41 அடி அகலமும் உடைய கட்டடம் அமைந்துள்ள காணித்துண்டு.

### காணித் துண்டு C

யாழ்.பொன்னாலை வீதிக்கு வழிப்பாதையுடன் 3 பரப்பு காணித்துண்டு வான் பயிர்களுடன் உள்ள காணித்துண்டு.

மேற்படி 03 காணித் துண்டுகளையும் அலுவலக நாள்களில் 9 மணிதொடக்கம் 5 மணிவரை மானிப்பாய் கோயில்பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் தொடர்புகொண்டு பார்வையிடமுடியும்.

மேற்படி காணித்துண்டுகளை கொள்வனவு செய்ய விரும்புவோர் அதற்கான தங்களது கூறுவிலைகளை குறிப்பிட்டுத் தெளிவாக தங்களது பெயர் முகவரியுடன் தொலைபேசி இலக்கங்களை குறிப்பிட்டு அனுப்பி வைக்க வேண்டும்.

காணித்துண்டு கொள்வனவு செய்ய விரும்புவோர் ஒவ்வொரு துண்டுகளுக் கும் தனித்தனியாக கூறுவிலைகளை சமர்ப்பிப்பதுடன் கூறுவிலை அடங்கிய விண்ணப்பங்களின் கடித உறையில் இடது பக்க மூலையில் காணி கூறுவிலை எனக்குறிப்பிட்டு 23.09.2011 நண்பகல் 12 மணிக்கு முன் கிடைக்ககூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

அனுப்பவேண்டிய முகவரி:
பொதுமுகாமையாளர்,
மானிப்பாய் கோயில் பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்,
பொன்னாலை வீதி, மானிப்பாய்.

*கூறுவிலைகள் கூட்டுறவு உதவி ஆணையாளரின் தலைமையில் 24.09.2011 காலை 9.30 மணிக்கு நடைபெறும் சங்க பொதுச்சபையில் பரிசீலிக்கப்பட்டு கூட்டுறவு ஆணையாளரின் அனுமதி பெற்று பொதுச்சபையின் அங்கீகாரத்துடன் விற்பனைக்கு அனுமதிக்கப்படும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தெளிவாகி வரும் தேற்றம்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கென அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நடைபெற்று முறிந்துபோன பேச்சுவார்த்தை ஆறு வாரங்களின் பின்னர் மீண்டும் நேற்றுமாலை ஆரம்பமானது. பேச்சுவார்தையில் என்னென்ன விடயங்கள் ஆராயப்பட்டன, ஆரம்பம் எவ்வாறு அமைந்தது, முடிவு எவ்வாறு இருந்தது என்பன குறித்த விவரங்கள் இப்பத்தி எழுதப்படும் வரை கிடைக்கவில்லை, வெளியிடப்படவில்லை.

இவ்வருட ஆரம்பத்தில் - ஜனவரியில் - ஆரம்பமான பேச்சுவார்த்தை, கடந்த ஒகஸ்ட் மாதம் நான்காம் திகதியுடன் முறிந்து போனமை தெரிந்ததே. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த, மிக முக்கியம் எனக் கருதப்படும் அர்த்தம் உள்ள அதிகாரப் பகிர்வுக்கான மூன்று பிரதான அம்சங்களைப் பரிசீலனைக்கு எடுக்காமல், அரசு விட்டேத்தியாக, காலத்தை வாங்கும் உத்தியைக் கைக்கொண்டு வந்ததாலேயே பேச்சுக்கள் முறிந்தன.

ஆட்சி அதிகாரக் கட்டமைப்பு, மத்திய அரசுக்கும் அதிகார அலகுக்கும் இடையில் மேற்கொள்ளப்படவுள்ள பகிர்வுகள், பங்கிடுகள் மற்றும் வரி அறவீடுகள், நிதிக் கையாளுகை என்பன குறித்த அரசின் நிலைப்பாடுகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கேட்டிருந்தது. அவை சம்பந்தமாகப் பதில் அளிப்பதற்கு இரண்டு வார அவகாசமும் அளித்திருந்தது.

ஆனால் அரசு அதனைச் சட்டை செய்யவில்லை. முக்கியமான, பிரதானமான விடயங்கள் தொடர்பில் அவசரப்பட்டு முடிவு செய்ய முடியாது, அதற்கு அரசுக்கு அவகாசம் வழங்குவதற்கு நீங்கள் யார் என்ற மெத்தனத்துடன் அது குறித்து வாளாவிருந்தது.

எனினும், வெளிச் சக்திகள் வழங்கிய அழுத்தங்கள், ஆலோசனைகள், புத்திமதிகளின் பேரில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை அழைத்து ஜனாதிபதி இம்மாத ஆரம்பத்தில் நடத்திய சந்திப்பின் பிரதிபலனே நேற்றைய மீள் ஆரம்பப் பேச்சுவார்த்தை.

சிங்கள மக்களைப் போலவே, தமிழர்களும் பல நூற்றாண்டுகளாக இந்தத் தீவில் வாழ்ந்து வருகிறார்கள். பெரும்பான்மையின மக்களுக்கு உரியது போன்றே தமிழ் மக்களது சொந்த மண்ணும், கலை; கலாசாரப் பாரம்பரியங்களும் தொன்மைகளும் தனித்தன்மை கொண்டவை. அத்தகைய ஓர் அமைப்பில் தமிழர்களை ஓரங்கட்டி, அவர்களை நசுக்கி ஒடுக்கித் தமது காலுக்குள் வைத்திருப்பதை இன்றைய நவீன யுகம் ஏற்றுக்கொள்ளாது, பொருத்தமற்றது. இனவாதமும், தமிழர் மண்பறிப்பும் நீண்டு நிலைக்காது. உலக நியதியும் கால நியதியும் இதுவே என்பதனை சிற்றளவு பகுத்தறிவுடன் தானும் தெற்கின் அரசியல் தலைவர்களும் மதத் தலைவர்களும் நீதியாகவும் நிதானமாகவும் சிந்திக்கக் கூடாதா?

உலகம் சுருங்கிக் கொண்டிருக்கிறது; நாளாந்தம் மாற்றங்கள் முகிழ்த்து வருகின்றன. அவ்வாறிருக்கையில் இனச் சண்டை, மதச் சண்டையை மனங்களில் முதலீடு செய்து இலங்கை எதிர்மறை அணுகுமுறையில் ( Negative approch) சென்று பாழ்குழியில் விழவேண்டுமா, அது தேவைதானா என்று உணர்வு பூர்வமாகச் சிந்தித்துச் செயற்பட முனையலாகாதா?

இவை என்ன சித்தாந்தங்கள் என்று எண்ணுவதற்குப் பதிலாக, எள்ளி நகையாடுவதற்குப் பதிலாக மனிதாபிமானத்துடனும் மனுநீதி நிலை நின்றும் தெற்கின் அரசியல் தலைவர்கள் சிந்திக்கக் கூடாதா?

தெற்கின் அரசியல் தலைவர்கள், தமிழர்களின் பிரச்சினையை முன் வைத்து, ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் கருவியாக அதனைப் பயன்படுத்துவதில்லை என்று தமக்குள் தீர்க்கமான முடிவுக்கு வந்தால் மட்டுமே -

இப்போதைய பிரச்சினைகள் நிரந்தரமான, தீர்க்கமான முடிவுக்கு வர வழிபிறக்கும்.

அரசாங்கத்தின் தீர்வு முயற்சி, அனைத்துலகத்துக்காக அரசு புனையும் வேடம் என்று கருதுமளவுக்கு அது மந்தமடைந்து போனதாக இப்பத்தியில் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்களை நடத்திக்கொண்டிருக்கும் போதே, தெரிவுக்குழு மூலம் தீர்வு என்ற செப்படி வித்தையையும் சமாந்தரமாகக் கட்டவிழ்த்து விட்டது அரசு.

இரண்டு தோணிகளில் கால் வைத்து கடலில் விழும் போக்கை அரசு கைக்கொள்ள முயல்வதன் உள்நோக்கத்தை - மர்மத்தை - புரிந்துகொண்டால், அது இனப்பிரச்சினை விவகாரத்தை தீர்ப்பதனை ஒத்திவைக்கும், தள்ளி வைக்கும் தோரணையில் செயற்படுகிறதோ என்ற சந்தேகமும் எழுகிறது.

எப்படியோ, கூட்டமைப்பு - அரசு பேச்சுவார்த்தையின் (முந்திய) முறிவு அனைத்துலகத்தின் கண்களைத் திறந்தது என்பது உண்மையே. அதனைக் கண்டு கலங்கியே, மீண்டும் பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டிருக்கிறது என்பதே உள்ளார்ந்த உண்மை.

ஐ.நா. செயலாளர் நாயகம் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கை வெளிவந்த கையோடு அரச தரப்பு இனப்பிரச்சினைத் தீர்வைச் சற்று வேகமாக நகர்த்துவது போலக் காட்டிக்கொண்டாலும், ஏதோ ஒரு உள்நோக்கத்துடன் இழுத்தடித்ததை, தடங்கல் உண்டாக்கியதை சர்வதேச சக்திகள் புரிந்து கொள்ளாமலா இருக்கும்?

மொத்தத்தில், வெளி உலகத்தின் உந்துதல் இல்லாமல், இலங்கை அரசு தனது சொந்தத்தில், சுயத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முற்படாது என்ற தேற்றம் தெளிவாகி வருகிறது!

# இலங்கை மீதான சர்வதேச அழுத்தம் சாத்தியம் இல்லாது போய்விடவில்லை

## கொழும்பில் பிளேக் தெரிவித்த கருத்து

கொழும்பு, செப். 17

இலங்கை மீது சர்வதேச அழுத்தம் கொண்டுவருவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லாமல் போகவில்லை. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர் பான ஆணைக்குழுவின் அறிக்கைபோது மானதாகக் காணப்படாவிட்டால் சர்வதேச அழுத்தம் கொண்டுவரப்படுவது சாத்தியமே என்று அமெரிக்க தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான ராஜாங்க உதவி அமைச்சர் ரொபேர்ட் ஓபிளேக் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர்களைச் சந்தித்துப் பேசியபோது ரொபேர்ட் ஓ பிளேக் பலவிடயங்கள் பற்றியும் கருத்து வெளியிடுகையில், ஆணைக்குழுவின் அறிக்கையில் என்ன சொல்லப்படுகிறது என்பதைக் காத்திருந்துதான் பார்க்க வேண்டும் என்றார்.

அவர் மேலும் கூறியதாவது: எமது நண்பர்களை அச்சுறுத்தும் பணியில் நாம் ஈடுபட்டிருக்கவில்லை. சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறிச் செயற்பட்டவர்கள் தொடர்பாக பொறுப்புக் கூறும் நம்பகமான ஒரு செயல் முறை அவசியமாகின்றது. இது செயற்படுவதை உறுதி செய்வதற்கான ஏதாகிலும் பொறிமுறை குறித்து அழுத்தம் இருக்கவே செய்யும். அவ்வாறான அழுத்தம் தேவைப்படாமல் இருக்கும் என்றே நம்புகிறோம் என்றார்.

நல்லிணக்கக் குழுவின் அறிக்கை அடுத்த வருடம் மார்ச்சில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பதற்கு இன்னும் காலம் கனியவில்லை. இதுவும் கூட அந்த அறிக்கை மீது இலங்கை எவ்வாறு செயற்படுகின்றது என்பதைப் பொறுத்தே இருக்கும்- என்றார்.

நாட்டில் கிறீஸ் பூதம் தொடர்பான பயப்பீதிக்கு முடிவுகட்ட வேண்டும். அது பாதுகாப்பின்மைக்கு புதிய மட்டங்களை தோற்றுவித்திருக்கிறது என்று சுட்டிக்காட்டிய பிளேக் பத்திரிகையாளர்கள் தாக்கப்படும் சம்பவங்கள் குறித்து அமெரிக்கா மிகுந்த கவலை கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். பிளேக் பத்திரிகையாளர்கள் சந்திப்பின் போது வெளியிட்ட ஏனைய முக்கிய கருத்துக்கள் நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப)

# பிளேக்கிடம் அரசியல் கைதிகளின் பெற்றோர் சார்பாக மனு கையளிப்பு

யாழ்ப்பாணம், செப்.17

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் றொபேட் ஓ பிளேக்கிடமும் அரசி யல் கைதிகளின் பெற்றோர் சார்பில் மனு ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

அவசரகாலச்சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விசாரணைகள் ஏதுமின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியே அந்த மனுக் கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 12 ஆம் திகதி திருகோணமலையில் வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஊடாக இந்த மனு கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சர்வதேச சிறைக் கைதிகள் தினமான கடந்த 13 ஆம் திகதி நாட்டின் 10 மாவட்டங்களிலிருந்து ஜனாதிபதிக்கான மனுக்கள் கையளிக்கப்பட்டன.

அரசியல் கைதிகளின் பெற்றோர் மற்றும் உறவினர்களால் இந்த மனு கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-14)

# உலகத் தமிழர் பொருளாதார மாநாடு டுபாயில் 4 நாள்களுக்கு நடத்த ஏற்பாடு

டுபாய்,செப்.17

இரண்டாம் உலகத் தமிழர் பொருளாதார மாநாடு மற்றும் கண்காட்சி டுபாயில் உள்ள உலக வர்த்தக மையத்தில், ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் 4 நாள்கள் நடக்கவுள்ளன. இந்த மாநாட்டில் உலகம் முழுவதும் உள்ள தமிழர்களின் கலாசாரம் மற்றும் பொருளாதார நிலை குறித்து விவாதிக்கப்பட உள்ளது. தற்போதைய உலகத் தமிழர் நிலை, முதலீட்டு வாய்ப்புகள், தொழில்நுட்பம் ஆகியவை குறித்துப் பல நிபுணர்கள் உரையாற்றவுள்ளனர். உலகம் முழுவதிலுமிருந்து தமிழர்கள் இதில் பங்கேற்று, தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள உள்ளனர். கல்வி, வேலைவாய்ப்பு, தொழில் வாய்ப்புக்கள் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தவும், தனிநபர் மற்றும் குழுவாக ஒன்றிணைந்து சமுதாய வளர்ச்சிக்குப் பாடுபடவும் இந்த மாநாடு நடத்தப்படுகிறது.

இந்த மாநாட்டில் இந்தியா உட்படப் பல நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்கள், நீதிபதிகள், அதிகாரிகள், கல்வியாளர்கள், தொழில் அதிபர்கள் பலரும் பங்கேற்கவுள்ளனர்.

இங்கு உலகத் தமிழர்களில் பல துறைகளிலும் சேவை புரிந்தவர்களுக்கு உலகத் தமிழ் மாமணி என்ற விருது வழங்கப்பட இருக்கிறது. இந்த மாநாட்டு ஏற்பாடுகளை செய்ய மாநாட்டின் ஒருங்கிணைப்பாளர் சம்பத், டுபாயில் மாநாட்டு வரவேற்பு குழுத் தலைவரும் ஈடிஏ., குழுமத் தலைவருமான சையது சலாலுதீனைச் சந்தித்து ஆலோசனை நடத்தினார். (ம)

# நாடு முழுவதுமுள்ள ஓய்வூதியருக்கு நம்பிக்கை நிதியத்தின் நலன்கள்

யாழ்ப்பாணம், செப்.17

நாடு முழுவதும் உள்ள 4 லட்சம் ஓய்வூதியர்களுக்குத் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் நலன்கள் வழங்கப்படவுள்ளன.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தலைவர் சேனக அபயகுணசேகர இவர்களுக்கு வழங்கவுள்ள நலத்திட்டங்கள் குறித்து அறிவித்துள்ளார்.

ஓய்வூதியர் ஒருவர் 10 ஆயிரம் ரூபா வரையில் வைத்தியசாலை நலன் தொடர்பான கொடுப்பனவுகளைப் பெறமுடியும்.

நிபுணத்துவ சிகிச்சை, சத்திர சிகிச்சை, தாதியர் செலவு, மருத்துவ செலவு என்பவற்றுக்காக 30 ஆயிரம் ரூபா வரையும் கண்ணுக்கு கண்வில்லை வைப்பதற்காக 20 ஆயிரம் ரூபா வரையிலும் கொடுப்பனவுகளைப் பெறமுடியும்.

இதுவரை காலமும் அரச அலுவலர்கள் அனுபவித்து வந்த சேவையை தற்போது நாடு முழுவதும் உள்ள ஓய்வூதியர்களும் பெறவுள்ளனர்.

(ம-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரிப் பொதுச் சந்தைக்கு புதிதாக இரண்டு மாடிக் கட்டடம்

## மீன் சந்தை வேறு இடத்துக்கு

தென்மராட்சி,செப்.17
சாவகச்சேரி நகர சபையினர் மேலும் ஒரு நவீன சந்தைக் கடைத்தொகுதியை அமைக்கவுள்ளனர்.

அத்துடன் தற்போது நகர்ப் பகுதியில் காணப்படும் மீன் சந்தை, இறைச்சிக் கடைகள் போன்றவற்றைத் தணங்கிளப்பு வீதியில் உள்ள நகர சபையின் காணிக்கும் மாற்றவுள்ளனர்.

இதற்கான தீர்மானம் கடந்த 14 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டதாக சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார்.

சந்தையின் மேற்குப் பகுதியில் இரு மாடி நவீன சந்தைக் கட்டடம் முதல் கட்டமாக அமைக்கப் படவுள்ளதாகவும், அடுத்த கட்டமாக கிழக்குப் பக்கத்தில் கடைத் தொகுதிகள் அமைக்கப்படவுள்ளதாகவும் தலைவர் தெரிவித்தார்.

நகர்ப் பகுதியை அழகுபடுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் இந்தக் கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். இந்தப் பகுதியில் இயங்கி வந்த கடைத் தொகுதிகள் கடந்த 2000 ஆம் ஆண்டு யுத்த அனர்த்தங்களின் போது முழுமையாகச் சேதமடைந்து காணப்படுகின்றமை குறிப்பிட்டத்தக்கது. (த-207)

## அனுமதி பெறாத விளம்பரப் பலகைகள் அகற்றப்படும்

தென்மராட்சி,செப்.17
சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களில் நகரசபையின் அனுமதி பெறாமல் வைக்கப்பட்டுள்ள விளம்பரப் பலகைகள் அப்புறப்படுத்தப்படவுள்ளன.

வர்த்தக நிலையத்தினர் தமது வர்த்தக நிலையத்துக்குப் பொருத்தியுள்ள விளம்பரப் பலகை தவிர்ந்த ஏனைய விற்பனைப் பொருள்களின் விளம்பரப் பலகைகளே அப்புறப்படுத்தப்படவுள்ளன.

நகர சபையில் விளம்பரப் பலகை பொருத்துவதற்கான அனுமதி பெறாமல் வைக்கப்பட்டுள்ள விளம்பரப் பலகைகளே அப்புறப்படுத்தப்படவுள்ளன. இதற்கான தீர்மானம் கடந்த 14 ஆம்திகதி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதாக நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை தெரிவித்தார். (த-207)

## மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் தென்மராட்சிப் பகுதிக்குப் பயணம்

தென்மராட்சி,செப்.17
யாழ்.மாவட்ட மகளிர் அமைப்புக்களின்பிரதிநிதிகள் கடந்த 15ஆம்திகதி தென்மராட்சிப் பிரதேசத்துக்கு அழைத்துவரப் பட்டனர்.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் அனுசரணையுடன் யாழ். செயலக மகளிர் விவகாரப் பிரிவினால் பிரதேச செயலக ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகளே இவ்வாறு அழைத்து வரப்பட்டனர்.

'பெண்கள்தொடர்பாகவேலை செய்யும்நிறுவனங்களுக்கான பயணமும் அனுபவக் கற்றலும்' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாதிக்கப்படும் பெண்கள் அணுக வேண்டிய பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றம்,சட்ட உதவி நிலையம்,யாழ்.போதனா வைத்தியசாலையில் இயங்கும் பாலியல் தொடர்பான சிகிச்சைப் பிரிவு போன்ற இடங்களுக்கு இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு வருகின்றனர்.

இந்த வகையில் கடந்த 15 ஆம்திகதி சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம், சாவகச்சேரி கொடிகாமம் பொலிஸ் நிலையங்கள், யாழ்.மாவட்ட உதவி நிலையம், யாழ்.போதனா வைத்தியசாலை ஆகிய இடங்களுக்கு தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த மகளிர் அமைப்புக்களின் பிரதி நிதிகள் அழைத்து வரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-207)

# பாலியல் வல்லுறவு வழக்குகள் யாழ்.மேல் நீதி மன்றத்துக்கு

தென்மராட்சி ,செப்.17
சாவக்சேரி நீதிவான் நீதிமன்றில் நீண்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்ட இரு வழக்குகள் சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து அனுப்பப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய மேலதிக விளக்கத்துக்காக யாழ்.மேல் நீதிமன்றுக்கு பாரப்படுத்தப்பட்டன.

கடந்த 2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் திகதி 36 வயதுப் பெண்ணை அவரது விருப்பத்துக்கு மாறாக வல்லுறவுக்குட்படுத்திய சரசாலை மத்தி வாசிக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டு நடைபெற்ற வழக்கில் எதிரி கடந்த 2003 ஏப்ரல் மூன்றாம் திகதி காசுப்பிணையிலிலும் ஆள்பிணையிலும் செல்ல நீதிமன்றினால் அனுமதிக்கப்பட்டார்.

இந்த வழக்கு கடந்த 13 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது சுருக்க முறையற்ற விசாரணை மேற்கொள்ளப்பட்டு பூர்வாங்க விசாரணை முடிவுற்றுத்தப்பட்டு மேலதிக விசாரணைக்காக குறித்த வழக்கையும் அதனோடு தொடர்புடைய சான்றுப் பொருள்களையும் மேல் நீதிமன்றுக்கு பாரப்படுத்தினார் நீதிவான் மா.கணேசராஜா.

மேலும் கடந்த 2001 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7 ஆம் திகதி அல்லாரை தெற்கு மீசாலை அறுகம்புலம் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக உள்ள குளக்கட்டுக்கு அருகே இடம்பெற்ற பாலியல் வல்லுறவு தொடர்பில் கொடிகாமம் பொலிஸாரால் 2001 ஆம் ஆண்டு ஜூலை 13 ஆம் திகதி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு 11 ஆவது கஜபாகு படையணியைச்சேர்ந்த 3 இராணுவ வீரர்கள் சந்தேக நபர்களாக முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். 2001 ஜூலை 25 ஆம்திகதி நடைபெற்ற அடையாள அணி வகுப்பில் 3 சந்தேக நபருக்கு அடையாளம் காட்டப்பட்டனர்.

இந்த வழக்கு கடந்த 13 ஆம் திகதி சுருக்கு முறையற்ற விசாரணை மேற்கொள்ளப்பட்ட போது இரண்டாவது சந்தேக நபர் தொடர்ச்சியாக மன்றுக்கு சமுகம் தராதமை கவனிக்கப்பட்டு இவருக்கு எதிராகப் பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில் விசாரணை முடிவுறுத்தப்பட்டு மேலதிக விசாரணைக்காக வழக்கை யாழ். மேல் நீதிமன்றுக்கு பாரப்படுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

மேலும் பல வழக்குகளில் பிணை விண்ணப்பம் செய்வதற்குச் சட்ட உதவி இல்லாத காணரத்தால் நீண்ட காலமாக சிறையில் வாழும் நபர்களுக்குச் சட்ட உதவி ஆணைக்குழுவின் உதவியுடன் பிணை விண்ணப்பம் செய் யப்பட்டு மேல் நீதிமன்றால் பிணை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஏனைய வழக்குகளையும் விரைவாகச் சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்களைப் பெற்று விசாரணையை துரிதப்படுத்துமாறும் பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

(த-207)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கல் ஆயுதங்கள் மாயக்கையில்


யாழ்ப்பாணம், செப் 17

வடமராட்சி தம்பசிட்டி மாயக்கைப் பகுதியில் சுமார் 7லட்சம் ஆண்டுகளுக்கு முன் மனிதன் வாழ்ந்ததை உறுதிப்படுத்தும் கல்லாயுதங்கள் யாழ்.பல்கலைக் கழக பேராசிரியர் செ.கிருஸ்ண ராஜாவினால் கண்டுபிடிக்கப்பட்டுத் தொல்லியல் திணைக் களத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் தொல்லியல் திணைக்களத்தின்ஆய்வுப் பணிகள்பேராசிரியர்செ.கிருஸ்ண ராசா தலைமையில் ஆரம்பிக்கப் படவுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

வடமராட்சியில் உள்ள தம்பசிட்டி மாயக்கைப் பகுதியில் வரலாற்றுக் காலத்தையும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தையும் உடைய தொல்லியல் எச்சங்கள் முதன் முதலாக யாழ். பல்லைக் கழக வரலாற்றுப் பேராசிரியர் செ.கிருஸ்ணராஜாவினால் கண்டுபிடிக்கப்பட்டன. 1990 ஆம் ஆண்டு முதல் அந்தப் பகுதி பேராசிரியரால் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட போது வரலாற்றுக்கு முற்பட்ட கால கற்கருவிகளை அவர் கண்டு பிடித்துள்ளார். இது அவரின் கட்டுரை மூலம் வெளிப்படுத்தப்பட்ட போதிலும் அது குறித்துப்பெரிதாக அக்கறை காட்டப்பட வில்லை.



இந்த நிலையில் அண்மையில் கந்தரோடையில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றுக்காக இலங்கைத் தொல்லியல் திணைக் களத்தின் பதில் பணிப்பாளர் கலாநிதி நிமல் பெரேரா யாழ்ப்பாணம் வந்திருந்தார். அதன் போது அவருக்கு பேராசிரியர் கிருஸ்ணராஜாவால் கண்டு பிடிக்கப்பட்ட எச்சங்கள் காட்டப்பட்டன. இதனை அவர் பார்வையிட்ட பின் அவை தொல்லியல் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டன.

இதை ஆய்வுக்கு உட்படுத்திய தொல்லியல் திணைக்கள உயரதிகாரி கலாநிதி செரான் தெரணியகல மாயக்கையில் மீட்கப்பட்டதொல்லியல் பொருள்கள் இற்றைக்கு 7 லட்சம் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த 'ஹோமோ இரக்டஸ்' என அழைக்கப்படுகின்ற மனித இனத்தின் எச்சங்கள் என அறிவித்தார்.

இந்தக் கல்லாயுதங்கள் சேட் (CHERT) எனும் கற்களினால் உருவாக்கப்பட்டவை என தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை எதிர்காலத்தில் மாயக்கையில் தொல்லியல் திணைக்களத்தினராலும் பேராசிரியர் கிருஸ்ணராஜாவினாலும் ஆய்வுகள் நடத்தப் படவுள்ளன.

(த-319)

# ரயர், ரியூப் ஆறு ரூபா விற்றபோது கிடைத்த பயணப்படியே இப்போதும்

## உள்ளூராட்சி வெளிக்கள உத்தியோகத்தர் கவலை

யாழ்ப்பாணம்,செப்.17

சைக்கிள் ரயர், ரியூப் ஆறு ரூபா விற்கும்போது வழங்கப்பட்ட பயணப்படிக் கொடுப்பனவு தற்போது ரயர்,ரியூப்பின் விலை ஆயிரம் ரூபாவிற்கும் வேளையிலும் வழங்கப்படுவது குறித்து உள்ளூராட்சிச் சபை வெளிக்கள உத்தியோகத்தர்கள் கவலை தெரிவித்தனர்.

உள்ளூராட்சிச் சபைகளில் கடமையாற்றும் சகல தர வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு அலுவலகக் கடமை நிமித்தம் தமது சைக்கிள்களைப் பாவிப்பதற்கு ஒரு கிலோ மீற்றருக்கு 35 சதம் வீதம் 1980 ஆம் ஆண்டு தொடக்கம் வழங்கப்பட்டு வருகிறது.

இந்தத் தொகையை அதிகரித்து வழங்குமாறு இந்த உத்தியோகத்தர்கள் தொழிற் சங்கங்கள் மூலம் கோரிக்கை விடப்பட்ட போதிலும் இதுவரை அதிகரித்து வழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை அரசாங்க திறைசேரிப்பணிப்பாளரினால் கடந்த 2010 மே மாதம் விடுக்கப்பட்ட சுற்றறிக்கையில் தமிழ் மொழியில் சைக்கிள் பாவனைக்கும் சிங்கள மற்றும் ஆங்கில மொழியில் மோட்டார் சைக்கிள் பாவனைக்குமென கிலோ மீற்றருக்கு இரண்டு ரூபா வழங்கக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் அலுவலக நிமித்தம் தமது சொந்தச் சைக்கிளைப் பாவி போருக்கு தற்போதும் ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்கு 35 சதம் மட்டுமே வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

உள்ளூராட்சிச் சேவையில் அட்வணைப்படுத்தப்படாத வருமான மேற்பார்வையாளர்களுக்கு மாதாந்தம் பயணப்படியாக ஆயிரத்து 250 ரூபாவைக் கடந்த 2010 மே மாதம் தொடக்கம் வழங்குமாறு மாகாண ஆளுநரின் ஒப்புதலுடன் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் அனுப்பப்பட்ட சுற்றிக்கையின் பிரகாரம் அதனை நடைமுறைப்படுத்த இன்று வரை உள்ளூராட்சிச் சபைகள் பின்னடித்து வருகின்றன. அனுப்பப்பட்ட சுற்றிக்கையில் போதிய விளக்கங்கள் குறிப்பிடாததாகக் காரணம்கூறி இது வரை அந்தக்கொடுப்பனவு பல உள்ளூராட்சிச் சபைகளில் வழங்கப்படுவதில்லையென சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையினை ஏற்று வலிகாமம் தெற்கு, மேற்கு பிரதேச சபை மட்டும் இந்தக் கொடுப்பனவு வழங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த)

### மக்களின் நலனை கருத்தில் கொண்டு

# வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் தீர்மானங்கள் உடன் நடைமுறைக்கு

யாழ்ப்பாணம், செப்.17

வலி.தென்மேற்குப்பிரதேச சபையில் இந்த மாதம் 7ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் சில உடனடியாக அமுல்படுத்தப்படுவதாக கடந்த 15 ஆம் திகதி இடம் பெற்ற கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

தலைவர் ஆ.ஜெபநேசன் தலைமையில் அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் மானிப்பாய் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள், பிரதேச சபையின் செயலாளர், சபையின் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் பிரதேச சபைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களுக்கு முன் பொருள்கள் விற்பனைக்கு வைத்திருத்தல், காட்சிப்படுத்தல் என்பவை உடனடியாக தடை செய்யப்படல், வர்த்தக நிலையங்களுக்கு வெளியில் நீட்டப்பட்டுள்ள கூரைகளை அகற்றுதல், வீதிகளில் சைக்கிள்கள் மற்றும் வாகனங்கள் என்பவற்றை நிறுத்துவது தடைசெய்தல் என்பனவற்றை உடன் நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பொறுப்பதிகாரி ஏ.ஜி. இராஜசூரியகுமார கூறுகையில்:

இந்த எல்லைகுள் மோட்டார் வாகனங்கள் 40 மைல் வேகக் கட்டுப்பாட்டுக்குள் செல்ல வேண்டும். சகல சைக்கிள்களிலும் உரிமத் தகடுகள் பொருத்தப்பட வேண்டும். சைக்கிள்களில் சமாந்தரமாகச் செல்வது தண்டனைக்குரிய குற்றமாகும். பாடசாலைப் பிள்ளைகள் செல்வதற்கு பாடசாலைக்கு முன் மஞ்சள் குறியீட்டுக் கோடுகள் அமைப்பட வேண்டும். -என்றார். (த-100)

நல்லாதரவு...



உதவும் கரங்கள்: அகவெளி குடும்பத்துணை நிலையத்தால் வன்னி மற்றும் வடமராட்சி கிழக்குப் பகுதியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட விசேட தேவையுடையோருக்கான சக்கர நாற்காலிகளை யாழ்.றோட்டறிக் கழகத்தால் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இதில் கலந்து கொண்டு பயனாளிகளுக்குச் சக்கர நாற்காலி வழங்கினார்.

# நெடுந்தீவுப் பகுதிக்கான குடி தண்ணீர் குடாநாட்டு நீர் நிலைகளில் இருந்து

யாழ்ப்பாணம், செப்.16

இரணைமடுவில் இருந்து கொண்டு வரப்படும் குடி தண்ணீர் நெடுந்தீவுப் பகுதிக்கு உடனடியாக வழங்க முடியாது.

குடாநாட்டின் ஏனைய நன்னீர் நிலைகளில் இருந்து பெறப்படும் நீர் குறிகாட்டுவானில் இருந்து 'பாஜ்' மூலம் நெடுந்தீவுக்கு அனுப்பி வைக்கப்படும்.

இவ்வாறு யாழ்-கிளிநொச்சி குடிதண்ணீர் விநியோகத் திட்டப் பொறியிலாளர் எந்திரி எஸ்.ஸ்றெஜிலதரன் தெரிவித்தார்.

நெடுந்தீவுப் பிரதேசத்துக்கான சமூக மயப்படுத்தப்பட்ட கிராம நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம் தொடர்பாகப் பொறியியலாளர் எஸ்.ஸ்றெஜிலதரன் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நெடுந்தீவுப் பிரதேசம் குடாநாட்டில் இருந்து கடல்கடந்த பிரதேசமாக உள்ளது. இங்குள்ள மக்களின் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க சமூக [illegible] படுத்தப்பட்ட கிராமிய நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கென 11 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டின் ஏனைய நன்னீர் நிலைகளில் பவுசர் மூலம் கொண்டு செல்லப்படும் குடி தண்ணீர் குறிகாட்டுவானில் இருந்து 30 ஆயிரம் லீற்றர் கொள்கலன் கொண்ட 'பாஜ்' மூலம் நெடுந்தீவுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து குடி [illegible] பகட்ட வேலைகளை ஆரம்பித்துள்ளோம். (த-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்தடையால் புலமைப்பரிசில் பெறுபேறுகளை அறிவதில் தாமதம்

தென்மராட்சி,செப்.17

தென்மராட்சிப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளை இணையத் தளத்தில் பார்ப்பதில் பெற்றோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

பரீட்சைப் பெறுபேறு இணையத் தளத்தில் வெளியாகுமென அறிவிக்கப்பட்டதையடுத்து பெற்றோர் தத்தமது பாடசாலைகளுக்கும் இணையத்தள வசதி கொண்ட வர்த்தக நிலையங்களுக்கும் அலைந்தனர்.

சில பெற்றோர் யாழ்ப்பாணம் சென்று பெறுபேறுகளை இணையத்தள நிலையங்களில் அறிந்து வந்ததாகவும் சில பெற்றோர் கையடக்கத் தொலைபேசிகளில் பரீட்சைப் பெறுபேறுகளை இணையத் தளம் மூலம் பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சில பாடசாலைகள் மின்பிறப்பாக்கிகளை வாடகைக்குப் பெற்றுப் பெறுபேறுகளைப் பார்த்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

(த-207)

# தினக்குரலின் விளக்கம்

கொழும்பு, செப்.17

கொழும்பில் இயங்கிவரும் 'தினக்குரல்' பத்திரிகையின் ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் கடந்த புதன்கிழமையன்று அவர்களின் கடமைகளுக்காக அலுவலகத்தினுள் செல்ல அனுமதிக்கப்படவில்லை என்று பத்திரிகையில் பிரசுரமான செய்தி குறித்து ஏசியன் மீடியா பப்ளிகேஷன் பிரைவேட் லிமிட்டெட் நிறுவனத்தின் பணிப்பாளர் பி.கேசவராஜா விளக்கமொன்றை அனுப்பி வைத்துள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தினக்குரல் சேவைகளை, நவீனப்படுத்தும் நோக்குடன் அனைத்து ஊழியர்களையும் ஒன்றிணைந்து பங்கேற்க புதிய நிர்வாகக் கட்டமைப்புக்குள் வருமாறு அழைப்பு விடுத்திருந்தோம். பெரும்பாலானோர் அதற்கு முழுமையான ஒத்துழைப்பை நல்கிய அதேவேளை, குறித்த ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அதில் இணைந்து கொள்ள மறுப்புத் தெரிவித்தனர்.

பத்திரிகையின் ஆசிரியர் வீ.தனபாலசிங்கம் உட்பட நிறுவனத்தின் ஊழியர்கள் தங்கள் பணியை தொடர்ந்து வரும் நிலையில், குறிப்பிட்ட சிலரே தங்கள் பணியைத் தொடர விரும்பாது எம்மோடு இணைந்து பணியாற்ற முன்வராது இருந்து வருகின்றனர்.

எந்தவொரு பணியாளரையும் இடைநிறுத்த வேண்டுமென்பதோ அவர்களின் சேவையை துண்டிக்க வேண்டுமென்பதோ அன்றேல் பத்திரிகையை நிறுத்த வேண்டும் என்பதோ எமதோ எமது நிறுவனத்தினதோ நோக்கமல்ல. அவ்வாறு செயற்பட எமது நிறுவனம் எண்ணியதும் கிடையாது.

தமிழ் பேசும் மக்களுக்கு சிறந்த சேவையை எதிர்காலத்தில் வழங்க வேண்டும் என்ற நல் நோக்குடன் நவீன வசதிகளுடன் பத்திரிகையை அச்சிடும் முகமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு ஊழியர்கள் பலர் இணங்கி இருக்கும்நிலையில் ஏனையோர் அவற்றுக்கு இணங்க மறுத்து தங்களை பணியிலிருந்து தடுத்திருப்பதாகக் கூறுவது எந்தளவு நியாயமாகும் என்பதே இன்று எழுந்துள்ள கேள்வியாகும்.

அதேவேளை, ஒருவர் இரண்டு நிறுவனங்களில் ஒரே நேரத்தில் சேவையாற்ற முடியாது என்ற காரணத்தினாலேயே புதிய நிறுவனத்தின் கீழ் சேவையாற்றும் வகையில் ராஜினாமா விவகாரமும் எழுந்துள்ளது - என்றுள்ளது.

(உ)

# பிடிபட்டவர் சிப்பாய் இல்லை என்கிறது பலாலி படைத்தரப்பு

யாழ்ப்பாணம், செப்.17

யாழ். கொட்டடியில் திருட்டு முயற்சியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர் இராணுவத்தில் இருந்து கட்டாய விடுமுறை யில் அனுப்பப்பட்டவர் என்று பலாலி படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

சந்தேகநபர் 51 ஆவது படையணியைச் சேர்ந்தவர் என்று யாழ். பொலிஸார் தெரிவித்த தகவலை மறுத்துள்ள பலாலி படைத்தலைமையகம், அந்த நபர் 18.02.2010 அன்று யாழ்ப்பாணத்தில் இருந்து கிழக்கின் ஹிங்குறாகொட பகுதிக்கு அனுப்பப்பட்டார் என்றும் கூறி உள்ளது. அதன் பின்னர் 15.12.2010 அன்று அவர் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டார் என்றும் பலாலி தலைமையக செய்திக் குறிப்பு தெரிவித்தது.

''இப்படியான செய்திகளால் எங்கள் மீது மக்களுக்கு உள்ள நம்பிக்கை இல்லாமல் போகிறது'' என்றும் பலாலி தலைமையகம் தனது குறிப்பில் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த 11 ஆம் திகதி வெளியான ஒரு செய்தியில் உயர் பாதுகாப்பு வலயம் என்று குறிப்பிடப்பட்டிருப்பதைத் தவறு எனச் சுட்டிக் காட்டும் பலாலி படைத் தலைமையகம், யாழ். குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயம் என்று ஒன்றில்லை; முகாம் பகுதிகளே இருக்கின்றன என்று தெரிவித்துள்ளது.

*குறிப்பு: கொட்டடியில் பொது மக்களால் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நபரைத் தீவிரமாக விசாரணை செய்த பின்னர் யாழ். பொலிஸ் நிலையத்தால் தரப்பட்ட தகவலையே உதயன் பிரசுரித்திருந்தது. சந்தேகநபர் இராணுவச் சிப்பாய் என்று பொலிஸார் கூறினர்.(ஆ-ர்)*

# புதுமையாக எதையுமே செய்யவில்லை
# முதலிடம் பெற்ற கெக்கிராவ ஷாகி கூறுகிறார்

கொழும்பு, செப்.17



புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற நான் புதிதாக ஒன்றும் செய்யவில்லை. வழமை போலவே கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டேன். எனது பெற்றோரும், எனது அர்ப்பணிப்புமே இந்த வெற்றிக்கு முழுக் காரணம். இவ்வாறு ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியிலும், தமிழ் மொழிமூலமும் முதலாம் இடத்தைப் பெற்ற மொஹமட் நலீம் ஷாகி அஹமட் உதயனுக்குத் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் வெளியான ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின்படி கெக்கிராவ முஸ்லிம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன் மொஹமட் சலீம் ஷாகி அஹமட் அகில இலங்கை ரீதியில் 195 புள்ளிகளைப் பெற்று முதலாமிடம் பெற்ற மூன்று மாணவர்களில் ஒருவராவார். இவருடைய தந்தை எம்.எஸ்.எம். நலீம். தாயார் எம்.எஸ் ஜெபீல் காமில். இவர்கள் இருவரும் கெக்கிராவ பெப்டிஸ்ட் மிஷன் தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியர்களாகக் கடமையாற்றுகின்றனர்.மொஹமட் நலீம் ஷாகி அஹமட் உதயனுக்குக் கூறியவை வருமாறு:-

"நான் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற புதிதாக ஒன்றும் செய்யவில்லை. வழமைபோன்று எனது கற்றல் நடவடிக்கைகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டேன். அத்துடன், எனக்கு எனது தந்தையும், தாயாரும் பக்கபலமாக இருந்தார்கள். பாடசாலை மற்றும் மேலதிக வகுப்புகளில் வழங்கப்படும் மேலதிக பயிற்சிகளைத் தவறாமல் செய்து வந்தேன். எனது எதிர்கால இலட்சியம் பொறியியலாளராவதே''-என்றார்.


## வேலைக்கு ஆள்கள் தேவை
(பெண்கள்)

கே.கே.எஸ். வீதி, கோண்டாவில் மேற்கில் இருக்கும் உணவுப் பொருள்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் (K.R.S.Food Products) வேலை செய்வதற்கு ஏற்ற பெண் பிள்ளைகள் தேவை. நேரில் வரவும்.

K.R.S. Food Products,
K.K.S. Road,
Kondavil
T.P.0214591537

கே. ஆர்.எஸ்
உணவு உற்பத்தி நிறுவனம்,
கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில்.
(உப தபாலகத்துக்கு எதிர் வீதி).

## தேவை

* யாழ்.நகரில் அமைந்துள்ள பிரபல TILE ஸ்தாபனத்துக்கு STORE KE MARKETING EXECUTIVE தேவை.
* நெல்லியடியில் திறக்கப்படவுள்ள எமது கிளைக் காட்சியறைக்கு SREP தேவை. வடமராட்சிப் பகுதியில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. ஏற்ற சம்பளம் வழங்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
**வி.இ. 4173, C/o உதயன்,**
**361, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி:Suren@metrohomes. lk


## மரண அறிவித்தல்

**முத்தையா சிவலிங்கம்** (ஓய்வு பெற்ற படவரைஞர்)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழையை நிரந்தர வதிவிடமாகவும் கலட்டி அம்மன் வீதி, வண்ணார் பண்ணையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட முத்தையா சிவலிங்கம் 13.09.2011 சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா - சீதாங்கனி தம்பதியரின் புத்திரனும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் தங்கமுத்துவின் (பாரதி) (ஓய்வு பெற்ற ஆசிரியை - யாழ்.இந்து மகளிர் கல்லூரி), அன்புக் கணவரும் சிவசுதன், திவ்வியா (யா/ இந்து ஆரம்பப்பாடசாலை ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுபகாவின் பெரிய தந்தையும் பாலகிருஷ்ணன், சற்குணவதி, செல்வநாயகி, சரவணபவன், வீரகுலசிங்கம், காலஞ்சென்ற மதிவதனி (சாந்தா) ஆகியோரின் சகோதரரும், சாலினி, கௌரிவாசன் (மாவட்ட நீதிமன்றம் - சாவகச்சேரி) ஆகியோரின் மாமனும் காலஞ்சென்ற காங்கேசு மற்றும் ஈஸ்வரி, சண்முகலிங்கம், சிவானந்தன், முருகையா, வரதலட்சுமி, சத்தியபாமா, காலஞ்சென்றவர்களான யோகலிங்கம் தற்பரானந்தன் மற்றும் இராசமலர் றஞ்சினி ஆகியோரின் மைத்துனரும் தணிகா, சந்துருஜன், கஜானன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (18.09.2011) ஞாயிற்றுக் கிழமை மு.ப.10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

78, கலட்டி அம்மன் வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம். (8218)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.


## கட்டடம் வாடகைக்கு

*402, பிரதான வீதியில் (பஸ்தியன் சந்தி) அமைந்துள்ள 34 x 45 அடி விஸ்தீரணம் கொண்ட மாடிக் கட்டடம் வாடகைக்கு ஒப்பந்த அடிப்படையில் விடப்படும். (நிறுவனங்கள் விரும்பத்தக்கது) தொடர்புகளுக்கு நேரில் வரவும் (தரகர் தேவையில்லை)*
ரதி வஸ்ரியாம்பிள்ளை (8220)

## மணமக்கள் தேவை

85 இல் பிறந்த 4இல் செவ்வாய் 16 ¼ பாவமுடைய ஜேர்மன் பிரஜா உரிமை பெற்ற மணமகளுக்கு ஜேர்மனியில் அல்லது ஊரில் படித்த மணமகன் தேவை.

82 இல் பிறந்த 12 செவ்வாய் 10 ½ பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகளுக்கு கனடாவில் அல்லது ஊரில் படித்த மணமகன் தேவை.

மேலும் டாக்டர்கள், இஞ்சினியர்கள், பட்டதாரிகள், சைவபோசனமுள்ள அரச உத்தியோகத்தர்கள், வெளி நாட்டில் பிரஜா உரிமை பெற்ற மணமக்களும் எம்மிடமுள்ளனர்.

தொடர்பு:
கமலக்கண்ணன் திருமணசேவை
இல. 171/7 , மனோன்மணி, அம்மன் கோயிலடி,
நல்லூர்.
T.P. 077 6070862

## திருமண சேவை

எங்களிடம் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் உண்டு. குறிப்பு படத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:0213211814
0778185978

துர்க்கா திருமணசேவை
இல.17, அரசடி வீதி
(3ஆம்ஒழுங்கை),கந்தர் மடம்,
யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள FIRMAN-SDG 5000-SE மொடல், டீசல் ஜெனரேட்டர் [Generator] விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 0778350478**

## வீடு வாடகைக்கு

நாவலி வடக்கு புலவர் வீதியில், நல்ல சுற்றாடலில் 3 அறைகள், இரண்டு விறாந்தை இணைந்த குளியறை, வாகன தரிப்பிடம் வசதி கொண்ட 7 பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 8350478 (8210)

## காணி விற்பனைக்கு

கொக்குவில், நந்தாவில் அம்மன் கோயிலுக்கு அருகில் குட்செட்க்கு முன்னால் உள்ள வைரவர் கோயில் வீதியில்13 ¾ பரப்புக் காணி, 8 [illegible] இரு [illegible] காணிகள் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு:
0785272106,0512225381

## கிளிநொச்சியில் அண்ணா கோப்பி

அண்ணா கோப்பி, அண்ணா பற்பொடி மற்றும் அண்ணா தயாரிப்புகள் அனைத்தும் மொத்த, சில்லறை விலைகளில் பெற்றுக் கொள்ளலாம்

அண்ணா கோப்பிக் கடை
இந்துபுரம், ஏ-9 வீதி,
திருமுருகண்டி. (சி/3970)

## காணி தேவை

15-20 பரப்பளவுள்ள விசாலமான காணி ஒன்று தேவை.

**தொடர்புகளுக்கு - 0779596815**

* *K.K.S. வீதி*
* *பலாலி வீதி*
* *இராச வீதி*

போன்ற பிரதான வீதிகளில் இருந்து 300 Mற்குள் உள்ள காணிகள் விரும்பத்தக்கது.


## 25 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர் நாகநாதி
முத்துகுமாரசாமி



மண்ணில்
1947.09.13

விண்ணில்
1986.08.24

அன்பாலும் பண்பாலும்
எல்லோரையும் அரவணைத்த
அன்புத் தெய்வமே அப்பாவே

ஆண்டுகள் இருபத்தைந்து ஆனாலும்
அழியாது உங்கள் நினைவுகள்
ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

35/5, இலந்தைக்குளம் வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்புடன் தொடர்ந்து பேசுவதோடு தெரிவுக்குழு நடவடிக்கையும் இடம்பெறும்

## கூறுகிறார் லக்ஷ்மன் யாப்பா

கொழும்பு,செப்.17

இனப்பிரச்சினை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தொடர்ந்து பேச்சு நடத்த அரசு தயாராகவுள்ளது. அதேவேளை, நாடாளுமன்றத் தெரிவுக்குழு நடவடிக்கையும் இடம்பெறும். அலரிமாளிகையில் கோப்பி அருந்த விரும்பாதவர்கள் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் ஊடாக கருத்தை முன்வைக்கலாம்.

-இவ்வாறு அமைச்சரவை பதில் பேச்சாளரும், பொருளாதார அபிவிருத்திப் பிரதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்றுமுன்தினம் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

இனப்பிரச்சினைத் தீர்வு விடயம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தொடர்ந்து பேச்சு நடத்தப்படும். அதற்கான சிறந்த சூழ்நிலையும் தற்சமயம் ஏற்பட்டுள்ளது.

அரசியல் தீர்வு வழங்குவதற்கு அரசு தயாராக்வே உள்ளது. ஆனால், ஒரே இரவில் தீர்வை வழங்கமுடியாது. யுத்தத்தை தாக்குதல்களை மேற்கொண்டு முடிவுக்குக் கொண்டுவரலாம். ஆனால்,



அரசியல் தீர்வுப் பிரச்சினை அவ்வாறான தொன்றல்ல. அரசுக்கு காலம் தேவைப்படுகிறது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கும் விடயம் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. கட்சிகளின் கருத்துக்களை முன்வைக்குமாறு சபாநாயகர் அறிவித்துள்ள போதிலும் இதுவரை எந்தவொரு கட்சிகளும் எதுவும் கூறவில்லை- என்றார். (சி)

# இரட்டைத் திருமணம் செய்த சிப்பாய்க்கு ஒருவருட சிறை

## சட்டபூர்வ மனைவிக்கு நஷ்டஈடு

இரட்டைத் திருமணங்களைச் செய்து கொண்டார் என்ற குற்றஞ்சாட்டின் பேரில் வழக்குத் தொடரப்பட்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அவருக்குப் பத்தாண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடூழிய சிறைத்தண்டனையை நீர்கொழும்பு பிரதம நீதிவான் என்.பீ அமரசிங்க விதித்துள்ளார்.

சந்தேகநபரின் சட்டபூர்வ மனைவிக்கு 50 ஆயிரம் ரூபாவை நட்ட ஈடாக வழங்கவேண்டும் என்றும் உத்தரவு பிறப்பித்தார்.

தெவமோட்டாவ, ஆடியம்பலம பிரதேச வாசியான ரோஹன திமுத்து கருணாதாச என்பவருக்கே இந்தத் தண்டனை வழங்கப்பட்டது.

இவர் தனது முதல் மனைவியான மல்லிகாகுமாரியை 1996 ஆம் ஆண்டு ஜனவரி 22 ஆம் திகதி சட்டபூர்வமாக மணம் முடித்தார். அவரை விவாகரத்துச் செய்யாமலே மாத்தளையில் வசித்த பீ.ஆர்.ரன்திலகா எனும் பெண்ணை 2004 ஜனவரி 24 ஆம் திகதி இரண்டாவது தடவையாக மணம் முடித்துள்ளார் என்று வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

குற்றவாளி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து நீதிவான் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார். (ச-5)

# வாக்களிக்காதுவிட்டால் வீடுகள் உடைக்கப்படும்

## அரசின் சதியை முறியடிக்கக் கோருகிறார் முஸம்மில்

கொழும்பு,செப்.17

''கொழும்பில் ஏழை மக்களின் வீடுகளை உடைக்கும் திட்டத்தை அரசு இன்னும் கைவிடவில்லை. அரசுக்கு வாக்களிக்காவிட்டால் வீடுகள் உடைக்கப்படும் என்று அரசு கூறுகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். நான் மேயரானதும் வீடுகளை உடைக்கும் அரசின் இந்தத் திட்டத்துக்கு எதிராகச் செயற்படுவேன்''

-இவ்வாறு கொழும்பு மாநகரசபைக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் மேயர் வேட்பாளர் ஏ.ஜே.எம்.முஸம்மில் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் அவரது இல்லத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:

நான் சிறு வயது முதல் சமூக சேவையில் ஈடுபட்டு வருகின்றேன்.

எனது சேவையை விஸ்தரிக்க எனக்கு இப்போது மேலும் ஒரு வாய்ப்புக் கிட்டியுள்ளது. இந்த வாய்ப்பைத் தக்கவைத்துக் கொண்டு கொழும்பு மக்களுக்குச் சேவை செய்வதற்கு கொழும்பு மக்கள் எனக்கு உதவ வேண்டும்.

கொழும்பு மக்கள் பலதரப்பட்ட துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். அவர்களின் பிரச்சினைகளுக்கு கொழும்பு மாநகரசபையின் ஊடாக நாம் தீர்வைக் காணவேண்டும். இதற்கு மக்கள் எனக்கு உதவ வேண்டும்.

கொழும்பு நகரம் அரசால் அலங்கரிக்கப்படுகிறது. இதை நாம் எதிர்க்கவில்லை. ஆனால், இந்த அலங்கரிப்பு ஏழை மக்களையும் சென்றடைய வேண்டும். அந்தப் பணியைத்தான் நான் செய்வேன். ஏழை மக்களை குறிவைத்தே எனது சேவைகள் முன்னெடுக்கப்படும்.

அரசின் இந்தச் சதித்திட்டத்தை முறியடிக்க கொழும்பு மக்கள் அனைவரும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட் சியின் கோட்டையான கொழும்பை நாம் காப்பாற்றவேண்டும். அரசு என்ன அடாவடித்தனம் செய்தாலும் நாமே இந்தத் தேர்தலில் வெற்றிபெறுவோம் - என்றார்.

## வெற்றிக்காக...



எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் வெற்றிக்காக கொழும்பில் அமைந்துள்ள பிரதான விகாரைகளில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை விசேட பூஜைகள் இடம்பெற்றன. இந்த மத வழிபாட்டு நிகழ்வுகளில் ஐ.தே.க.வின் தலைவர் ரணில்விக்கிரமசிங்க கலந்துகொண்டார். (ச)

# டெங்கு பரவலை கட்டுப்படுத்த பாகிஸ்தான் உதவி

கொழும்பு, செப்.17

டெங்குநோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் இலங்கைக்கு உதவியளிக்க பாகிஸ்தான் முன்வந்துள்ளது.

இலங்கை அரசு விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணம் இந்த உதவியை வழங்க முன்வந்துள்ளது.

இதன்படி, டெங்குநோய் பரவலுக்கு எதிராக இலங்கை மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு உதவும் முகமாக பஞ்சாப் மாகாணம் மருந்துகள், உபகரணங்களை வழங்குவதுடன், மருத்துவ பணியாளர்களையும் அனுப்புவதற்கு முன்வந்துள்ளது என்று பஞ்சாப் மாநில ஆளுநர் ஷகீப் ஷெரீப் தெரிவித்துள்ளார். (ச)

# சட்டவிரோதமாக குடிதண்ணீர் பெற்றவர்கள் சுற்றிவளைப்பு

## ரூபா 38 மில்லியன் அறவீடு

கொழும்பு, செப்.17

கடந்த ஜனவரி மாதம் முதல் ஒகஸ்ட் மாதம் வரை சட்டவிரோதமாகக் குடிதண்ணீர் இணைப்புப் பெற்றுக்கொள்ளப்பட்ட இடங்கள், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் திடீர் சுற்றிவளைப்பினரால் சுற்றிவளைக்கப்பட்டு சபைக்குக் கிடைக்க வேண்டிய 38 மில்லியன் ரூபா அறவிடப்பட்டுள்ளது.

ஆயிரத்து110 வீடுகளிலிருந்து இந்தத் தொகை அறவிடப்பட்டது என்று கொழும்பு மருதானை சட்டவிரோத குழாய் நீர் இணைப்பு சுற்றிவளைப்புப் பிரிவின் பொறியியலாளர் பிரேம் குமார் தெரிவித்துள்ளார்.

தேசிய நீர் வழங்கல் சபையினால் குழாய் நீர் மூலம் விநியோகிக்கப்படும் சுத்தமான குடிதண்ணீர் சட்டவிரோதமாகக் கூடுதலாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட பகுதிகளாக கொட்டாஞ்சேனை, மாளிகாவத்தை, வனாத்தமுல்லை, கொம்பனித்தெரு ஆகிய பகுதிகள் என்று தெரிய வருகிறது.

உல்லாச விடுதிகள், வர்த்தக நிலையங்கள், சிற்றுண்டிச்சாலைகள், வீடுகள் ஆகியவற்றுக்கு இவ்வாறு சட்டவிரோதமாகக் குழாய் நீர் இணைப்புப் பெற்றுக் கொள்ளப்பட்டமை கடந்த காலத்தில் சுற்றிவளைப்பின்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (ச)

# ஆஸி.செல்ல முயன்றோருக்கு 29 வரை மறியல்

கொழும்பு, செப். 17

சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியா செல்ல முயன்றவர்களுள் 42 பேரை எதிர்வரும் 29 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதிவான் ரஷ்மி சிங்கப்புலி நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

கைது செய்யப்பட்ட 44 பேரில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தீவிர உறுப்பினர்கள் எனச் சந்தேகிக்கப்படும் 6 பேரும் உள்ளனர் என்று குற்றப் புலனாய்வுப் பணியகத்தினர் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் தெரிவித்தனர்.

இந்த 44 சந்தேக நபர்களில் பெண்களும், குழந்தைகளும் அடங்குகின்றனர் எனக் கொழும்பு பிரதம நீதிவான் ரஷ்மி சிங்கப்புலியிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர். ட்றோலர் படகில் சென்று கொண்டிருந்தபோது கிழக்கு கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கு எதிராக பொய்ப் பிரசாரங்கள்

## அமைச்சர் விமல் வீரவன்ஸ கூறுகிறார்

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெறும் சந்தர்ப்பங்களில், இலங்கைக்கு எதிராக இலங்கையர்கள் சிலர் பொய்ப் பிரசாரங்களில் ஈடுபடுகின்றனர் என்று அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

ஜெனிவா மனித உரிமை பேரவையின் கூட்டங்கள் நடைபெறும் சந்தர்ப்பங்களில் அங்கு செல்லும் இவர்கள் புலிகளின் தேவைகளை நிறைவேற்றி வருகின்றனர் என்று அமைச்சர் குற்றம்சுமத்தியுள்ளார்.

ஹங்குராங்கெத்த பிரதேசத்தில் வீடமைப்புத் திட்டம் ஒன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பல வருட காலமாக ஜெனிவா நகருக்குச் சென்று, இலங்கைக்குப் பாதிப்பு ஏற் படும் வகையில் செயற்படுகின்றார்.



இதுதவிர அரசசார்பற்ற நிறுவனங்கள் சிலவற்றை பிரதிநிதித்து வப்படுத்தும் இலங்கையர்கள் சில ரும் ஜெனிவாவுக்குச் சென்று, இலங்கை தொடர்பான பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

பிரிவினைவாதிகளுடன் இணைந்து இலங்கையைச் சிக்க வைக்க எப்படியான முயற்சிகளை செய்தாலும், அது வெற்றியளிக்காது.

உலகில் பெரும்பாலான நாடுகள் பிரிவினைவாதத்துக்கு எதிராகவும் இலங்கைக்கு ஆதரவாகக் குரல் கொடுத்து வருகின்றன என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
17 செப்ரெம்பர் 2011 சனிக்கிழமை

# கிளிநொச்சி தொழிலநுட்பக் கல்லூரிக் கட்டடம் அனுமதியின்றி இரவோடு இரவாக இடித்தழிப்பு

கிளிநொச்சி, செப்.17

கிளிநொச்சி மாவட்டத் தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரிக் கட்டடங்கள் அனுமதிகள் பெறப்படாது உடைக்கப்பட்டுத்தரை மட்டமாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்துக்கான தொழில்நுட்பக் கல்லூரி கடந்த 1997 காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை இயங்கி வருவதுடன் இலங்கை கல்வி அமைச்சின் மூன்றாம் நிலைக் கல்வியின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இளைஞர், யுவதிகளை இணைத்து அவர்களுக்கான தொழிற்பயிற்சிகளை வழங்கி மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சின் சான்றிதழ்களையும் இந்தத் தொழில்நுட்பக்கல்லூரி மூலம் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டத் தொழில் நுட்பக் கல்லூரி வளாகத்தில் உள்ள இருமாடிக் கட்டடமும் அதனை அண்மித்த பத்து அடி நிலப் பகுதியும் இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் தொழில் பயிற்சிகளுக்கு என தொழில்நுட்பக் கல்லூரியின் அனுமதியுடன் மாவட்ட அரச அதிபரால் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் எதுவித அனுமதியும் பெறப்படாத நிலையில் தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் இருந்த 2006 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்ட 80அடிநீளமும்20அடிஅகலமும்கொண்ட கட்டடம் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத் தொழில் நுட்பக் கல்லூரியின் வளாகத்தை அபகரிக்கும் நோக்கில் இரவோடு இரவாக இந்தக் கட்டடம் அழிக்கப்பட்டுள்ளதாகப் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். மாவட்டத்துக்குரிய தொழில்நுட்பக் கல்லூரியை விட கிளிநொச்சி அறிவியல் நகர்ப் பகுதியில் இளைஞர் அலுவல்கள் மற்றும் திறனபிவிருத்தி அமைச்சுக்கு இருபத்தைந்து ஏக்கர் நிலப்பகுதி வழங்கப்பட்டுக் கடந்த மாதம் புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-6)

# காலபோகத்தில் நீர் விநியோகம்

கிளிநொச்சி, செப்.17

அக்கராயன் குளத்தின் புனரமைப்பு வேலைகள் 200 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்,காலபோக நெற்செய்கைக்கு எவ்வித தடங்கலுமின்றி நீர் விநியோகம் மேற்கொள்ளப்படுமென்றும் கிளிநொச்சிப் பிராந்திய பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் ந.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

காலபோக நெற்செய்கைக்கு அக்கராயன் குளத்திலிருந்து நீர்விநியோகம் மேற்கொள்ளப்படமாட்டாதென்ற செய்தியொன்று தொடர்பாகவே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

காலபோகத்தின் போது நீர் வழங் கப்படுமாயின் விவசாயிகள் பெரும் நன்மை அடைவர் என்பது குறிப்பிடத்தக்கது.(க)

# தமிழ்த்தினப் போட்டியில் முதலாமிடம்

வவுனியா, செப்.17

அகில இலங்கை 2011 ஆம் ஆண்டுக்கான தமிழ் மொழித்தினப் போட்டியின் ஆக்கத்திறன் வெளிப்பாடு பிரிவு 1இல் வவுனியா வடக்கு வலயத்தின் பின் தங்கிய கிராமப் புறப் பாடசாலையான வவுனியா தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி செல்வராசா சுஸ்மிதா என்ற மாணவி தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

இந்தமாணவியை பாடசாலைச் சமூகத்தினரும் அவர் பிறந்த கிராம மக்களும் பாராட்டியதுடன் அவர் மேன் மேலும் கல்வியில் சிறந்து விளங்குவதற்கு தமது ஆசிர்வாதத்தையும் வழங்கியுள்ளனர். (க-எ)

# எமது மக்களின் கலைகலாசார விழுமியங்களை பாதுகாத்து முன்னேற்றப் பாதையில் செல்வோம்

## கரைச்சிப் பிரதேச சபையின் உபதலைவர்

கிளிநொச்சி, செப்.17

எமது மக்களின் பாரம்பரிய கலை கலாசார விழுமியங்களைப் பாதுகாத்து எமது சமூகத்தை முன்னேற்றப்பாதைக்குக் கொண்டுசெல்லவேண்டியபெரியபொறுப்பு எம்மைப்போன்ற ஒவ்வொருவரினதும் கைகளிலேயே உள்ளது. இவ்வாறு கரைச்சிப் பிரதேச சபையின் உபதலைவர் வடிவேல் நகுலேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கரைச்சிப்பிரதேச சபையின் உபதலைவர் வடிவேல் நகுலேஸ்வரன் கரைச்சிப் பிரதேச சபைக்கு உட்பட்ட பின்தங்கிய கிராமங்களுக்குச் சென்று பலதரப்பட்ட மக்களையும் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர் கருத்துத் தெரிவிக்கும் போது இதனைத் தெரிவித்தார்.

கடந்த கால இடப்பெயர்வுகள், உயிரிழப்புக்கள், அவலங்கள் அழிவுகளைச் சுமந்த எமது மக்கள் அடிப்படை வசதிகள் கூட இல்லாத நிலையில் மீளக்குடியமர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இன்று இரண்டு வருடங்கள் கடந் தும் அவர்களுக்கான எந்த வசதிகளும் செய்யப்படவில்லை. நான் சந்தித்த மக்கள் அன்றாடம் பெற்றுக் கொள்ளும் குடி தண்ண்ணீரைக் கூடப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அதற்காக அதிகநேரத்தையும் செலவு செய்வதைக் காணமுடிகின்றது. இதேவேளை தொழில்வாய்ப்புக்கள் இன்றி வருமானமின்றிஎத்தனையோ குடும்பங்களில் பிள்ளைகளின் கல்வி, போசாக்கு, சுகாதாரம் என்பனபாதிக்கப்பட்டுள்ளன. இதுஇவ்வாறிருக்க சரியான பயனாளிகள் தெரிவைக் கிராம அலுவலர்களோ கிராம மட்ட அமைப்புக்களோ வழங்குவதில்லை. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் பாதிக்கப்பட்டவர்களாகவேஇருக்கவேண்டிய நிலை காணப்படுகின்றது என்று கூறினார்.

பிரதேசசபை உபதலைவர் நகுலேஸ்வரன் கிளிநொச்சி நகரின் மிகவும் பின்தங்கிய பிரதேசங்களான கிருஸ்ணபுரம், மலையாளபுரம், விநயகபுரம், பொன்னகர், பொன்னகர் மத்தி ஆகிய கிராமங்களுக்குச் சென்று மக்களுடன் கலந்துரையாடினார். இதன் போது அவர்களின் தேவைகளையும் கேட்டறிந்துகொண்டார். விநாயகபுரம் பகுதியில் உள்ள இராணுவ முகாமில் இருந்து வெளியேற்றப்படும் திண்மக்கழிவுப் பொருள்களை மக்களின் குடியிருப்புக்களுக்குப் பக்கத்தில் தொடர்ந்து கொட்டி வருவதால் விநாயகபுரம் பிரதான வீதி [illegible] பகுதிச் சூழலிலோ மக்கள் வாழ முடியாத அளவுக்குத் துர்நாற்றம் வீசுகின்றது. இது தொடர்பாகப் பிரதேச சபையின் உபதலைவரிடம் பிரதேச மக்கள் முறையிட்டதையடுத்து சம்பவ இடத்தையும் பார்வையிட்டுள்ளார்.

இதேவேளை பொன்னகர் கிராமத்தில் நிலவி வரும் தண்ணீர்ப் பிரச்சினை பற்றிக் கேட்டறிந்துள்ளார். அத்துடன் பிரதேச மக்கள் பல்வேறு குறைபாடுகளையும் எடுத்துக் கூறியுள்ளனர். (க-6)





# 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி **பாக்கியம் நாகமணி**

திதி: ஆவணி அபர சதுர்த்தி

பூவுலகில் தாயாக
15.04.1950

விண்ணுலகில் தாயாக
03.09.2004

ஏழாண்டு ஓடி மறைந்தாலும்
மறையவில்லையம்மா மாசற்ற உன்பாசம்
ஏழேழாண்டு ஆனாலும் எம்மை விட்டு
நீங்காதம்மா உந்தன் பசுமை நினைவு.

பிரதான வீதி, மனத்தாவத்தை,
இளவாலை.

குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் கணித ஆசிரியையாகக் கடமையாற்றும் திருமதி எம்.செல்வேந்திரன் (மொறின்) அவர்களின் அன்புத் தாய்

**பிரான்சிஸ்கா யோசவ்**

அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது பாடசாலைச் சமூகத்தினரின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கிறோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/ சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயம்
(ஆண்கள் பாடசாலை)

(8223)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

A/L எழுதிய மாணவர்கள், உயர்கல்வி மாணவர்கள், தனியார் அலுவலர்களுக்கான

சனி, ஞாயிறு புதிய பிரிவு இன்று ஆரம்பம் - 17.09.2011

பிரிவு 1 : காலை 8.00 - 10.00 பிரிவு 2 : காலை 10.00 - 12.00
பிரிவு 3 : மாலை 2.00 - 4.00 பிரிவு 4 : மாலை 4.00 - 6.00

ஆரம்ப வகுப்பு 17.09.2011 - மதியம் 12.30 - 2.00

MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் கல்வி வலய நியமனங்களில் முறைகேடுகள் குறித்து ஆளுநருக்குமனு

## ஆசிரியர் சங்கச் செயலாளர் கையளிப்பு

யாழ்ப்பாணம், செப்.17

அறுபது வயதைக் கடந்த நிலையில் சேவையிலுள்ள மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் முறை கேடான விதமாக நியமனங்களை வழங்குவதாகத் தெரிவித்து வடக்கு மாகாண ஆளுநருக்கு மனு ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ரான்லினாலேயே இந்த மனு கடந்த செவ்வாய்க்கிழமை கையளிக்கப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் மேஜர். ஜெனரல் சந்திரசிறிக்குக் கையளித்துள்ள மேற்படி மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் தொடர்பாக ஜோசப் ஸ்ரான்லினிடம், கேட்ட போது அவர் தெரிவித்ததாவது:

60 வயதைக் கடந்த நிலையில் மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளராகப் பதவியிலுள்ள வெபல் அரச சேவைக்கு முரணான வழியில் செயற்பட்டு வருகிறார்.

மன்னார் மாவட்டத்திலுள்ள வாழ்க்கைப் பெற்றான் கண்டல் றோமன் கத்தோலிக்கத் தமிழ்க்கலவன் பாடசாலை, செட்டியார் கட்டு அடம்பன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய இரண்டு பாடசாலைகளதும் அதிபர் நியமனத்தின் போது முரணான வழிமுறைகளைக் கையாண்டுள்ளார்.

உரிய முறையில் விண்ணப்பங்கள் கோரப்படாது, கல்விப் பணிப்பாளர் தமக்குத் தெரிந்த வர்களுக்கு அதிபர் பதவிக்கான நியமனங்களை மேற்படிப் பாடசாலைகளுக்கு வழங்கியுள்ளார்.

அத்துடன் அந்த மாவட்டத்தின் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் இணைப்பாளர் பதவிக்கான நியமனத்தின் போதும் முரணான வழிமுறைகள் கல்விப் பணிப்பாளரால் பின்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை துணுக்காய் கல்வி வலயம், மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர் ஆகிய பதவிகளிலும் 60 வயதைக் கடந்தவர்களே தற்போது சேவையில் உள்ளனர்.

இதன் காரணமாகத் தகுதியுடைய கனிஷ்ட உத்தியோகத்தர்கள் பதவியுயர்வு பெற முடியாத நிலையில் இருக்கின்றனர்.

இந்த விடயங்கள் தொடர்பாகவே மனுவில் தெளிவு படுத்தி வடக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பிவைத்துள்ளோம் என்றார்.

(எ-15)

# வட்டக்கச்சியில் திருடர் தொல்லை தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை

கிளிநொச்சி, செப்.17

வட்டக்கச்சிப் பகுதியில் இரவில் திருடர்களின் தொல்லையால் மக்கள் அச்சத்துடன் விழித்திருக்க வேண்டிய நிலை காணப்படுகிறது.

கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் இரவில் வீட்டில் உள்ளவர்கள் நித்திரைக்குச் செல்லும் நேரம் பார்த்துவிட்டு வளவுகளுக்குள் வரும் திருடர்கள் பொருள்களைத் திருடுவதற்காக வீடுகளின் கதவு மற்றும் யன்னல்களை உடைத்து வருவதாக மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

கடந்த 11 ஆம் திகதி இரவு 1.30 மணியளவில் வட்டக்கச்சி ஆறுமுகம் வீதியில் வசிக்கும் ஆசிரியரான சத்தியசீலன் என்பவரின் வீட்டின் பின்புறமுள்ள யன்னல் கம்பிகளை உடைத்து வீட்டினுள் நுளைந்து திருடுவதற்குத் திருடர்கள் முயற்சித்துள்ளனர். இதனைக்கண்டு திருடர்களைத் துரத்திச்சென்ற போது வெளியே நின்ற நபர்கள் அவருக்குப் பொல்லுத்தடியால் எறிந்து தாக்கி விட்டு தப்பிச் சென்றுள்ளார்கள். இதனால் அவருக்கு கையில் காயமும் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

மற்றும் கடந்த வாரம் வட்டக்கச்சி சில்வா வீதியில் உள்ள வர்த்தகர் ஒருவரின் வீட்டுக்கும் திருடர்கள் இரவில் சென்று வீட்டின் யன்னலை உடைக்க முயற்சித்தபோது வீட்டுக்காரர்கள் விழித்தெழுந்து சத்தமிட்டுத் துரத்தியபோது திருடர்கள் ஓடிச்சென்று மாயமாகியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இது போன்ற திருட்டு முயற்சிச் சம்பவங்கள் இப்பகுதியில் இரவில் தற்போது அதிகரித்துக் காணப்படுவதாக வட்டக்கச்சி மக்கள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

ஏற்கனவே மர்ம மனிதன் என்ற பீதியில் உறைந்துள்ள இந்த மக்கள் தற்போது வேறொரு ரூபத்தில் உருவெடுத்திருக்கும் திருடர்களுக்கும் அஞ்ச வேண்டிய நிலை தோன்றியுள்ளது.

இவ்வாறான திருட்டுச்சம்பவங்களில் ஈடுபடுபவர்களைப் பிடித்து உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்காக மக்கள் விழிப்பாக இருக்கின்றார்கள் என்பதுடன் ஏனையவர்களையும் விழிப்பாகவும், அவதானமாகவும் இருக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க-426)

# இந்திய உதவியுடன் 25 பாடசாலைகள் புனரமைப்பு

அக்கராயன், செப்.17

துணுக்காய் கல்வி வலயத்தில் 25 பாடசாலைகள் இந்திய அரசின் உதவியுடன் புனரமைக்கப்படவுள்ளன.

போர்க்காலத்தில் சேதமடைந்த பாடசாலைகளே முன்னுரிமை அடிப்படையில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.


இந்தப் புனரமைப்புப் பணிகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

இதேவேளை துணுக்காய் வலய மாந்தை கோட்டக் கல்விப் பணிப்பாளருக்கு வடமாகாண அளுநரினால் மோட்டார் சைக்கிள், மடிக்கணினி, புகைப்படக்கருவி என்பன வழங்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் கோட்டத்தின் செயற்பாடுகளை வலுப்படுத்த முடியுமெனத் தெரிவிக்கப்பட்டது.

(க-410)

## முறைப்பாடு பயன் தருமா?...



பயன்தருசேவை:- கிளிநொச்சி இராமநாதபுரத்தில் நடைபெற்ற நடமாடும் சேவையின்போது பொலிஸார் பொதுமக்களுக்கு முறைப்பாட்டுப் பிரதிகள் வழங்குகின்றனர்.

# அக்கராயன் மகா வித்தியாலயத்தின் மாணவர்,ஆசிரியர் புழுதிக்குளியல்

அக்கராயன், செப்.17

கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயத்துக்கு வருகை தரும் ஆசிரியர்கள், மாணவர்கள் புழுதிக் குளியலை எதிர் கொண்டுள்ளனர்.

ஸ்கந்தபுரத்தில் இருந்து அக்கராயன் மகாவித்தியாலயம் வரையான 2 கிலோமீற்றர் தூரம் கொண்ட இந்த வீதி கிரவல் கொண்டு புனரமைக்கப்பட்டுள்ளது.

பாடசாலை நேரங்களில் இந்த வீதியால் மாணவர்கள் வெள்ளை ஆடையுடன் வரும்போது கனரக வாகனங்கள் பயணிக்கும் போது மாணவர்கள் வீதிப்புழுதியால் மூழ்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

மாணவர்களின் நிலையைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வீதிக்கு 'தார்' ஊற்றும் பணியை மேற்கொள்ளுமாறு ஆசிரியர்கள், மாணவர்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(410)

# அக்கராயன் பாடசாலைக்கு புதிய கட்டடம்

அக்கராயன், செப்.17

கிளிநொச்சி அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்துக்குப் புதிய கட்டடம் அமைக்கும் பொருட்டு சிரமதானப் பணிகள் பெற்றோர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்துக்குப் புதிய கட்டடம் அமைப்பதற்கான காணி இனம் காணப்பட்டுள்ளது.

அக்கராயன் மகாவித்தியாலயத்துக்கு அருகில் 1996 இல் கிளிநொச்சி இடம்பெயர்வுடன் கிளிநொச்சி மத்திய கல்லூரி இயங்கிய இடத்தில் அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்துக்கான புதிய கட்டடம் அமைய உள்ளது.

இந்தக் கட்டடம் அமைய உள்ள இடத்தை கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கி.சின்னராசா, அக்கராயன் மகாவித்தியாலய அதிபர் த.கண்ணபிரான் மற்றும் அக்கராயன் ஆரம்ப வித்தியாலய பெற்றோர் அபிவிருத்திச் சங்கத்தினர் இணைந்து தெரிவு செய்துள்ளனர்.

கட்டடம் அமையவுள்ள இடத்தைத் துப்புரவு செய்து கட்டட வேலைகள் மிக விரைவில் தொடங்கவுள்ளன. அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தின் பணிகளில் பெற்றோர்கள் தமது பங்களிப்பை வழங்குமாறு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் வேண்டியுள்ளது.

(க-410)

# கால்நடைகளால் சந்தை நடவடிக்கை பாதிப்பு

வவுனியா, செப்.17

வவுனியா பொதுச்சந்தைப் பகுதியில் கட்டாக்காலி கால்நடைகளால் பெரும் சிரமத்தை எதிர்கொள்வதாக விற்பனையாளர்களும் அங்கு வரும் நுகர்வோரும் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பொதுச் சந்தையானது வவுனியா மாவட்டத்தில் பிரதான சந்தையாக விளங்குவதால் இங்கு ஏராளமான நுகர்வோர் நாளாந்தம் வந்து செல்கின்றனர். மேற்படி சந்தைப் பகுதியில் உள்ள கட்டாக்காலி கால்நடைகளால் விற்பனையாளர்களின் மரக்கறிப் பொருள்களில் வாய் வைப்பதாலும் சந்தைப் பகுதியில் அசுத்தத்தை ஏற்படுத்துவதாலும் விற்பனையாளர்கள் சீராக வியாபாரத்தை மேற்கொள்ள முடியவில்லை என்றும் நுகர்வோர் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் தாமதம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர். அத்துடன் வியாபாரிகளுக்கும் பொருள் நட்டமும் ஏற்படுகின்றது.

எனவே, சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்த விடயத்தில் அக்கறை செலுத்திக் கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்த நட வடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க-எ-421)

## தற்காலிக வீடு கூட கிடைக்காத அக்கராயன் அரச ஊழியர்

இந்திய வீட்டுத்திட்டம் வரும்வரை தற்காலிக வீடுகளை அக்கராயன் அரச ஊழியர்கள் பெற்றுக்கொள்ள முடியுமென கிளிநொச்சி அரச அதிபரினால் தெரிவிக்கப்பட்ட போதும் அக்கராயன் அரச ஊழியர்களுக்கு இதுவரை தற்காலிக வீடுகள் வழங்கப்படவில்லை.

அக்கராயனில் அரச ஊழியர்கள் நிரந்தரவீட்டுக்குக் காத்திருக்கும் நிலையில் மாரிகால மழையினைக் கருத்தில்கொண்டு அரச ஊழியர்களுக்குத் தற்காலிக வீடுகளை முதலில் வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டது. ஆனால் மழை காலம் நெருங்கிவரும் நிலையில் தறப்பாள் கொட்டகைகளில் தங்கியுள்ள அரச ஊழியர்களுக்குத் தற்காலிக வீடுகள் கிடைக்கவில்லை.

மழை காலத்தினை கருத்தில்கொண்டு அக்கராயன் அரச ஊழியர்களுக்கு முதலில் தற்காலிக வீடுகளை வழங்க அரச அதிபர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அக்கராயன் அரச ஊழியர்கள் வேண்டியுள்ளனர். அக்கராயன் மத்தியில் 18 வரையான அரச ஊழியர்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-410)

# பெரும் நீர்த்தேக்கத்தை அமைக்குமாறு வன்னேரிக்குளம் மக்கள் கோரிக்கை

அக்கராயன், செப்.17

கிளிநொச்சி வன்னேரிக் குளத்தையும் தேவன்கட்டையையும் இணைத்துப் பெரும் நீர்த்தேக்கம் ஒன்றினை உருவாக்கும் முயற்சியை வேகமாக முன்னெடுக்குமாறு வன்னேரிக்குளம் கிராம மக்கள் கிளிநொச்சி அரச அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வன்னேரிக்குளம் உவர் அடையும் ஆபத்தின் விளிம்பில் உள்ளது. எமது கிராமங்களில் ஒன்றான குஞ்சுக்குளம் கிராமம் மற்றும் அயற்பகுதிகள் உவரடைந்துள்ளன. வன்னேரிக்குளம் வயல் நிலங்களின்சில இடங்கள் உவரடையத் தொடங்கியுள்ளன.

இந்த நிலையில் வன்னேரிக் குளத்தையும் தேவன்கட்டையும் இணைத்து விவசாய முயற்சிகளை முன்னெடுப்பதன் மூலம் வன்னேரிக்குளம் வளமடையும். அத்துடன் உவரடையும் போதும் எமது கிராமத்தையும் பாதுகாக்க முடியும் என்றும் வன்னேரிக்குளம் கிராம மக்களால் கிளிநொச்சி அரச அதிபருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

(க-410)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
17 செப்ரெம்பர் 2011 சனிக்கிழமை

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் கிடைக்கப்பெற்ற பெறுபேறுகள் சில

**சுன்னாகம் ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை**

பா.சானுஜா-183, கே.நிதர்சன்-179, சி.சிவனுஜா-178, ஆ.ராகுலன்-165, கி.சங்கர்சன்-158, உ.பிரியங்கா-156, ச.ஷாரு -155, ர.வினித்-155, இ.மதுர்ஜா -153, வை.ஜனோஜன்-153, ம.ரம்மியா-152, வி.யசோதரன் -152

**ஆனைப்பந்தி மெ.மி. வித்தி.**

அ.ரிதூஸ்கர்-175, ஜெ.அனோஜ் -175, இ.பிரியங்கன்-164, சி.சாம்பவி-161, வ.கிருஷ்ணவர்ணன்-159, வி.விதுஷா -157, செ.திலீபா-156, உ.விதுஷன்-156, மு.பிரனேஸ்-153, ச.தமிழ்ப்பிரியன்-151, து.காயத்திரி-151.

**வயாவிளான்மம.வித்தியாலயம்**

ச.தனோஜிதன்-179, ம.சுவேதா-170, த.லோஜிகா -166, ர.தேனுஜா-165, க.சுகந்தா-164, த.பிரசாந்தன்-164, ம.பிருந்திசியா-157, நி.அஞ்சனா-154, த.அனுஷ்-153, அ.டிலக்ஷன்-153, ம.தனிஸ்தா-152.

**அளவெட்டி அருணோதயக் கல்லூரி**

ச.தர்சன்-183, உ.தனுஜன் -173, க.டிசாந்தன்-166, ர.சிவகஜன்-165, இ.மிதுளா-165, செ.பிந்துஜன்-164, சி.பிரியா -163, ஜே.ஜெருசிகா-152, தி.அட்ஷயன்-151.

**பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்**

இ.துவாரகன்-181, இ.சாகித்தியா-173, ஜெ.பிருந்தாபன்-162, நா.நவசுஜிதா-161.

**இளையதம்பி இந்து வித்தியாலயம்**

ச.கனிஸ்ரன்-159, மு.சோபன்தாஸ்-157.

**நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை**

வி.சஞ்சித்-172, யோ.வேணுஷன்-168, யோ.மதுஷனன்-167, யோ.நிருஷிகன்-166, பி.விதுர்ஷன்-166, கு.பிரகலாதன்-166, ர.அபிராம்-164, இ.மதீஷன்-163, க.கிரிஷிகன்- 161,சி.ஆரணன்-160, செ.மைத்திரேஜி -160, தி.சோபணா-159, ம.ஹர்சிகா -159, ஜ.ஹரிஸ்மேனன்-158, ர.சுபீட்ஷனன்- 158, சி.ஷாமிலிக்கா-158, ஜெ. கஜிதா 156, செ.அனு ராஜ்-155, கு.ஷதுஜா-155, ச.சாருஷன் -155, ஞா.துவாரகன்-153.

**சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை**

ப.சாஜிகா-188, இ.லக்சாஜினி-183, த.சுந்தர்பவன்-182, சி.நிரோஜன்-181, சி.அஜந்தன்-175, சி.நாகபூசணி-174, உ.பவலக்ஷன்-173, மு.செளமியா-169, க.ராதிகா-169, ப.நர்மதன்-168, செ.அஜித்தா-168, ம.பானுகா-168, சி.பிருந்தன்-167, பி.ஸ்ரீராம்-167, ம.கீதாஞ்சலி-165, க.கவுதினி-164, சி.சங்கவி-163, செ.இளங் கதிர்- 160, த.சாகித்தியன்-159, ஸ்ரீ.சயிந்தவி-159, உ.சங்கீர்த்தன்-156, சி.கேனுஜா-156, இ.சுதர்சன் -155,நி.சங்கீதா-155, ம.துளசிகா- 155, லி.சகானா-153, ச.தனுஜா-151, க.அபிநயன்-151, ஸ்ரீ.சாருஜா -151.

**உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி**

ர.வாகேஷ்-182, த.கலியுகன் - 176, ரஜீபன்-172, யோ.ரஞ்சித்குமார்-155, ந.ஆர்த் திகன்-154, ரா.சாருஜன்-153.

**மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலை**

தி.மேனுஜன்-176, சு.துலக்ஷன்-169, த.கோபிகன்-166, சி.குயின்ஜிகா-162, செ.அபினா -162, க.அபிராஜ்-159, றி.கோஷிகன் -156

**ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை**

பா.மிசோதன்-184, சி.தேனுசன்-182, அ.திவாணா-178, தே.கிருபானந்-175, சூ.சாரு ஜன்-174, ப.தாருகா-167, சு.டாரணி-165, இ.பிரவீனன்- 162, ஜீ.ஹரிகரன் -160, தே.மறீன் நிகிலா-160, சி.சங்கவன்-158, ந.செளமியா -158, பா.அமலன்-155, ற.நிதர்ஷனா-155, செ.சாரங்கன்-154, ச.கார்த்திகா-154, ப.கிஷாணி -153, ம.திவ்யா-152, இ.ஹார்த்தியாயினி-151, அ.சுவர்ணா-151

**நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்**

அ.பே.மரியபேட்சிகா-172, ஜோ.சதுரியன்-161, மி.மேரி ஸ்ரெபானி-154, அ.க.அன்ரனி செலோஜியினி-151.

**சென். பற்றிக்ஸ் கல்லூரி,**

ஏ.எப்.அஜித்குமார்-180, ஜே.ஆர்.கியூபேர்ட்-169, பி.சாருஜன் -167, ஆர்.நிதர்சன்- 167, ஜே.ஜெறக்சன்-165, யூ.சிந்துஜன்- 165, ஈ.ஜே. தினேஸ்காந்-161, பி.அபிஷேக்- 161, ஆர்.டனோசிகன்- 161, ஜே.ஜோசப்- 159, எஸ்.துலக்சன்-159, ஆர்.பிராங்ளின்-158, ஆர். சதுஜன்-155, என். பவிராஜ்- 155, சீ.ஜே. ஜூட் டெவின்சன்-151, ரீ.சிவசங்கரராஜ்-151.

**யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடம்,**

எஸ்.ஜாதிகா-164, சீ.ஜெனிபர்-163, எப்.சியோமி -162, ஏ.அபிஷா, 161, கே.ஜெனிபர்-161, ஆர்.ஜீவிதா- 161, ஜே. ஆன் டிலுக்சிகா-160, ஏ.அனற்றா -159, எல்.லூசினா- 158, எஸ்.பிரியதர்சினி- 157, ஏ.அர்சனா-152.

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி,**

ர.தேனுசன்- 170, இ.வேணுசாந்-168, சு.யசோதரன்- 167, த.சாருகாசன்-164, எ.விதுசன்-164, வி.விதுசன்- 157, சி.றிலக்சன்-155, ஜெ. துஷாந்-155.

**யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை,**

ஜெ.சங்கீர்த்தனா- 180, இ.ஜனுஷா- 178, வ.டிலோஜனா-173, ற.டிலக்ஷிகா- 171, ந.கேசினி-171, ரா.கஸ்தூரி-170, ஜீ.தாட்ஷாஜினி- 166, ச.லினோஜி -165, கு.பானுஜா- 163, கோ.கஜேந்திக்கா- 161, ம.கீர்த்திகா- 159, ச.ஹரிஸ்யந்தி- 159, தி.விதுஷிகா-157, கி.யதுஷிகா- 157, கு.கார்த்திகாயினி- 156, செ.டாக்ஷாயினி- 156, ந.அபிநயா- 155, ர.சோபனா- 155, கா.சித்தாரா- 154, ர.கீர்த்தனா- 154, இ.அனுஷா -153.

**நெடுந்தீவு றோ.க. பெண்கள் கல்லூரி,**

மேரிதனிஷா-163,யூ. பிறின்ஸ் - 162, ம.பிரியதுஷா-153.

**சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி,**

ர.சிலோஜன்- 179, பா.றொபின்சன்- 172, ர.நிருபனா-168, ர.வுசைன்- 167, சூ. அபிசன்- 153.

**யாழ். இந்து ஆரம்ப பாடசாலை**

லோ. டிலோஷன்-191, ப. பவதாரகன்-190, இ. மாதங்கி- 188, சி. தன லக்ஷன்-187, சு.மிருதி -186, அ.தமிழ்ப்பிரியா-183, சி. தனுஸ்ரன் -183, பா.சாருணி -152, இ.கலைநிலா, 182, சி. அநுபமா-181, ச. சங்கவிதா, 181, ச. கலாதரன்-180, ந. வித்தியாசகன்-180, ஜெ. சன்னுதாங்கி-180, வி.லிசானி -180, இ.திஷோக்-179, ஜோ.சார்ள்ஸ் -179, வி.துவாரகன்-178, த.கஜானன்-177, உ.சுதர்சன்-177, க.விந்துஜன்-177, சோ.துவாரகா-177, கி.ஆர்த்தி கன்-176, சி.சிவபுஜன்-175, சி.துஷிதன்-175, கு.கஜானி-175,ச.லக்ஷன்-173, ப.நிலாஜன்-173, ஜ.திவ்யனி-173, சி.திவாகரன்-172, சி.மனாமிர்தன்-172, இ.அபிநயன்-172, க.தர்ஷனா-172,பே.விஷ்ணுகா-171, கு. அபிஷரன்,171 ப.கோபிராம்-171, சு.கோபிசன்-170, ர.ராகப்பிரியா-170, சி.சஞ்சீவன்-170, சு.கிருஷிகா-169, கு.தீபிகா-169, பா.பிரவீன சர்மா - 168, சி.செளமியா -168, ம.சங்கீத்-168, மு.பிரகஜன்-168, தா.ஜெயடான்சி- 168,ச.வினோஷன்-167, நா.துவாரகன்- 167, வ. அவனிகா-167, பா.ஷாம்பவி-167, சி.சுபோதினி-167, கி.ஆரூரன்-166,ச. சகீர்த்தன்- 166, ந.லக்சிகா-166, லி.துவாரகன்-165, செ.கோபிகிஸான்- 165, சி.யதுர்ஷன்-165, வி. ஜதுகுலன்- 164, மு.திஷாந்-164

பா. ஆதிரையன்-164, செ.தர்சிகன்- 164, பி.கபிலேஷ்-164, ஸ்ரீ.ஜதுவி-164, சி.லோகஜன்-164, ச.விஷ்ணுகா-163, தே.சிவவருணன்-163, ச.கஜதீபன்-162, சி.சிவாம்ஸன்-162, ம.சிவஷாயினி-162, சு.பரணீதரன்-162, ப.அஸ்விணி-161, ம.ஹரிகரன்-161, ப.லக்ஷிகா-160,ச.சிவதர்சன்-160, சோ.துவாரகா-160, தா.ஜிவசாந்-159, ம.லவதர் சன்-159, க.வாகீசன்-158, இ.திவிதரன்-158, சு.கஜானன்-158, சி.பிரணவன்-157, ப.கபிலினி-157, பி.ஹம்சாயினி- 157, சு.சிவானுஜா-157, சூ.ருகித்-157, கி.வைஷ்ணவி -157, து.சிவசங்கர் -156, அ.கோபிகன்-156, க. அபிமன்யூ-156, ஐ.வைஷ்ணவி- 156, ஏ.திலக்சனா- 156, சு.வித்தியாபவன், 155, உ.சுருதி-155, தி. இனியவன்- 155, சு.கிருபாலினி-155, பா.பாலமயூரி- 155, த.திலக்சன்- 154, ஸ்ரீ.துவாரகன்- 154, கு.உமாகாந்தன்-154, லோ. தவக்குமரன் -154, கெ.தரண்ஜா- 153, இ.நிதுஜா- 153, இ.பிரணவன்-152, சி.திவிக்ஷனன்-152, வி.திலக்ஷன்-152, த.கஜன்-152, அ. குருசுதன்-152, வி.ராகவன்-151, த.டினேஸ்-151, இ.அபிநகா- 151, ஜீ.மிதுனா- 151.

**ஒட்டுசுட்டான் ஆறுமுகம் தமிழ் வித்தியாலயம்**

உ.ஜெனார்த்தனி - 171, கி.ஆரணி - 169, இ.லக்சிகன் -158, க.கருபாட்சன் - 154, சா.சர்மிளா - 150, த.ஜென்சிகா - 149

**முத்துஐயன் கட்டு இடது கரை அ.த.க.பாடசாலை**

ச.டிசாந்தன் - 156,பா.நிக்சிதா - 155,ஆ.தாரணி - 149

**மல்லாவி யோகபுரம் மகாவித்தியாலயம்**

தி.எடின்சிகா - 159, வ.மயூரதன் - 157

**மல்லாவி மயில்வாகனம் தமிழ் வித்தியாலயம்**

பா.அஜிந்தன் - 176, ம.அனித்தராஜினி - 160, சி.பிரணவராஜ் - 151, ஜெ.நிவேதன் - 148

**தேறாங்கண்டல் அ.த.க. பாடசாலை**

வ.உஷாளினி - 153

**ஆரோக்கியபுரம் தமிழ் வித்தியாலயம்**

க.வ்சீகரன் - 167

**அனிஞ்சியன் குளம் தமிழ்க் கலவன் வித்தியாலயம்**

அ.சண்முகப்பிரியா - 182, செ.சங் கவி - 175, து.யதுர்சன் - 164

**ஐயன்கன்குளம் அ.த.க. பாடசாலை**

க.சங்கீத் - 154

**பாலிநகர் மகாவித்தியாலயம்**

ச.குயின்றா - 153, ஜெ.ஜெலுக்சன் - 154

**பாண்டியன் குளம் மகாவித்தியாலயம்**

வா.திலக்சன் - 152.

# எமது சமூகம் முழுமையடைய வேண்டுமாயின் தொழில் நுட்ப ரீதியிலான வளர்ச்சி தேவை

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கருத்து

கிளிநொச்சி, செப்.17

கல்வித்துறையில் மாத்திரமின்றி அறிவியல் தொழிநுட்பத்திலும் வளர்ச்சி காணுவதே எமது சமூகம் முழுமை பெற உதவும் என்று கரைச்சிப் பிரதேச சபையின் உபதலைவர் வ.நகுலேஸ்வரன் தெரிவித்தார்.

கல்வி நிறுவனம் ஒன்றின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மதிவதனன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கெளரவ அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

60 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வந்த ஆயுத, அகிம்சைப் போராட்டங்களின் காரணமாக எமது பிரதேசத்தின் கல்வி அபிவிருத்தி முழுமை பெறாத நிலை காணப்படுகின்றது.

பாடசாலைக் கல்வி முறை ஊடாக அடைவு மட்டம் அதிகரித்திருக்கின்ற போதிலும் தகவல் தொழிநுட்பம் போன்ற அறிவியல் வளர்ச்சிகளில் மந்த நிலை காணப்படுவது கவலைக்குரியதாக இருக்கின்றது.

சந்தர்ப்பங்களையும், வாய்ப்புக்களையும் எமது மாணவர்களுக்கு வழங்காது வந்தமையே இத்தகைய பின்னடைவுகளுக்குக் காரணம்.

எமது பிரதேச மக்களுடைய வாழ்க்கைத்தர நிலையை உணர்ந்தவர்களாக உழைப்பு நோக்கங்களுக்கு அப்பால் கணினிப் பயிற்சிகளை வழங்கி எமது பிரதேசத்தில் துறைசார்ந்த வளமுடையவர்களை உருவாக்கிய பெருமை இந்த நிறுவனத்துக்கு உரியது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கி.சின்னராசா சிறப்பு விருந்தினர்களாக பாடசாலை அதிபர் களான அ.பங்கையற் செல்வன், ஐ.குகானந்தராசா, திருமதி. கே.ஜெயராஜ் ஆகியோருடன் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(உ-426-301-06)

# கத்தோலிக்க மனைப் பாடசாலைப் பரீட்சை

வலி- வடக்கு,செப்.17

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படும் கத்தோலிக்க மனைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை இன்றும் நாளையும் நாடு முழுவதும் நடைபெறவுள்ளதாக இலங்கை பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் அனுர எதிரி சிங்ஹா அறிவித்துள்ளார்.

விண்ணப்பங்களை அனுப்பியவர்களுக்கான அனுமதி அட்டைகள் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன.

தேவைப்படுவோர் மேலதிக விவரங்களுக்குப் பரீட்சைகள் திணைக்களத்தின் 0112-785230, 0112 - 2784232 தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-86)

# அறநெறிப்பரீட்சை

வலி- வடக்கு,செப்.17

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படும் அறநெறிப்பரீட்சை பாடசாலைகளின் இறுதிச் சான்றிதழ் பரீட்சை இன்றும் நாளையும் அகில இலங்கை ரீதியாக நடைபெறவுள்ளதாக இலங்கைப் பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் அனுர எதிரி சிங்ஹா அறிவித்துள்ளார்.

பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் தபால் முலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்களும் குறிப்பிட்ட பரீட்சை சம்பந்தமான மேலதிக தகவல்களைப் பெற விரும்புபவர்களும் 0112784232, 0112785230 தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழல் தாக்க மதிப்பீடுகள் ஏதுமின்றி சம்பூர் அனல்மின் நிலையம் அமைப்பு

## வன்மையாகக் கண்டிக்கிறார் திருமலை நகரசபை உறுப்பினர்

மூதூர், செப்.17

அனல்மின் நிலையத்தையோ, தொழிற்சாலை ஒன்றையோ நிறுவும்போது அல்லது அபிவிருத்தித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தும்போது சூழல் தாக்க மதிப்பீடு மேற்கொள்ளும் நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். சம்பூர் அனல்மின் நிலைய அமைப்பு விடயத்தில் அவ்வாறான நடைமுறை பின்பற்றப்படவில்லை என்று திருகோணமலை நகர சபை உறுப்பினர் நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:

சம்பூர் பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ள அனல்மின் நிலையத்தில் இந்தப் பிரதேசத்துக்குள் அடங்கும் சுமார் 40இற்கு மேற்பட்ட குளங்களின் நீரின் அளவு குறைவடைவதுடன், நீர் தரமிழந்து போகவும் வழி ஏற்படுகின்றது.

இந்தப் பிரதேசத்தில் குளங்கள் பரந்து அமைந்திருந்ததனாலேயே மண்ணின் ஈரப்பதன் பாதுகாக்கப்பட்ட ஒரு பசுமையான போர்வை இயற்கைக் காடுகளாக அமைவு பெற்றுள்ளன. அத்துடன் பல்லாயிரக் கணக்கான உயிரினங்களைப் போசித்த குளங்கள் சிதைவடையும்போது உயிர்ப் பல்வகைமை முற்றாக இழக்கப்பட ஏதுவாகின்றது.

இந்தநிலையில் அனல்மின் நிலையம் இயங்கத் தொடங்குமாயின் அமில மழையின் தாக்கம், புகைமூட்டம் போன்றவற்றால் சுகாதார ரீதியான ஆபத்துகளை எதிர்நோக்க வேண்டியேற்படும்.

அத்துடன், அனல்மின் நிலையத்தில் இருந்து வெளியாகும் சுடுநீர் கொட்டியாரக்குடாக் கடலில் கலக்கவிடப்படுவதால் இங்குள்ள முருகைக்கல் பாறைகள் சிதைவடைந்து போவதுடன், இங்கு காணப்படும் மீனினங்களும் அழிவடையவுள்ளன. மீன்பிடியில் தங்கியிருக்கும் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த சிங்கள, தமிழ், முஸ்லிம் மீனவர்களும் பேராபத்தையும், பொருளாதார ரீதியான பாதிப்பையும் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும்.

அனல்மின்நிலையம் அமைப்பதனால் கிடைக்கும் மின்சாரத்தின் மூலம் பெறப்படும் வருமானத்தைவிட செழிப்பான பிரதேசமும் அம்மக்களின் வாழ்வாதாரமும் சிதைக்கப்படுவதனால் ஏற்படும் பொருளாதார இழப்பே அதிகமாகும். பல ஆயிரக்கணக்கான ஏக்கர் பரந்து கிடக்கும் திருகோணமலை மாவட்டத்தில் மேற்கூறிய சூழல் பாதிப்புகள் நேராத வகையில் அனல்மின்நிலையம் அமைப்பதற்குத் தெரிவுசெய்யக்கூடிய பொருத்தமான நிலங்கள் ஏராளம் காணப்படும்போது அதனைக் கவனத்திற்கொள்ளாது இலங்கை - இந்திய அரசுகள் சம்பூரில் அமைக்க வேண்டுமென விடாப்பிடியாக இருப்பது இந்தப் பிரதேச மக்களைப் பொறுத்தவரை கவலைதரும் விடயமாகும்- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## ரணில் கல்முனைக்கு வருகை

அம்பாறை, செப்.17

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாளை ஞாயிற்றுக்கிழமை கல்முனைக்குச் செல்லவுள்ளார்.

கல்முனை மாநகரசபைத் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் உரையாற்றுவதற்காகவே அவர் அங்கு செல்லவுள்ளார் என்று கல்முனைத் தொகுதி ஐ.தே.க. பிரசாரச் செயலாளர் செயிட் அஸ்வான் சக்காப் மௌலானா தெரிவித்துள்ளார்.

கல்முனை, மருதமுனை, சாய்ந்தமருது, நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு ஆகிய இடங்களில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ஐ.தே.க. பிரசாரக் கூட்டங்களில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றவுள்ளார்.

ஐ.தே.க. பிரதித் தலைவர்களான கரு ஜயசூரிய, சஜித் பிரேமதாஸ உட்பட மற்றும் பல முக்கியஸ்தர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும், கிழக்கு மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் தயா கமகே ஆகியோரும் இக் கூட்டங்களில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தவுள்ளனர் என்று பிரசாரச் செயலாளர் மௌலானா தெரிவித்துள்ளார். (ச)

## கிழக்கு மாகாண பாடசாலை வெற்றிடங்களை நிரப்ப அங்கீகாரம்

மூதூர், செப்.17

கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் நீண்டகாலமாக நிரப்பப்படாமல் உள்ள பாடசாலைப் பணியாளர்கள் வெற்றிடங்களுக்கு 343 பேரை நியமனம் செய்வதற்காக கிழக்கு மாகாண அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்தப் பாடசாலைகளில் நீண்ட காலமாக நிரப்பப்படாமல் உள்ள வெற்றிடங்களுக்கு பாடசாலைப் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட வுள்ளனர் என்று வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், வீடமைப்பு நிர் மாண கிராமிய மின்சாரம், நீர்வழங்கல் அமைச்சர் எம். எஸ். உதுமாலெப்பை தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாக முன்பள்ளி ஆசிரியர்களாக கொடுப்பனவு இன்றிக் கடமையாற்றிவரும் 930பேருக்கு மாதாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவாக 3ஆயிரம் ரூபா வழங்குவதற்கும் அமைச்சரவை அனு மதி வழங்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)



மட்டக்களப்பிலிருந்து கதிர்காமத்துக்குப் பாதயாத்திரை செல்பவர்களுக்காக வத்தாறுமூலை மகாவிஷ்ணு ஆலயத்துக்கு முன்னால் தங்குமிடக் கட்டடம் அமைப்பதற்கு அடிக்கல் நடும் விழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் அழகையா கோதாசன் தலைமையுரையாற்றுவதையும் அருகில் கதிர்காம யாத்திரிகர் தொண்டர்சபைத் தலைவர் எஸ்.ரி.எஸ்.அருளானந்தன், தொழிலதிபர்கள் பி.தமிழ்ச் செல்வன், கே.சண்முகராசா உட்படப் பலர் அமர்ந்திருக்கின்றனர். (ச)

## நகைத் திருட்டில் ஈடுபட்டவர் கைது

திருகோணலை,செப்.17

கிண்ணியா, மாஞ்சோலைப் பிரதேசத்தில் திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட ஒருவரை கிண்ணியாப் பொலிஸார் அண்மையில் கைது செய்துள்ளனர்.

மாஞ்சோலைப் பிரதேசத்தில் கடந்தவாரம் பட்டப்பகலில் வீடு புகுந்து சுமார் 8 லட்சம் ரூபா பெறுமதியான 13 பவுன் நகை கள் திருடப்பட்டதாக கிண் ணியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப் பட்டிருந்தது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# நுகேகொடையில் தேடுதல்

நுகேகொடை, செப்.17

நுகேகொடை பிரதேசத்தில் அண்மையில் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 82 பேர் உட்பட 140 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மோசடிகளில் ஈடுபட்டு நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 49 பேரும், மதுபோதையுடன் வாகனம் செலுத்திய மூவரும், சந்தேகநபர்கள் ஆறு பேரும் இவ்வாறு கைது செய் யப்பட்டுள்ளவர்க ளில் உள்ளடங்குகின் றனர்.

வீதி ஒழுங்கு விதிகளை மீறி வாகனம் செலுத்தியமை தொடர்பாக சுமார் 406 வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மேலும் சுமார் 2,115 மில்லி கிராம் ஹெரோயினும், 12 லட்சத்து 60 ஆயிரம் மில்லிகிராம் கஞ்சா போதைப்பொருளும்,48 ஆயிரத்து162 மில்லி லீற்றர் சட்டவிரோத மதுபானம் மற்றும் ஒரு லட்சத்து 74 மில்லி லீற்றர் கோடாவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

நுகேகொடை பிராந்திய பொலிஸ் அதிகாரி தேசபந்து தென்னகோனின் பணிப்புரையின் பேரில் நுகேகொடை பொலிஸாரால் மேற்கொண்ட சுற்றிவளைப்பிலேயே இந்தச் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச)

# திருமலை சந்தை எல்லைக்குள் தொல்பொருள் அகழ்வாராய்ச்சி



மூதூர், செப் 17

திருகோணமலை, குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவில் பொலிஸ் நிலையத்துக்கு முன்னாலுள்ள பிரதேசசபைக்குச் சொந்தமான பொதுச் சந்தைக் கட்டட எல்லைக்குள் தொல்பொருள் அகழ்வாராய்ச்சி நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.1952ஆம் ஆண்டு காலப் பகுதியில் இங்கு தொல்பொருள் ஆராய்ச்சி நடந்ததாகவும் பின்னர் 1972ஆம், 1978 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சி நாட் டின் அசாதாரண சூழ்நிலை காரணமாகக் கைவிடப்பட் டிருந்ததாகவும் தொல்பொருள் ஆராய்ச்சி நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் சமாதானமான சூழ்நிலை உருவாகியுள்ளது. இதனால் மீண்டும் தாம் இங்கு அகழ்வாராய்ச்சி நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர் என்று அவர் கூறினார். (ச)

# பணிப் பகிஷ்கரிப்பு முடிவு

மாத்தளை கொங்காவல பஸ்நிலையத்திலிருந்து இறத்தோட்டை வழியாகப் பயணிக்கும் பஸ்கள் அம்பகமுவ பஸ் நிலையத்தில் நீண்ட நேரம் நிறுத்தப்படுவதை ஆட்சேபித்து மாத்தளை, இறத்தோட்டை நகர்சேர் பஸ் சேவையாளர்கள் மேற்கொண்ட பகிஷ்கரிப்பு முடிவுக்குக் கொண்டு வரப்பட் டுள்ளது.

இந்த பஸ்கள் அம்பகமுவ பஸ் நிலையத்தில் ஒரு நிமிடநேரம் மட்டும் தரித்து நிற்கவே அனுமதியிருந்தது. எனினும் அவை மேலதிக நேரத்தை எடுத்துக்கொண்டன. இறத்தோட்டை நோக்கிச் செல்லும் பஸ்களுக்கு முன்பாக இவை நிறுத்தப்பட்டு பயணிகள் ஏற்றப்பட்டனர்.

வெலவ்வத்த, கம்மடுவ,வனராணிய உட்பட நீண்ட தூர பஸ்கள் இவ்வாறு நிறுத்தப்படுவதை ஆட்சேபித்தே பணி பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்பட்டது.

இந்த முறைப்பாடு கிடைத்ததும் போராட்டக் காரர்க ளுடன் கலந்துரையாடி அம்பகமுவ பஸ் நிலையத்தில் ஒதுக்கப்பட்ட நேரத்தை விட அதிக நேரம் எடுக்கும் பஸ் சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பஸ் நிலைய நேரக்கட்டுப்பாட்டாளருக்குத் தான் உத்தரவிட்டதையடுத்து வேலை நிறுத்தம் வாபஸ் பெறப்பட்டது [illegible] சபையின் [illegible] யூ.ஆர்.சூரியவன்ச தெரிவித்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூத்தாடும் கூட்டம்



''கூத்து'' எப்பொழுது ஆடத்தொடங்கி இருப்பார்கள்? கோயில்களில் மட்டும் ஏன் கூத்து ஆடப்பட்டு வருகின்றது. கூத்துக்கலை ஏன் ஆலய வழிபாட்டுடன் இணைந்தது? இப்படிப் பல கேள்விகள் கூத்துப்பற்றி என்னுள் இயல்பாக எழுவதுண்டு.

உழைத்துக் களைத்த மக்கள் ஆனந்தமாக இருக்கக் கூத்தாடி இருக்க வேண்டும்.

அனேகமான இடங்களில் அறுவடை முடிந்த பின்னரே அதாவது சித்திரைக்குப் பின்னர் வைகாசி, ஆனி மாதங்களிலேயே கூத்து ஆடப்பட்டு வருகின்றமை இதனை உறுதி செய்கின்றது.

அத்தோடு அறுவடை முடிந்த பின்னர் பணப்புழக்கம் மக்கள் மத்தியில் காணப்படும் என்ற நிலையும் இதற்கு ஒரு காரணமாக அமையும்.

பச்சிலைப்பள்ளியில் மிகவும் பிரபல்யமான கூத்துவகை காத்தவராயன் கூத்துத்தான். அறத்தியம்மன் கோயில், சின்னத் தாழையடி முத்துமாரியம்மன் கோயில் போன்ற கோயில்களிலும் இன்னும் பல சிறு கோயில்களிலும் அவற்றின் பொங்கல் குளிர்ச்சியில் இந்த கூத்து ஆடப்பட்டு வருகிறது.

காத்தான் கூத்து ஆடப்படத் தொடங்கி இன்றைக்கு 400, 500 வருடங்கள் ஆகி இருக்கலாம். மிகப் பழைமையான கலை வடிவமாக இதனை நான் கருதுகின்றேன்.

நான் அறிந்த வரை 10,12 தலைமுறையாக எமது பிரதேசத்தில் காத்தான் கூத்து ஆடப்பட்டு வருவதாக நினைக்க முடிகின்றது.

ஆரம்பத்தில் ஆடப்பட்ட கூத்தும் இப்பொழுது ஆடப்படுவதும் ஒரே பாணியும் , ஒரே கதையோட்டமும் கொண்டதா? என்பது ஐயமே.

கால ஓட்டத்தில் காத்தான் கூத்தைப் பாதுகாத்ததில் அண்ணாவிமாருக்குப் பெரும் பங்குண்டு.

ஆனால் அதனை முதன் முதலாக எழுதி ஆடுவித்தவர் என்று யாரையும் இனம் காணமுடியாது.

காத்தான் கற்பனைக் கதைதான். உண்மைக்கதையாக இருக்க வாய்ப்பில்லை. கிராமிய மக்களின் கலைவடிவத்தில் ஆடப்படும் கூத்துத்தான்.

ஏனென்றால் எந்தவொரு புராணத்திலும் ''முத்துமாரி'' என்ற வரலாற்றுப் பாத்திரம் காணப்படவில்லை. கண்ணகிதான் வரலாற்றுப் பாத்திரம். கண்ணகிக்கும், முத்துமாரிக்கும் எந்தவித வரலாற்றுத் தொடர்பும் இல்லை. கண்ணகியின் மறுபெயராகவும் கொள்ள முடியாது. ஏனெனில் கண்ணகிக்கும் கோவலனுக்கும் பிள்ளைகள் இல்லை. இங்கு முத்துமாரிக்கு காத்தான் மகனாகக் காட்டப்படுகின்றான்.

எனவே முத்துமாரியை ஒரு குறுநிலத் தெய்வமாகவே காண வேண்டும். இவ்வாறான பல குறுநிலத் தெய்வங்கள் வட இந்தியத் தெய்வங்கள் வருகைதர முன்னரே எம்மிடம் வழிபடப்பட்டன. அண்ணமார், ஐயனார், விறுமர், நாச்சிமார்(பெண்தெய்வம்-மருவல் நாச்சியார்) போன்ற கிராமியத் தெய்வங்கள் எம்மிடையே உண்டு.

இந்தத் தெய்வங்கள் உருவான விதம்- மக்களோடு வாழ்ந்து மக்களுக்காக தம்மை அர்ப்பணித்த வீரர்கள் வீராங்கனைகள் தெய்வமாக வழிபடப்பட்டமையாலாகும். ஏனெனில் வன்னியை ஆண்ட பெண்கள் -நாச்சியார் என்று அழைக்கப்பட்டார்கள் (குருவிச்சி நாச்சியார், செல்லச்சி நாச்சியார்) இவர்களது அன்னிய எதிர்ப்பு மனோபாவம் இவர்களைத் தெய்வமாக்கியது.

இது போலவே முத்துமாரியும் மக்களுடன் வாழ்ந்து மக்களுக்காக ஏதோ விதத்தில் தியாகம் செய்த ஒரு பெண்தெய்வமாக இருக்கலாம்.

வன்னியில் அம்மன் வழிபாடுதான் மிகப் பிரபல்யமானது. வேறு வட இந்தியத் தெய்வங்களின் கோயில்கள் பிரபல்யமாக இல்லாததைக் கொண்டும் இதனை நாம் ஊகிக்க முடியும்.

அடுத்த கட்டமாக கூத்துப் பற்றி எடுத்து நோக்கினால் அறத்திஅம்மனுக்கு வைகாசி விசாகத்துக்கு கூத்தாடப்படுவது வழக்கம். அது நிச்சயமாகக் காத்தான் கூத்தாகவே அமையும்.


ஏனென்றால் ஒரு தடவை காத்தான் கூத்தை விட்டுவிட்டு, கோவலன் கண்ணகி இசை நாடகத்தை அரங்கேற்றினார்கள்.

மேடையில் பபூன்(கோமாளி) வரவும், மழை சோவென விடியும் வரை பெய்யவும் கணக்காக இருந்தது.

கூத்துக் கொட்டகை பாறி விழுந்தது. லைற் மெசின் நின்றுவிட்டது. சனம் நிக்க இடம் இல்லை. ஒரே இருட்டு குளிர்காற்று, தூக்கம் கெட்ட குழந்தைகள் வீரிட்டுக் கத்தினார்கள். நடுக்கோயிலில் மக்கள் திரண்டு நின்றார்கள்.

கூடவே வந்த வளர்ப்பு நாய்கள். சனத்துக்கு நடுவில் ஒன்றோடு ஒன்று கடிபடத்

# தங்கத்தின் மகிமை




தங்கம்,பல நூறு ஆண்டுகளாகவே,பல நாடுகளில் சூரியனின் அம்சமாக மதிக்கப்பட்டும் பூஜிக்கப்பட்டும் வருகின்ற ஒன்று. வேதங்கள் இதற்குக் கொடுத்த தனிப்பெயர் ஸுவர்ணம் (நன் நிறம்), தங்கம் ஓர் ஆபரணப்பொருளாக மட்டுமல்லாமல் பல வகையிலும் நமது அன்றாட வாழ்க்கையில் பயன்பட்டு வருகிறது.

ஆயுர்வேதத்தில் தங்கபத்துக்குத் தனிச் சிறப்பு உண்டு. சருமத்தின்பொலிவை அதிகரிக்கவும் சுரக்கங்களை மாற்றுவதற்கும் பயன்படுத்தப்படும். அழகுப் பூச்சுக்களில், தங்கம் முக்கிய இடம் வகிக்கிறது. உடலின் செல்களுக்கு இன்றியமையாத ஒரு மினரல் தங்கம்.

✱ தங்கம் சேர்ந்த பானங்களை / மருந்துகளை உட்கொள்வதோடு மட்டுமல்லாமல், ஊசி மூலமாகவும் தங்கம் சேர்த்த கூட்டுக்களைச் சருமத்தினுள் செலுத்தலாம்.

✱ தங்கத்துக்குப் புற்றுநோயைக் குணப்படுத்தும் திறன் இருப்பதால், அதற்கான ஆராய்ச்சிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

✱ பராலிஸிஸ் நோயால் முகம் பாதிக்கப்பட்டு,கண் இமைகளை மூடமுடியாமல் சிரமப்படுபவர்களுக்குத் தங்கத்தகடை இமைகளின்மேற் பாகத்தினுள் பொருத்தி, நிவாரணம் அளிக்கப்படுகிறது.

✱ சூரியனின் உஷ்ண கிரணங்கள் தாக்காமலிருக்க விண்கலனின் சில பாகங்களில் மெல்லிய தங்கப்பூச்சு
ச் செல்பவர்கள் அணியும் ஹெல்மெட்டினுள்ள கண்ணாடித் தடையில் தங்கக் கோட்டிங் கொடுக்கப்படுகிறது.
ு. கையடக்கத்தொலைபேசி, கணிப்பொறி போன்ற பொருள்களில் உபயோகிக்கப்படும் மின்சார சர்க்யூட்களில் சிறிய
பினாடிக்கு பல தடவை தொட்டு வெட்டு நடத்தும் இணைப்புகளிலும் தங்கம் தான் உபயோகிக்கப்படுகிறது.
ழமை வாய்ந்த கட்டடங்களின் கூரைகளிலும் தங்கத் தகடுகள் பதிக்கப்படுகின்றன. இதனால் கட்டடத்தின் அழகு
சதத்திலிருந்தும் காப்பாற்றப்படுகின்றன. இதுலீஃபங்க் அல்லது கில்டிங்க் என்று அழைக்கப்படுகிறது.

✱ வெளிப்புறம் மட்டுமல்லாது வீட்டின் உள்புறம் பயன்படுத்தப்படும். உலோகத்தில்செய்யப்பட்டவிக்கிரகங்களுக்கும்,வேறு கலைப்பொருள்களுக்கும் அதனை கலையழகு குன்றாதிருக்க அவற்றுக்குத் தங்கத்தகடு போர்த்தலாம்.

✱ நாட்டின் பொருளாதாரத்துக்குத் தங்கம் அளவுகோல். உலகம் தோன்றிய நாள் முதலே ஒரு விலையுயர்ந்த உலோகமாக மதிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு பல வகைகளிலும் உபயோகப்படுகின்ற வேறு ஓர் உலோகத்தை எம்மால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. அதனால்தான் தங்கத்துக்கு இத்தனை மகிமை.

# நினைவுக்குரிய நிகழ்வுகள்

## யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை

ஆறுமுகநாவலரின் சைவ மறுமலர்ச்சிச் சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுத்துத் தமிழையும், சைவத்தையும் நிலைநாட்டிப் பரப்ப, 1888சித்திரையில் நிறுவப்பட்டதே இந்தச் சைவ பரிபாலன சபை. ஆறுமுகநாவலரின் மருமகர்களான பொன்னம்பலம்பிள்ளை, கைலாசபிள்ளை மற்றும் திருவான்கூர் இராசா என அழைக்கப்பட்ட (Travancore High Court Judge) சி.செல்லப்பாபிள்ளை, சின்னத் தம்பி நாகலிங்கம், பசுபதிச் செட்டியார், வி.காசிப்பிள்ளை, ஏ.சபாபதி போன்ற தன்னலமற்ற பெரியோர்கள் கூட்டாகக் கூடி இந்தச் சபையை நிறுவினர். சபை தனக்கென ஓர் அச்சகத்தை நிறுவி 11.09.1889 முதலாக '' இந்து சாதனம்'' Hindu Organ என வார வெளியீட்டைத் தொடர்ந்து வெளியிட்டது. இந்தப் பத்திரிகைகளின் ஆழ்ந்த நுண்ணிய கருத்துக்கள் சட்டசபை முதல் பரந்த சமூகம் வரை நிறைந்த செல்வாக்கையும் பெரிய தாக்கத்தையும் ஏற்படுத்தின. கௌரவ சபாபதி, பண்டிதர் ம.வே.திருஞானசம்பந்தப்பிள்ளை, ஆர்.என்.சிவப்பிரகாசம், ஆசிரியர் மு.மயில்வாகனம் போன்ற கல்வியாளர்கள் பத்திராதிபர்களாக மெரு கூட்டி வளர்த்தனர். சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் வாராந்தம் எழுதப்பெற்ற பண்டிதரவர்களின் ''உலகம் பலவிதம்'' என்ற தொடர் விசேடமாக மகளிரிடம் பெரு வரவேற்பைப் பெற்றது.

வருடாந்த சைவ மகா நாடுகளை நடத்தி வெள்ளை வாரணனார், சிங்காரவேலனார், பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் போன்ற சைவப் பெரியார்களை தமிழ் நாட்டிலிருந்து ஈழத்துக்கு அறிமுகம் செய்த பெருமை இந்தச் சபைக்குண்டு. அத்துடன் பண்ணிசையில் புகழ்பூத்து விளங்கிய T.A.S. இராஜசேகரனை அழைத்து நீராவியடியில் அமைந்துள்ள தமது நாவலர் மண்டபத்தில் பண்ணிசை வகுப்புக்களை நடத்தி யாழ்ப்பாணத்தில் ஒரு பண்ணிசை மரபை ஏற்படுத்திப் பெருமை சேர்த்தது.

சபையின் முன்னாள் தலைவர், வட்டுக்கோட்டைச் சட்டத்தரணி வி.நாகலிங்கம் கோயம் புத்தூர் சைவ சித்தாந்த மகாநாட்டில் சைவசித்தாந்தம் பற்றிய அரிய பெரிய ஆய்வுரையை நிகழ்த்த அழைக்கப்பட்டு யாழ்ப்பாணத்துக்குப் பெருமை சேர்த்தார்.

வி.சிவசுப்பிர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ங்கின. கிழங்கு அடிக்கினமாதிரி சனம், அதற்குள் நாய் கடிபட்டால் எப்படி இருக்கும். அல்லோல லாலம் தான்''
ஆற்றை நாயப்பா''
இழவு விழுந்ததுகள் நாயையும் ஏன் கூட்டிக் கொண்டு வாறதுகள்''
ஒண்டு செல்லம்மாக்கான்ரை போல கிடக்கு''
ஐயோ என்ர இல்லை''
அப்ப ஆற்ரை?''
என்ரை தான்''
கண்டனியே என்ரை எண்டு''
அது வராது தலைவாசல் கப்பிலை புட்டு வைச்சுக் கட்டிப் போட்டு வந்தனான்''
என்னத்ால கட்டினனி''
மாட்டுக் கயித்தாலே''
கட்டது குடி மாட்டுக் கயித்தில் நாய் நிற்குமோ?
அப்ப அது உங்கடைதான்''
போடி விசரி''
ாரோ கத்தினார்கள்.
உங்கடை நாய்ச்சண்டையை நிப்பாட்டுங்கோ''
தனால் ஒவ்வொரு வருடமும் காத்தான் கூத்து மட்டுமே கோயிலில் ஆடவேண்டும் என்று ாகிவிட்டது.
ான் அறிந்த வரையில் காத்தான் கூத்து ஆடப்பட்ட தடவைகளே எமது பிரதேசத்தில் அதிகம்.

கோகுலராஜன்

# குழைக்காட்டுக் கதை

வயல் வெளி முழுவதும் சனம் நிரம்பி இருக்கும். எத்தனை தடவை வேண்டும் என்றாலும் ம் காத்தவராயன் கூத்தைப் பார்ப்பார்கள்.

ஊரில் ஒரு வருடத்தில் ஐந்து கோயில்களில் கூத்து. நாங்கள் ஐந்து கோயிலுக்கும் போவோம்.

காத்தான் கூத்துப் பழகுவதற்கு சுலபமான கூத்து. ஏனென்றால் யாராலும் இலகுவாகப் டக்கூடிய இலகுவான இராகத்தில் அமைந்த பாடல்கள் ஓர் ஆறுமாதம் தீவிரமாக பயிற்சி ய்தால் இலகுவாகப் பழகிவிடலாம்.

காத்தவராயன் கூத்து ஒரு தனிமனிதன் மீதான உறவு, அதாவது வாழ்வின் பல்வேறு டங்களையும், சவால்களையும் எதிர்கொண்டு அவற்றை வென்று சமநிலையான மனிதனாக வாறு வாழவேண்டும் என்ற கருத்தே இந்த நாடகத்தின் மெய்க்கரு.

காத்தான் தாசி வீடு செல்கின்றான். அங்கு சுகம் பெற்றதை விடப் பட்டதுன்பங்களே க்கியமானதாகக் காட்டப்படும். இது பொதுவாக சமூகத்துக்கு தரும் செய்தி யாதெனில் வ்வாறான தொடர்புகள் தீங்கு தரும் என்பதே.

சீரான சமூக உருவாக்கத்தில் காத்தவராயனின் பங்கு ஆய்வுக்குரியது.

இதனாலேயே காத்தான் கூத்தை நான் மக்கள் கூத்தாகவே காண்கின்றேன். ஏனையவை இசை டகமாகவே இருக்கின்றன.

*(தொடரும்)*

# தமிழர் விழிகளில் கண்ணீர் தான்

சத்தியம்வெல்லும்
நித்திய தமிழுக்காய்
கத்தியும் வாளும்
எத்தித் திரிந்தாலும்
எத்தனத்திலும் அது
மத்திமமே..

ஓங்குக தமிழ் என்று
வீங்கிய கைகளின் வீரம்
ஏங்கித்தான் நிற்குது
வாங்கித்தான் பிச்சை பழக்கமாகுது

உலையிலே உள்ள நீரும் வற்றியது
கலையிலே எங்கள்
நிலையும் வற்றியது
மலையளவான எங்கள் துயர்தான்
வற்றவில்லை

போற்றாத உலகில்லைஅன்று
ஆற்றாத துயரோடு தமிழன் இன்று
மாற்றாத குணமேதும்
மாற்றானிடம் இல்லை
காற்றுக்கூடப்புகக்காற்றுக்கும் இடமில்லை
ஏற்காத துயரமெல்லாம் நாம் ஏற்றதால்

மொழி வெறியில் முழுவெறியாய்
வழிகோலி நின்ற தமிழன்
விழிகளில்கண்ணீர் தான்
தஞ்சமாகலாமா?
பழிவாங்கத்தான் மாற்றான் எழலாமா?

நீதிக்கு குறைவில்லை வன்னியில்
பீதியில் தோயலாமா இன்று
பாதியிலே வாழ்க்கை
சோதித்துத் தான் ஆகுது

சாய்ந்திடும் முல்லைமரமே
மாய்ந்திடும் முல்லை மொட்டே
பாய் இன்றிநீ படுக்கலாமா?
காய்த்திடும் உன் பழங்களின்
நிலைதான் என்ன?

ஜெயம் ஜெகன்
புதுக்குடியிருப்பு

இந்தச் சபைக்குரிய ஆதனங்களின் வருமானம் மூலம் பல சைவநற்காரியங்களைச் செய்த போதிலும் தமது "புண்ணிய நாச்சி அறப்பணி" மூலம் தமிழ் நாட்டில் சிதம்பரம் நடராசர் திருக் கோயிலுக்கு அயலிலே ''புண்ணிய நாச்சி மடம்'' சிறந்த நவீன வசதிகளுடன் யாத்திரிகர்கள் வசதிக்காக அமைக்கப்பட்டு திறம்பட நடத்தப்படுவது பாராட்டுக்குரியதாகும்.

இந்தச் சபையின் கல்விப்பணி அதன் மறுபக்க நிகழ்வாகும். இந்தச் சபையை நிறுவிய குழு வினரே யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியையும், அதைச்சார்ந்த பாடசாலை அதிகார சபையையும் (Board of Directors of the Jaffna Hindu College and Affliated Schools) நிறுவினர். 1887 இல் பிர தான வீதியில் (பறங்கித்தெருவில்) நிறுவப்பெற்ற Town High School நிதிப்பற்றாக்குறை காரணமாக 1889 இல் இந்தச் சபையிடம் கையளிக்கப்பட்டு வண்ணை வைத்தீஸ்வரன் கோயி லுக்கு அருகில் நடத்தப்பட்டது. பின்பு நாகலிங்கம் பசுபதிச் செட்டியார் கூட்டு முயற்சியால் சபையின் முன்னெடுப்பாக தற்போதைய வளாக ஆறுபரப்புக் காணியில் சேர் பொன்னம் பலம் இராமநாதனுக்குப் பொது வரவேற்பளிக்கப்பட அமைத்த பந்தலிலேயே யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 1890 இல் நிறுவப்பெற்று இந்த அதிகார சபையால் பரிபாலிக்கப்பட்டது. காலப்போக்கில் இந்த அதிகார சபையால் இந்துக்கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, உரும்பிராய் இந்துக்கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி, காரைநகர் இந்துக் கல்லூரி, மற்றும் யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆகியன பொறுப்பேற்கப்பட்டும், ஆரம்பிக்கப்பட்டும் 1960 வரை சிறப்பாக நிர்வகிக்கப்பட்டு தமிழுக்கும், சைவக்கல்வி வளர்ச்சிக்கும் தகுந்த அடித்தளம் அமைத்தது. சைவபரிபாலன சபை மற்றும் அதைச் சார்ந்த யா.இ.க. அதிகார சபை இரண்டும் கூட்டாக நாவலர் பெருமானின் இலட்சியங்களை நிலைநாட்டிய நிகழ்வுகள் என்றும் நினைவுக்குரியன.

பிரமணியம்

# எங்களைப் பார்க்க யார் இருக்கினமோ?

மாலை நேரம் வந்த அந்த உறவுக் காரப் பெண்மணி தான் கதைத்துக் கொண்டு இருக்கும் போது தான் அந்த வார்த்தையைச் சொன்னார். அநேகமாக வயது போன முதியவர்கள், யாருடைய உதவிகளும் இன்றி நாதியற்று இருப்பவர் கள் இந்த வார்த்தையைச் சொல்வதை நீங்களும் கேட்டிருக்கலாம். அவர் சொன்ன வார்த்தை இதுதான்

''எங்களப் பாக்க யார் இருக்கினமோ?

பெருமூச்சுடன் கூடிய, ஏக்கத்தை பிரதிபலிக்கும் வார்த்தை ஏதோ அச்ச உணர்வு, பயத்தை உண்டாக்கும் நினைப்பு மனதில் ஒட்டிக்கொண்டு விட்டது. இது எதனால் ஏற்படுகின்றது? எதனை வைத்து இப்படி நடந்து விடும் என்று ஊகிக்கின்றார்கள்?

''இது இயல்பாய், வயது போனால் எல்லோருக்கும் வரக்கூடிய சிந்தனை தான். வயது போய் ''ஏலாத்தன்மை'' வரேக்க வாற நோய், இப்படித்தான் கதைச் சுப் புலம்புவினம், இதனைப் பெரிது படுத்தத் தேவையில்லை. என்ன இப்படி சொல்வது உங்களுக்குச் சரியாகப் படு கின்றதா? இதனை ''சகயமானதென'' ஏற்றுக் கொள்ளலாமா? வீட்டில் இது பற்றிச் சொல்லிப் பெருமூச்சு விட்ட பெண்மணி நாங்கள் நினைப்பது போல் ஒன்றும் ''வயசான'' பெண்மணி அல்ல நடுத்தர வயது மாது.

அவர் பார்க்க வந்தது எனது மாமியாரை. அவர் சற்று ''மாறாட்டமான'' இயல் புடன் வோக்கர்த் துணையுடன் நடந்து கொண்டு இருக்கிறார். அவரது முன் பிருந்த விசாலமான உலகம் இப்போது சுருங்கிவிட்டது. அவரது தோற்றப் பொலிவும் முன்பு இருந்ததை விட ''மிகவும்'' சுருங்கிப் போய்விட்டது. நானும் மனைவியும் வேலைக்குச் சென் றால் வீட்டின் ''பாதுகாப்பு'' அவரிலே தங்கி இருந்தது. அவர் படுக்கையில் ''இயலாமல்'' விழும் முன்னர் ஓடி, ஆடி, இருந்த நேரம் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டார்.

சமையலுக்கு உதவி செய்தார், வீடு கூட்டிப் பெருக்கினார், விழுந்த பலாப் பழுத்தல் இலைகயைப் பொறுக்கி ஆடு களுக்குப் போட்டார், மதியம் வடித்த கஞ்சித் தண்ணியையும் ஆடுகளுக்கு வைப்பார். சில நேரங்களில் பேரக் குழந்தைகள் ''அடம் பண்ணினால்'' ''சூடாக முட்டை பொரித்துக் கொடுத்து தாமும் சேர்ந்து சாப்பிட்டு முன் விறாந்தைக் கதிரையில் ''பேப்ப ரோடு சாய்ந்திருந்து, பாதி நித்திரையும் பாதி படிப்புமாக அவரது காலம் போய் விடும்''. இவ்வளவும் அவர் படுக்கை யில் விழ முன்னர் நடந்த சமாச்சாரங்கள்.

இந்த விடயங்கள் எல்லாம் உங்கள் வாழ்க்கைக்கும் பொருந்தக் கூடியவை யாகத் தான் இருக்கும். இப்போது சிறிய அறையில் மாமியின் உலகம் அமைந்து விட்டது. இதைப் பார்த்துத் தான் அந்தப் பெண் கூறினாரோ? ''ஏன் இப்படி சொல்லுறியள், உங்களுக்குப் பிள்ளை யள் இருக்கினம், அவையள் பார்ப்பினம் தானே'' எனக் கேட்டால், அவர் அவ நம்பிக்கையுடன் சிரித்தார். எதிர்காலம் குறித்த பயம் தெரிந்தது. எதை வைத் துக் கொண்டு நம்பிக்கை வைப்பது என யோசிக்கிறாரோ?

''எப்படிப் பிள்ளையளை நம்புறது? எல்லாம் எங்களோடயே இருக்கப் போகுது கள்? அன்று முருகன் வீட்டை நடந் ததை பாத்தியளே? நாலு பெடியள், அவங் களும் தங்கட பாட்டில செய்து கொண்டு போட்டாங்கள். இருந்த ஒரேயொரு பெட்டையையும் செல்லங்கொடுத்து வளர்த்தினம், கடைசியில அதுவும் யாரோ ஒருவனுடன் படிக்கும் போது யாருக்கும் தெரியாமல் திருமணம் செய்து போய்விட்டது. பெட்டைக்கு காதல் இருக்கெண்டு ஒருத்தருக்கும் தெரியாதாம்.

''எப்படியண்ணை வயசான காலத் தில எங்கள பார்ப்பினமெண்டு நம்புறது?

இது யோசிக்க வேண்டிய விடயம் தானே? எதிர்காலம் குறித்த பயம் இருக் கத்தானே செய்கின்றது? எனது வீட்டி லிருந்து அருகில் தானே முதியோர் இல்லம் உள்ளது. சில நேரங்களில் வைத்தியசாலையில் தரும் மருந்துகள் தேவைப்படுவோருக்கு கொடுக்க போவதுண்டு. சில சமயங்களில் அங் கிருக்கும் மனிதர்களின் கதைகளைக் கேட்டால் மனதுக்க் கஷ்ரமாக இருக் கும். எல்லா வசதிகள் இருந்தும் அவர்கள் முகங்கள் எதையோ சொல்லுகின்றன? இழந்த உறவுகளைத் தேடுகின்றன. அநேகமாக அங்கிருப்பவர்களுக்குப் பிள்ளைகள் இருக்கிறார்கள், ஊரிலோ, வெளிநாட்டிலோ பிள்ளைகள் தத்தம் குடும்பங்களோடு வாழ்ந்து வருகிறார் கள். இங்கே தந்தையும், தாயும் ஒன்றாக இருப்பதை அவதானிக்க முடிந்தது.

தமது பிள்ளைகள், எம்மை இப்படி யான நிலைக்குத் ''தள்ளி விடுவார்கள் என்று எப்போதாவது நினைத்திருப்பார் களா? இதற்கு யார் காரணமாகலாம்? கூடுதலான வெளிநாட்டு மோகமும், அதீத பணவருகையும் இப்படியான எண்ணங்களுக்குக் காரணமாக அமைந்து விட்டனவா? பிள்ளைகள் நல்லாய் இருக்க வேண்டுமென்ற நினைப்பில் ''தமக்குப்பின்னால் பிள்ளைகளின் உதவி தேவைப்படும் என்று தெரிந்தும்'' அதீத பாசம் என்ற ரீதியில் பெற்றோர்கள் தம்மைப் பலிகொடுத்து விட்டார்கள்.

*தொல்புரம்*
**சி.கதிர்காமநாதன்**

பிள்ளைகளை நிஜ உலகத்தை விட்டு, முதுமை என்பது அது யாவருக்கும் வரும் என்னும் விடயத்தை உணர வைக்காமல், அவர்களின் படிப்பு, உத்தியோகம் பெரிய இலட்சிய கனவுகள் என்ற போக்கில் அவர்ளை நாம் வேறு உலகத்தைக் காட்டி வளர்த்து விட்டோமா?


இப்படியான நிலையில் முதியோர் இல்லங்கள் அதிகம் தோற்றம் பெறுவது வளர்ச்சிக்கான பாதை என்று சொல்லிக் கொள்ளலாமா? வைத்தியசாலையில் கூட சிகிச்சைக்கு வந்து, முடிந்து போகும் வயது போனவர்களைப் பராமரிக்கும் பிள்ளைகளோ, உறவினர்களோ, இப்படி யான கேள்வியைக் கேக்கிறார். ''ஐயா இவையளை வைச்சு பாக்கிற மாதிரி விடுதி எங்கையும் இருக்கே?''

எனக்கு ஒரு கவிதை ஞாபகம் வருகிறது. எப்போதோ கேட்டது.

''வீட்டின் பெயரோ அன்னை இல்லம்
அம்மா இருப்பதோ முதியோர் இல்லம்'' ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வான்கோழி



வீட்டில் வளர்க்கப்படும் வான்கோழி தரையில் வசிக்கும் பறவையினத்தைச் சேர்ந்த உயிரினமாகும். உயிரியலில் இது ஃபாசியனிடே என்னும் குடும்பத்தில், மெலீங்கிரிடினே என்னும் துணைக்குடும்பத்தில், மெலீகிரிஸ் என்னும் இனத்தைச் சேர்ந்தது என்பர்.

இது உருவத்தில் கோழியை விடப் பெரியதாகும். சற்று பெரிய கழுத்தும் பெரிய இறக்கைகளும், குட்டையான வாலும் உடையது. உருவத்தில் பெரியதாக இருப்பதால் இதனால் பறக்க முடியாது. வேகமாக ஓடவும் முடியாது.

வான்கோழிகள் வீட்டில் வளர்க்கப்படுகின்றன. காட்டிலும் கூட்டமாக வசிக்கும்.

இதன் உணவுப்பழக்கமானது கோழிகளைப் போலவே தானியங்களையும், புழு, பூச்சிகளையும் உணவாக உட்கொள்ளும்.

வான்கோழிகள் முட்டையிட்டு குஞ்சு பொரித்துத் தங்கள் இனத்தைப் பெருக்குகின்றன. இவை தங்களுக்கு தீங்கு (ஆபத்து) ஏற்படும் என்று உணர்ந்தால் உரத்து (சத்தமாக) ஒலியெழுப்பும்.

**சிந்து, கைதடி.**

# விடுகதைகளும் விடைகளும்


1. இரு கொம்புகள் உண்டு மாடு அல்ல, வேகமாய் ஓடும் மான் அல்ல, கால்கள் உண்டு மனிதனல்ல. - அது என்ன?
2. இடி இடிக்கும், மின்னல் மின்னும், மழை பெய்யாது- அது என்ன?
3. உயிர் இல்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம்- அது என்ன?
4. ஆயிரம் பேர் அணி வகுத்தாலும் ஆரவாரம் இராது- அது என்ன?
5. உடல் சிவப்பு, வாய் அகலம், உணவு காகிதம்- நான் யார்?

**விடைகள்:**

*1. சைக்கிள், 2. பட்டாசு, 3. தராசு, 4. எறும்புக் கூட்டம், 5. அஞ்சல் பெட்டி.*

**து.கலா**

# இசைக்கு மயங்கிய எலிகள்



ஹேம்லின் செல்வச் செழிப்புள்ள ஓர் அழகான நகரம். அந்த நகரெங்கும் எலிகள் பெரும் அளவில் புகுந்து அட்டகாசம் செய்தன. வீடுகள், சாலைகள் எங்கு பார்த்தாலும் எலிகள்... எலிகள்... அவற்றின் தொல்லைகளோ அதைவிட அதிகம். எலிகளை ஒழிக்க மக்கள் பலவாறு முயன்றனர். ஆளாளுக்கு புதுப்புது உத்திகளைச் சொன்னார்கள்.

ஒரு வயதானவர் சொன்னார் என்பதற்காக நிறையப் பூனைகளைத் திரட்டிக்கொண்டு வந்து விட்டுப் பார்த்தனர். பயன் இல்லை. எலிப் பொறிகளை ஆங்காங்கே வைத்துப் பார்த்தனர். அதனாலும் எலித்தொல்லை குறையவில்லை. விஷம் வைத்துக் கொல்லக் கூட முயற்சித்தனர். அதற்கும் எலிகள் 'டிமிக்கி' கொடுத்தன. எல்லாவித முயற்சிகளும் தோற்றுப்போயின.

ஒருநாள், விநோதமாக உடையணிந்த ஓர் இளைஞன் அந்த நகருக்கு வந்தான். அவன் ஒரு கூத்தாடி என்பது அவனது உடையைப் பார்த்ததுமே தெரிந்தது. சொந்தமாகப் பாடல்கள் புனைந்து ராகம் போட்டுப் பாடும் நாடோடிக் கூட்டத்தைச் சேர்ந்தவன். ஓர் அழகிய ஊது குழலை வைத்துப் பாடிக் கொண்டு அங்குமிங்கும் நடனமாடிக் கொண்டு திரிந்தான்.

அந்த ஊரிலுள்ள எலிகளைப் பார்த்தான். அதனால் மக்கள் படும் துயரத்தையும் கண் டான். ஒரு பொது இடத்தில் மக்களைக் கூட்டி, அந்த நகரிலுள்ள எலிக்கூட்டத்தை ஒழிக்கும் வித்தை தனக்குத் தெரியும் என்றான். ஆனால், அதற்குக் கூலியாகப் பத்து லட்சம் தங்கக் காசுகளைத் தரவேண்டும் என்று நிபந்தனை போட்டான்.

நகர மக்கள் அவனது பேச்சில் மயங்கினர். எலித் தொல்லையிலிருந்து எப்படியாவது விடுதலை பெற்றால் போதும் என்பதே அவர்களது எண்ணமாயிருந்தது. அதனால், அந்த நாடோடி இளைஞனை நகரத் தந்தையிடம் அழைத்துச் சென்றனர்.

அவனது கோரிக்கை என்னவென்று கேட்டார் நகரத்தந்தை. அவனை அழைத்து வந்த நகர மக்கள் விஷயத்தைச் சொன்னார்கள். ''ப்பூ... பத்து லட்சம் தங்கக் காசுகளா? போதுமா? நீ எல்லா எலிகளையும் ஒழித்து விடு... பத்து லட்சம் என்ன... பத்து கோடி தங்கக் காசுகளை அன்பளிப்பாக உனக்குத் தருகிறேன் என்றார்'' நகரத் தந்தை. பத்து கோடி தங்கக் காசுகள் கிடைக்கப் போகின்றன. என்ற மகிழ்ச்சியில் அந்த இளைஞன் ஆட்டமும் பாட்டமுமாக அந்த இடத்தை விட்டு அகன்று போய்... தனது ஊதுகுழலை எடுத்தான். அதில் பலவித இனிய ஓசைகளை எழுப்பப் பாட ஆரம்பித்தான். அந்த இனிய இசை காற்றில் தவழ ஆரம்பித்ததுமே, மூலை முடுக்கிலிருந்த எலிகள் எல்லாம் கூட்டம், கூட்டமாக அவனை நோக்கி ஓடி வந்தன.

நகரின் எல்லாத் தெருக்களிலும் அவன் இசையை முழக்கிக் கொண்டு சென்றான். திரும்பிய பக்கமெல்லாம் எலிகள்... எலிகள்..! மாபெரும் படை ஒன்றின் அணிவகுப்பு போல், அவைகள் அவனைப் பின் தொடர்ந்தன.

இந்தக் காட்சியைக் கண்ட மக்களுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. தெரு ஓரங்களில் கூட்டங்கூட்டமாக நின்று வேடிக்கை பார்த்தனர்.

(தொடரும்)

**ஜீவன், மானிப்பாய்.**

# சின்னப் பாப்பா



பள்ளிக் கூடம் போகலாமே
சின்னப் பாப்பா -நிறைய
பிள்ளைகளோட பழகலாமே
சின்ன பாப்பா!

ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்
சின்ன பாப்பா -கல்வித்
தோட்டம் அந்த பள்ளிக் கூடம்
சின்னப் பாப்பா!

பள்ளிக் கூடம் திறந்தாச்சு
சின்ன பாப்பா -உனக்கு
நல்ல நேரம் பிறந்தாச்சு
சின்னப் பாப்பா!

வீட்டுச் செய்தி கதைகள் பேசி
பொழுது போக்கலாம் -அட
ஏட்டுக் கல்வி பாடம் கூட
எழுதிப் பார்க்கலாம்!

உடலும் மனமும் வளர்வதற்கு
சின்னப் பாப்பா -ஏற்
இடமே இந்தப் பள்ளிக் கூடம்
சின்னப் பாப்பா!

பள்ளிக் கூடம் போகலாம் வா
சின்னப் பாப்பா -நிறைய
பிள்ளைகளோட பழகலாம் வா
சின்னப் பாப்பா!

**சி.சாருஜன்,**
**கிளிநொச்சி.**



காரை கிட்ஸ் பார்க் பாலர் பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற விளையாட்டு விழாவின்போது இடம் பெற்ற சிறார்களின் ஓட்ட நிகழ்வு உடற்பயிற்சி கண்காட்சி, என்பவற்றைப் படத்தில் காணலாம்.

(250)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
பம்பரமாகச் சுழன்று பணியாற்றும் நாள். பிரபலங்களின் நட்புக் கிடைக்கலாம். கணவன், மனைவியிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். வேலை தேடுவோர் நல்ல செய்திகளைக் கேட்கலாம். வியாபாரிகள் கடன் மிகுதிகள் வசூலாகி நிம்மதி பெறுவர். மற்றவர்களின் சவால்களை ஏற்று பணிகளை வெற்றிகரமாக முடிப்பீர்கள். நல்ல நாள்.

**இடபம்:**
மனைவி, குழந்தைகள் வழியில், எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். சில வேலைகளில் அலட்சியமாக செயற்படுவதன் மூலம், வீண் பழிகளை எதிர்கொள்ளலாம். தொழில் ரீதியாக சிலர் உங்களின் உதவி நாடி வரலாம். மருத்துவ சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. உறவினர் ஒருவரின் வீட்டிற்குச் செல்லலாம்.

**மிதுனம்:**
உற்சாகம், தெம்பு அதிகரிக்கும் நாள். புதிய பொறுப்புகளை ஏற்றுச் செய்ய நேரிடலாம். மகிழ்ச்சி தரும் செய்திகளைக் கேட்கலாம். சிலரிடம் கடனாக வாங்கிய பணத்தை திருப்பிக் கொடுப்பீர்கள். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்பீர்கள். மற்றவர்கள் மத்தியில் பளிச்செனத் தோற்றம் அளிப்பதில் நாட்டம் செல்லும்.

**கடகம்:**
தம்பதியரிடையே ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி, பாசம் அதிகரிக்கும். விலை மதிப்பு மிக்க பொருள்களை வாங்கலாம். உறவினர்கள் சிலர் மூலம், உங்களுக்கு வேண்டிய காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். புதிய முதலீடுகள் தொடர்பான ஆலோசனைகளில் ஈடுபடலாம். கடன் மிகுதிகளைச் செலுத்துவீர்கள். ஆதாயகரமான நாள்.

**சிங்கம்:**
உங்களின் வளர்ச்சியைக் கண்டு சிலர் பொறாமைப்படலாம். நண்பர் ஒருவர் உங்களிடம் அதிக பிரியமாக நடந்து கொள்ளலாம். சக ஊழியர்களின் வேலைகளில் குறை கண்டு பிடித்து அவற்றை சரி செய்வீர்கள். வாடகை வீட்டில் குடியிருப்போர், வீடு மாற்றும் முயற்சிகளில் ஈடுபடலாம். சோர்வு, சோம்பல் அதிகரிக்கும் நாள்.

**கன்னி:**
நண்பர்களிடம் வீண் பேச்சுக்கள் பேசி, நேரத்தை வீணடிப்பீர்கள். மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம். சில வேலைகளில் தீவிரமாக இறங்கி விட்டு, பின்னர் கடுமையாக யோசிக்கலாம். நீங்கள் செய்த வேலை ஒன்றை மற்றவர்கள் தாங்கள் செய்ததாகக் காட்டிக் கொள்ளலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப் பளுவை எதிர்கொள்ளலாம்.

**துலாம்:**
புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கலாம். பழைய வாகனங்களை மாற்றி புதிய வாகனங்கள் வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. தாயார் உடல் நலன் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். நல்ல சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும் நாள். கடந்த காலத்தில் உதவி செய்த ஒருவரை நினைத்துப் பார்ப்பீர்கள்.

**விருச்சிகம்:**
எந்த வேலையையும் நாளை என பிற்போட்டு வைக்காமல், இன்றே செய்து முடிப்பீர்கள். பிள்ளைகளின் தவறுகளை பக்குவமாகச் சுட்டிக் காட்டுவீர்கள். உறவினர்களின் அன்புக் கட்டளைகளுக்கு அடிபணிய நேரிடலாம். போட்டி, பந்தயங்களில் வெற்றி பெற்று பரிசு, பாராட்டுப் பெறலாம். எதிர்பார்த்த பணவரவுகள் கைக்குக் கிடைக்கும்.


**தனுசு:**
வீண் வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டிய நாள். உடல் நலத்தில் அக்கறை காட்ட வேண்டும். சேமித்த பணம் ஒன்றுக்கு திடீரென செலவு ஏற்படலாம். ஒரு விடயம் குறித்து, பெரியளவில் கற்பனை செய்வீர்கள். நீண்ட நாள்களாகச் செல்ல நினைத்த கோவில் ஒன்றுக்குச் சென்று வழிபாடு நடத்தலாம். உல்லாசமாக நடந்து கொள்வீர்கள்.

**மகரம்:**
சாமர்த்தியமான பேச்சுக்களால் சாதனை படைக்கும் நாள். உறவினர்கள் மத்தியில் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். எதிர்கால முன்னேற்றம் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். அயலார் செயல்பாடுகளால் கோபம் ஏற்பட்டாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருப்பீர்கள். நீங்கள் கேட்ட உதவியைச் செய்யாமல் சிலர் கையை விரிக்கலாம்.

**கும்பம்:**
அலைச்சல் இல்லாமல், இருந்த இடத்திலிருந்தே சில வேலைகளை முடிப்பீர்கள். தடுமாற்றமாக இருந்த விடயம் ஒன்றில், திடீரென தெளிவான முடிவு எடுப்பீர்கள். பெற்றோர் வழியில் மனதிற்கு இனிய உதவிகள் கிடைக்கலாம். நீண்ட நாள்களாக சந்திக்காத உறவினர் ஒருவரைச் சந்திப்பதால் மகிழ்ச்சியடைவீர்கள். பண வரவுகளைப் பெறலாம்.

**மீனம்:**
குடும்ப உறுப்பினர்களின் எண்ணங்களைப் புரிந்து கொண்டு நடக்க முற்படுவீர்கள். சில விஷயங்களில், சபலங்கள் ஏற்பட்டாலும் பின், அதிலிருந்து சுதாகரித்துக் கொள்வீர்கள். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெறுவது தள்ளிப் போகலாம். சிலரை கேலி பேசி வெறுப்பேற்றுவீர்கள். தூக்கமின்மையால் சோர்வு உண்டாகும்.

# சாட்டி திருத்தலத்தில் புதுமைகள் புரியும் புனித சிந்தாத்திரை மாதா



புனித கன்னி மரியாள் இந்த மண்ணோடும் மக்களோடும் மக்களின் ஏக்கங்களோடும் இரண்டறக் கலந்தவர். இறையாட்சி இவ்வுலகில் உருவாக முற்றுமுழுதாக தன்னை அர்ப்பணித்தவர். இறைவனின் தாயாக பாக்கியம்பெற்ற அன்னை எம் அனைவருக்கும் தாயாக இறைவனால் தரப்பட்டுள்ளார். ஏனெனில் தாய்மையின் முழுமைக்கு இலக்கணம் என்றால் அது எமது அன்னை மரியாளே. உண்மையான தாயன்பை அவரிடமிருந்து பெற்றுக் கொள்வதற்காகவே இன்று அனைத்து மக்களும் இன, மத, பேதமின்றி அன்னையின் திருத்தலங்களைத் தரிசித்துப் பிள்ளைகளுக்குரிய உரிமையோடு தங்கள் சுக துக்கங்களை அன்னையோடு பகிர்ந்து அன்னையின் ஆசீர்பெற்றுச் செல்கிறார்கள். இவ்வாறு புகழ்பெற்ற திருத்தலங்களில் ஒன்றாக, எமது யாழ். மறைமாவட்டத்திலே கடலலை தாலாட்டும் இயற்கை எழில்மிக்க சாட்டியிலே கோயில்கொண்டிருக்கும் சிந்தாத்திரை அன்னையின் திருத்தலமும் விளங்குகிறது. இன்று யாழ். கத்தோலிக்கத் திருச்சபை அன்னையின் திருவிழாவை கொண்டாடுகின்ற வேளையில் அத்திருத்தலத்தின் சிறப்பினையும், அன்னையின் மகிமையினையும் நாம் அறிந்து கொள்வது சாலச் சிறந்தது.

இந்து சமுத்திரத்தின் நித்திலம் என அழைக்கப்படும் இலங்கையில், யாழ்ப்பாணக் குடாநாட்டின் தீவகப்பகுதியிலே வேலணை என்னும் பதியில் அமைந்துள்ள சிற்றுரே சாட்டி. நீலக்கடலும், அது கழுவிய தூய மணலும், அவை வலுக்கொடுக்க ஓங்கி வளர்ந்திருக்கும் பனைகளும் எழில்பரப்ப, அழகாகக் காட்சி தருகின்ற இக்கிராமமானது ஒரு காலத்தில் இலங்கைக்கும் இந்தியாவுக்குமான வர்த்தக மையமாக விளங்கியதை வரலாற்றில் காண முடிகிறது. 1544 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அக்கடற்கரையிலே பயணித்த போர்த்துக்கேயரின் கப்பலொன்று கடும்புயலில் அகப்பட்டு, அதில்பயணித்த அனைவரும் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த வேளையில், கப்பல் தலைவன் அன்னையிடம் உருக்கமாக மன்றாடினான். அன்னையின் பரிந்துரையால் காப்பாற்றப்பட்ட அவர்களது கப்பல்சாட்டிக் கடற்கரையிலே அற்புதமாக கரையொதுங்கியது. அன்னையின் புதுமையைக் கண்டு ஆனந்தமடைந்த கப்பல் தலைவன் அப்பகுதியிலே ஒரு கொட்டகை வடிவில் ஆலயம் அமைத்து அன்னையின்திருச்சொரூபத்தை வைத்து வழி பட்டான். தொடர்ந்து கரம்பன் மற்றும் ஊர்காவற்றுறை மக்கள் இவ்வாலயத்தைத் தரிசித்து அன்னைக்கு விழாக் கொண்டாடி வந்தனர்.


போர்த்துக்கேயருக்குப் பின்னர் வந்த ஒல்லாந்தர் அன்னையின் திருத்தலத்தை முற்று முழுதாக அழித்தார்கள். அதன் விளைவாக அன்னையின் திருச்சொரூபம் எங்கே என்பதைத் தெரியாமல் மக்கள் தவித்தார்கள். சிறிது காலத்துக்குப் பின்னர் மக்கள் மேற்கொண்ட தேடுதலின் விளைவாக அன்னையின் புதுமைமிக்க திருச்சொரூபம் ஒரு பாழடைந்த கிணற்றுக்குள் இருந்து கண்டெடுக்கப்பட்டது. பின்னர் அவர்கள் அன்னையின் திருத்தலத்தை மீள அமைத்தார்கள். அன்று தொடக்கம் பிரசித்திபெற்ற ஒரு திருத்தலமாக அன்னையின் பிரசன்னம் அங்கிருப்பது யாவரும் அறிந்த உண்மையே. அன்னையின் அற்புத புதுமைகளால் நலன்பெற, பல்லாயிரக்கணக்கான மக்கள் பல பாகங்களிலிருந்தும் வந்து அன்னைக்கு வணக்கம் செலுத்துவதோடு, இறைவனுக்குப் புகழ்பாடுகிறார்கள். அன்னையின் பரிந்துரையால் நோய்கள், வறுமை, போர் ஆபத்துக்களிலிருந்து விடுதலை பெற்றுத் தங்கள் வாழ்வை இயேசு ஆண்டவரின் வழியில் முன்னெடுக்க மக்கள் அன்னையின் பதியை நாடுகிறார்கள். பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்களின் வருகையால் அன்னையின் திருத்தலம் புதுப் பொலிவோடு அழகுடன்காட்சி தருகிறது.

அன்னையின் திருவிழா இன்று யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு தோம்ஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் கொண்டாடப்படுகிறது. யாத்திரிகர்களின் அவசியதேவைகளைக் கவனிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் திருத்தலப் பரிபாலகர் அருட்தந்தை ஸ்ரனிஸ்லொஸ் பிலிப்ஸ் அ.ம.தி அடிகளார் ஒழுங்குபடுத்தியுள்ளார். சிந்தாத்திரை மாதா என அழைக்கப்படும் எமது அன்னை ஒரு கரத்தில் தனது குழந்தை இயேசுவை தாங்கியவளாகவும், மற்றைய கரத்தில் கப்பலை ஏந்தியவளாகவும் துன்பங்களோடும் வேதனைகளோடும் வரும் தனது பிள்ளைகளைத் தேற்றி அரவணைக்கும் சாந்தமும், புனிதமும் நிறைந்தவளாக தனது கொலுவிலே வீற்றிருக்கிறாள். அன்னையின் பரிந்துரையால் இறையாசீர் பெற்று எமது வாழ்வை மலரச் செய்ய அன்னையின் பதி நாடுவோம்.

அருட் சகோ. றமேஸ் அ.ம.தி

# புத்தகசாலை

**நூல்: பொதுவிலைமட்ட விலைச்சுட்டெண் பணவீக்கம்**
**ஆசிரியர்: வே.கருணாகரன்**




பரீட்சை, பாடத்திட்டம், பாடசாலை என்பவற்றுக்கும் அப்பால் அறிவு, தேவை, தேடல் என்பவற்றின் நோக்கில் நூல்கள் வெளிவரும்போது அவை பலருக்கும் பயன்தரும் பொக்கிசங்களாகின்றன ஜீ.சி.ஈ உயர்தர வகுப்பு மாணவர்களுக்குப் பயன்தரும் வகை யில் பொருளியல் பாடத்தைக் கற்கும் கற்பிக்கும் நோக்கில் "பொது விலைமட்டம், விலைச்சுட்டெண் பணவீக்கம்'' எனும் வினா விடை நூல் வெளிவந்துள்ளது. 'அதன்' ஆசிரியர், வே. கருணாகரன் பொருளியல் பாட கற்றல் கற்பித்தல் அனுபவம் நிறையவே பெற்றுள்ள ஆசிரியராவார்.

விலை மட்ட மாற்றத்தால் ஏற்படும் தாக்கங்கள் பற்றியும், விலைமட்ட அதிகரிப்புகளும் முன்னர் பாவனையிலிருந்த சிறிய பெறுமதியுள்ள நாணயங்கள் பாவனையில் அருகிப்போக உயர் பெறுமதியுடைய நாணயத்தாள்கள் புதிது புதிதாக வெளியிடப்படுவதும் ஏன் என்ற வினாக்கள் எழுந்துள்ள இன்றைய காலகட்டத்தில் வெளிவந்துள்ள இந்த நூல் பரீட்சையை மையமாகக் கொண்டதெனினும் பொருளியல் அறிவின் விரிவுக்குப் பொதுவாகவே துணைநிற்கும் வினா விடைகளைக் கொண்டுள்ளது.

- மகேஷ்-

**நூல்: சாணக்கியன்**
**நூலாசிரியர், கதிர்பாலசுந்தரம் (ஓய்வுநிலை அதிபர்)**




அமரர் கோமான் வன்னியசிங்கத்தின் 100 ஆவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சாணக்கியன் என்னும் நூல் வெளியிட்டுவைக்கப்படவுள்ளது.

ஓய்வு நிலை அதிபர் கதிர்பாலசுந்தரம் இந்த நூலுக்கான ஆக்கங்களைத் தொகுத்துள்ளார். எதிர்வரும் 24 ஆம் திகதி நீர்வேலியில் இந்த நூல் வெளியீட்டுவிழா இடம்பெறவுள்ளது. வன்னியசிங்கத்தின் அட்டைப் படத்தைத் தாங்கியதாக இந்த மலர் அச்சிடப்பட்டுள்ளது.

கோப்பாய் கோமானின் அறிமுகம், தமிழ் வளர்த்த பெரும் தலைவர்கள், தந்தை செல்வாவின் வலதுகரம், சிங்களத் தலைவர்களின் உளவியல் போன்ற பல்வேறு விடயங்களை பாகம் ஒன்றாகவும் வன்னியசிங்கத்தின் குறிப்புகள், நான் கண்ட வன்னியசிங்கம் போன்ற பல விடயங்களைப் பாகம் இரண்டில் உள்ளடக்கியும் பாகம் மூன்றில் வன்னியசிங்கத்தின் தலைமைப் பேருரையைக் கொண்டும் இந்த நூல் தொகுக்கப்பட்டுள்ளது. அத்துடன் அமரர் வன்னியசிங்கம் பல்வேறு நிகழ்வுகளில் பங்குகொண்ட நிழற்படங்களும் மலரின் உள்ளே ஆங்காங்கே காணப்படுகின்றன.

- ஆவூரன் க. திரவியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
17 செப்ரெம்பர் 2011 சனிக்கிழமை


## பனை அபிவிருத்திச் சபை
PALMYRAH DEVELOPMENT BOARD
### விலைமனுக் கோரல்

பனை அபிவிருத்திச் சபையின் மாமுனை மற்றும் புளியங்குளம் பனந்தோட்டக் காணிகள் துப்புரவாக்கம் செய்வதற்குத் தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. மேலதிக விவரங்களை எமது தேசிய வீடமைப்புச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள எமது தலைமையலுவலகத்தில் பெற்று 23.09.2011 இற்கு முன்னர் தங்கள் கூறுவிலைகளை பதிவுத் தபால் மூலமோ நேரடியாகவோ ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பசுபதி சீவரத்தினம்
தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை. (சி/3960)

## அறிவித்தல்
நல்லூர் பிரதேச சபை - நல்லூர் உப அலுவலகம்
### ஆதனப் பெயர் மாற்றம்

வட்டாரம் - 08
சிவன்கோயில் வீதி,
ஆதன இல - 17

நல்லூர்ப் பிரதேச சபைக்கு உட்பட்ட நல்லூர் உப அலுவலக வட்டாரம் 08, சிவன்கோயில் வீதியிலுள்ள, 'ஆட்டையன் வளவு' 17 ஆம் இலக்க ஆதனமானது திரு.நித்தியானந்தன் பெண் செல்வசோதி என்பவரால் 10.01.2006 ஆம் திகதிய 1072 ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதி மூலம் தமக்குச் சொந்தமானது என தெரியப்படுத்தப்பட்டு, சரவணமுத்து தெய்வேந்திரனும் பெண் இராஜேஸ்வரிக்கு 11.02.2010 ஆம் திகதிய 4053 இலக்க உறுதி மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. தற்போது சரவணமுத்து தெய்வேந்திரனும் பெண் இராஜேஸ்வரி என்பவர் எமது ஆதனப்பதிவேட்டில் தமது பெயருக்கு மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளார். இந்த ஆதனத்துக்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாள்களுக்குள் எழுத்து மூலம் எமக்கு முறையிடுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு உரிமை கோரப்படாதவிடத்து குறித்த ஆதனமானது திரு.சரவணமுத்து தெய்வேந்திரனும் பெண் இராஜேஸ்வரி என்ற பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றேன்.

ப.வசந்தகுமார்
தவிசாளர்,
நல்லூர்ப் பிரதேச சபை, கொக்குவில்.
2011.09.16


## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### நடராஜா மீனாம்பிகை

மலர்வு: 01.04.1948 உதிர்வு: 01.09.1996

திதி: 2011.09.17

ஆறாத் துயரில் ஆண்டுகள் 15 ஆனாலும்
எம் விழிதனில் உங்கள் நினைவுகள்
கண்ணீராய் வழிந்தோட
பாசக் கூட்டினில் நாம்வாழ்ந்தோம்
ஆனாலும் காலையில் பூத்து மாலையில்
வாடிடும் பூப்போல அம்மா!
எங்களை விட்டுப் பிரிந்தீர்
நிஜமாய்க் கண்ட உருவத்தை
நிழற்படமாய் பார்க்கும்பொழுது
எம் நெஞ்சம் விம்முகிறது அம்மா!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் - எம்
உள்ளங்களில் வாழ்ந்திருப்பீர்கள்
எங்கள் ஈர விழிகளுடன்

குடும்பத்தினர்

கணவர்: சி.நடராஜா
பிள்ளைகள் : உஷாநந்தினி - உதயன் (சுவிஸ்)
சாமினி ஜெனாஜன் (ஜேர்மனி), சாமினி - ஜெயந்தன்
உஷாபானு-அனுதரன் (லண்டன்)
நிஷாந்தினி-முருகானந்தவேல், அன்புப் பேரப்பிள்ளைகள்
புகையிரத வீதி, அருகில், மல்லாகம்.

## சிறுவர் உளநல மேம்பாட்டுச் செயல்

நாவற்குழி,செப்.17

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையில் சிறுவர் உளநல மேம்பாட்டு செயற்திட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. பாடசாலை அதிபர் திருமதி. லலிதாமலர் முருகந்தன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

மாணவர்களை மகிழ்வான சூழ்நிலையில் வைத்திருக்கும் பொருட்டு விளையாட்டு, கலைநிகழ்வு, கை வினைப் பொருள்கள் செய்தல் போன்றவை நடைபெற்றன. பாடசாலை ஆசிரியர்களும் இந்தச் செயற்பாடுகளில் ஊக்கத்துடன் பங்கேற்றனர். (உ-121)

## கைதடி - மானிப்பாய் வீதி காப்பெற்றாகிறது

நாவற்குழி,செப்.17

கைதடி - மானிப்பாய் வீதியில் காப்பெற் இடுவதற்கான ஆயத்த வேலைகளில் ஒப்பந்தகாரத் தனியார் நிறுவனம் தற்போது ஈடுபட்டுள்ளது. 14 கிலோ மீற்றர் தூரமுள்ள இந்த வீதியில் ஏற்பட்ட சேதங்களைப் புனரமைக்கும் பணி தற்போது நடைபெறுகின்றது.

கைதடிக்கும்- கோப்பாய்க்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ள பாலத்தின் இரு கரைகளுக்கும் தார் ஊற்றிச் செப்பனிடுவதற்கான ஆயத்தங்களும் நடைபெறுகின்றன. இந்த வீதி காப்பெற் இடப்பட்டதும் வலிகாமத்துக்கும் தென் பகுதிக்குமான சிறந்த மாற்றுப்பாதை உருவாகிவிடும். (உ-121)




### சிவபார்வதி ஜோதிட நிலையம்
பண்டித்- மஞ்சுநாத சுவாமி
தொ.பே.இல: 0778949044
வம்சாவளியாக காளி அம்மன் அருள் கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கப் போவது யாவையும் தெரிவிப்பதுடன் பரிகாரமும் செய்து கொடுப்பார்.
Skype Contect- PARAMASHIVAN 1
SANJAYA HOTEL 414, Hospital Road, Jaffna.
(HNB வங்கி அருகில், யாழ். பஸ் நிலையம் முன்பாக)
நேரம்: காலை 7 மணி முதல் மாலை 7.30 மணி வரை கட்டணம் 101/=

### இறைச்சிக் கோழி விற்பனை
உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6மணி தொடக்கம் இரவு 8மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர்.

### காணி விற்பனைக்கு
ஓட்டுமடம் சென். செபஸ்தியன் லேனில் நல்ல சுற்றாடலில் நான்கு பக்கமும் சுற்று மதிலும் தனிக்கிணறும் கொண்ட சற்சதுரமான 2¼பரப்புக்காணி விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை) தொடர்பு: 0214908129, 0777859487.

### ஸ்ரீ காளிகாம்பா ஜோதிடம்



சுவாமிகள்: இலக்சுமி அம்மா சாஸ்திரி (50 வருட அனுபவம்) இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ள பிரசித்தி பெற்ற ஜோதிட வல்லுநர்
கைரேகை, ஜாதகம், திருமண யோகம், வியாபாரம், வெளிநாட்டுப்பயணம், கல்வி, குழந்தைப் பாக்கியம், வேறு என்ன பிரச்சினையாக இருந்தாலும் இவரைச் சந்தித்து தீர்வு காணுங் கள்.
தொடர்பு: நியூ லலிதா ஜுவலர்ஸ்
இல 191, H.K. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P- 0776925916
நேரம்: காலை 6 மணி முதல் மாலை 7 மணிவரை

### காணி விற்பனைக்கு
சங்கானை, மல்லாகம் சந்தியில் இருந்து (மல்லாகம் வீதியில்) 100 மீற்றர் தூரத்தில் 3 பரப்புக் குடியிருப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0727750023
0778696462

### மணமகள் தேவை
யாழ்.கௌரவ குடும்பம், றோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த லண்டனில் [illegible] 40 வயதுக்குட்பட்ட படித்த அழகிய மணமகள் தேவை. தொடர்பு: 0773081284


## மரண அறிவித்தல்கள்



திருமதி
### சுந்தரம் தங்கப்பிள்ளை

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை (கல்லூரியடி) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரம் தங்கப்பிள்ளை 16.09.2011 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

கல்லூரியடி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.



### பிரான்சிஸ்கா யோசவ்
(இளைப்பாறிய ஆசிரியர்,
யா/சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை)

இல, 21 மவுண்ட் கார்மேல் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரான்சிஸ்கா யோசவ் 15.09.2011 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை யோசவ் மாஸ்ரரின் அன்பு மனைவியும் லூட்ஸ் மேபிள் (கனடா), மேசிகொன்செப்ரா (லண்டன்), காலஞ்சென்ற அன்ரன் - மக்மிலன் மற்றும் பேளி மரினா (லண்டன்), யூட்ஸ் மடோனா(கனடா), மொறின் யஸ்ரீனா (ஆசிரியர், யா/சென். ஜேம்ஸ் ம.வி) ஆகியோரின் அன்புத் தாயும் மகேந்திரன் (கனடா),றெமிகஸ் (லண்டன்),யேசுதாசன் (லண்டன்), றொபேட் பாஸ்கரன் (கனடா), செல்வேந்திரன் (ஆசிரியர்) ஆகியோரின் மாமியும் மனோஜா, அமலியா, ஜீன் ஜெயந்தன், யோன், ஆன், யோவன், யோசுவா, பேட்டி, கிறிஸ்ரல், மைக்கல், ஆன்தர்சனா, அன்ரோடினுசன் ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - அந்தோனியாப் பிளளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஸ்ரீபன் மற்றும் எட்வேட்ஸ், காலஞ்சென்ற அருட்சகோதரி மேரி லூயிஸ் (திருக் குடும்ப சபை), மற்றும் ஸ்ரனிஸ்லோஸ், ஜெறோம், சென்.ஜேம்ஸ், இருதயநாயகி(லில்லி) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (17.09.2011) சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெற்று யாழ். மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ் சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல 21, மவுண்ட் கார்மேல் வீதி,
யாழ்ப்பாணம். (8206)

தகவல்:
குடும்பத்தினர்.

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 16 - 10 - 1952



இறப்பு 04 - 09 - 2004

அமரர் **அ.யோகானந்தா**

B.SC. (Cey) Dip. in Education (Srilanka)

Assistant Director of Education- Maths- Thenmaradchi

திதி: அபரபக்க பஞ்சமி (17.09.2011)

ஆண்டு ஏழு உருண்டோடியதையா
கண்டதெல்லாம் கனவாகிப் போனதையா
வையகமியங்குவது பௌதிகத்திலென்பீர்- அந்த
வையகத்திற்கே பெருமை பௌதிகமையா- அந்த
பௌதிகத்திற்கே சிறப்பு உம் அறிவுதானையா
ஞாலத்தை விட்டகலினும் காலத்தை வென்றவர்
நீர் ஐயா, உங்கள் நினைவு என்றும் காலத்தை
வென்றது ஐயா

51, செட்டித்தெரு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுடன்:
மனைவி, மகன்மார், மருமகள்மார்,
பேரன்மார், பேர்த்திமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருக பக்தியே முத்திக்கு வழி



பற்றற்றான் பற்றைப் பற்றுக, பாடுக, உருகுக, பிறவி நோயைக் களைய என்கின்ற செய்திகள் எங்கும் விரவிக் காணப்படுகின்றன.

ஆசையே துன்பம், அது மூவகை, அவற்றை விடுக, ஆனந்தமாக இறைவனைப் பற்றுக, பற்றினால் ஆசை தானே அழியும். இந்த உண் மையை உணர்த்துபவன் குருநாதன்.

''யாம் ஓதிய கல்வியும் எம் அறிவும்
தாமே பெற வேலவர் தந்தது''

என்ற பாடல் மூலம் அருணகிரிநாதர் தனது குரு முருகன் என்பதையும் அநுபூதி அவன் உணர்த்திய ஆன்மிகக் கல்வி என்பதையும் விளங்குகிறார்.

எனக்குப் பெருந்துயர் உள்ளது. அந்தத் துயர் வேறு யாருமில்லை. எனக்குத் துயர் நானே. என்னை இழந்தால் நலமாக இருக்கும் என்று தோன்றுகிறது. அருணகிரிநாதர் மூன்று பற்றுக்களும் அற்று எல்லாம் அற்று என்னை இழக்கும் வழி என்ன? என்று அருணகிரிநாதர் முருகனிடம் வேண்டுகிறார்.

''சும்மா இரு சொல் அற'' இதுவே சற்குருவின் உபதேசம்.மனத்தை அடக்கிச் சும்மா இருத்தல் முடிகின்ற காரியமா? மௌனம் மூன்று வகை. வாக்கு மௌனம், மனோ மௌனம், காஷ்டி மௌனம் ஆகும். வாயால் உடம்பால், மனத்தால் மௌமாக ஆதல் எளிய நிலை அன்று. ஆனால் அதுவே அநுபூதிக்கு வழி. ''சும்மா இரு; சொல் அற என்ற மந்திர மொழியாக உபதேசம் செய்யப் பெற்றது.

இந்த உபதேசம் அனுபவத்துக்கு வந்துவிட்டால் அதன் பின் உலக விவரங்கள் எதுவும் தெரியமாட்டது. பரம்பொருளும் வெறும் பொருளும் ஒன்றாகி விடுவதால் வேறு எதுவும் அறிவுக்கு எட்டாது; துன்புறுத்தாது. ''பொருள் ஒன்றும் அறிந்திலேனே'' என்று அந்த அனுபவம் வியக்க வைக்கும்.

இந்த அனுபவம் முற்ற, முற்ற 'நான்' என்ற அகந்தை கரைகிறது. எண்ணம் எல்லாம் அவன் என்ற பெரு நிலை தோன்றுகிறது.

எனவே அநுபூதி அடைய விரும்பும் ஆன்மாக்கள் நல்ல குருவைத் தேடிப் பெறுவது முதல் பணி. அருணகிரிநாதருக்கு ஆறுமுகக் கடவுளே குருவாய் வந்து அருள் புரிந்தார். எனவே உய்ய விழையும் உயிர் குருவைத் தேட வேண்டும். குருவாக இறைவனே எழுந்தருளிக் காக்க வேண்டும். அதனை வேண்டும் முறையைக் கந்தர் அநுபூதி கற்றுத் தருகிறது.

உயிர் இன்பத்தை விரும்புகிறது. ஆனால் அது துன்பத்திலேயே உழல்கிறது. எனவே துன்பத்தில் இருந்து விலகுவதே இன்பத்தின் முதல் நிலை.

இந்த ஆசை நோயை வென்றால் துன்பம் தொலைவது உறுதி. ''பேராசை என்னும் பிணியில் பிணிப்பட்டு ஒரா வினையேன் உழல் ஆகாது'' என்ற தெளிவு தேவை.

ஆசையை வென்றால் மரண பயமும் இல்லை. மறுபிறவிப் பயமும் இல்லை. மறுபிறவிக்கும் நம் உடம்பு வழி செய்கிறது. இது விதி காணும் உடம்பு''. இதனை விட்டு ஒழித்து' ''கதி காண எனக்கு உன் கழல்கள் தருக'' என்று முருகனை வேண்டுக.

ஆசையும் ஆசையின் பின் விளைவான அச்சத் துயரும் அடியோடு அழிந்துவிட்டால் ஆனந்தம், ஆனந்தம், பேரானந்தம். அதை அடையும் ஒரே வழி ''பாடும் பணியே பணி'' என்ற பர சிந்தனை. குரு ஒருவனே இதைத் தர முடியும். ''முருகா, குருவாய் அருள்வாய்'' என்று வேண்டுவதே நல்ல வழி. குருவையும் நாமாகத் தேர்ந் தேடுக்க முடியாது காரணம் தகுதிமிக்க குரு என்று தெரிந்து தேட எமக்கு என்ன தகுதி இருக்கிறது. எனவே எமக்குரிய குருவை அவரே தர வேண்டும்.

அதாவது நமது குருவாக அவரே வரவேண்டும். யார் நம் குருவானாலும் அவராக முருகனே வெளிப்பட வேண்டும். அந்தக் குரு எங்கிருந்தோ வருபவன் அல்ல. மனதிலேயே இதயமான குகையிலேயே இருக்கும் குகன். அண்மையில் மிக அண்மையில் இருக்கும் ஆசிரியன். அவன் அருளை வேண்டுக.

மனமே குரு, மறவாது உயர்க!

சுகி.சிவம்.

# வாசகர் திருமுகம்

## மீளக்குடியமர்ந்தவர்களின் சொல்ல முடியாத துன்பங்கள்

சொந்த இடத்தில் சுற்றத்தாருடன் போட்டியிட்டு முன்னேற முடியாமல் வளங்கொழிக்கும் வன்னி மண்ணில் உழைத்து தன்னிறைவுடன் வாழ்வதற்காக வன்னிக்கு சென்ற நாங்கள் வாழ்ந்ததற்கேற்ப துன்ப துயரங்களை அனுபவித்து விட்டோம்.

இழக்கக் கூடாது எல்லாம் இழந்து படக் கூடாத கஷ்டங்களெல்லாம் பட்டு இன்று சொந்த இடம் திரும்பியிருக்கின்றோம்.

வன்னித்துயரங்களை எழுத்தில் எழுதிவிடவோ, சொல்லில் சொல்லி விடவோ முடியாது. இன்று பத்திரிகைகளில் தனித்தனிப் பக்கங்களில் அவலம் சுமந்த வாழ்வாகவோ கருணைப்பாலமாகவோ, இன்னும் பலவிதமாக வெளிவரும் எமது அவலங்கள் சொஞ்சநஞ்சமல்ல, வன்னியிலிருந்து வந்தவர்கள் ஒவ்வொருவரினதும் மறக்க முடியாத சம்பவங்களாக இருப்பதும் போரின் நிகழ்வுகளே!

அண்மையில் நல்லூர் கந்தனின் தேர்த் திருவிழாவில் ஹெலியிலிருந்து பூப்போட்டபோது ஹெலியியைக் கண்டு பதறிய சிறுவர்களைப் பார்த்தவர்களுக்குப் புரிந்திருக்கும்.

அனைத்தையும் இழந்து வந்து மீளக்குடியமர்ந்துள்ள நாங்கள் இங்குள்ள ஆடம்பரத்துக்கேற்ப எமது வாழ்க்கையை நிலைப்படுத்த முடியாமல், எத்தனையோ பேர் மீண்டும் வன்னிக்கே போய்விட்டார்கள், சிலர் போக எத்தனிக்கிறார்கள். இந்த நிலையில் செத்தாலும் வன்னி வேண்டாம் என்று துயரத்தின் வடுவை மனதில் சுமந்திருக்கும் எம் போன்றவர்கள் இப்பொழுது பெரும் பாலும் உதவிகளையே நம்பியிருக்கின்றோம்.

மீளக்குடியமர்ந்து இரண்டு வருடங்கள் கடந்துள்ள போதும் எவ்விதமான நிரந்தர வீடமைப்பு வசதிகளும் ஆரம்பிக்கப்படவில்லை. தற்போது இந்திய அரசின் வீடமைப்புத் திட்டத்திலும் வன்னியிலிருந்து வந்தவர்கள் முன்னுரிமைப் படுத்தப்பட வேண்டும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசம் ஒன்றில் மீளக்குடியமர்ந்துள்ள நாம் இந்திய வீடமைப்பு பயனாளிகளாக தெரிவு செய்யப்படாதவிடத்து இரண்டு சந்தர்ப்பங்களிலும் நொந்து போனவர்களாகவே இருப்போம்.

பருத்தித்துறை — பத்மன்.

## இனி யாரிடம் சென்று முறையிடுவது?

வரணி வடக்கு ஜே/339 கிராமசேவகர் பிரிவில் வசித்துவரும் எனக்கு சொந்த வீடு இல்லாததால் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்கிறேன். கடந்த 2005 ஆம் ஆண்டு உலக வங்கி எமது பகுதியில் சுமார் 100 இற்கு மேற்பட்டவீடுகளையும் அரச சார்பற்ற நிறுவனம் 25 வீடுகளையும் வழங்கினார்கள். ஆனால் எமக்கு 2002 திருமணம் முடித்தகாரணத்தால் அப்போது வீட்டுத்திட்டம் வழங்காமல் நிறுத்தப்பட்டது. மீண்டும் 2010 இற்குரிய திட்டத்துக்கு சகல ஆவணங்களும் சமர்ப்பித்தும் எனக்கு வீடு வழங்கவில்லை. தற்போதும் 2011 இல் பதிவுகள் மேற்கொண்டும் எனது குடும்பம் உள்வாங்கப்படவில்லை. கிராமசேவகர் எனது கஷ்டநிலையை உறுதிப்படுத்தியும் , உயர் அதிகாரிகள் எனது கோரிக்கைக் கடிதங்களை ஏற்றும் எனக்கு உதவ முன்வரவில்லை. அண்மையில் கூட பிரதேச செயலர், திட்டப்பணிப்பாளர் ஆகியோரின் கவனத்திற்கு எனது துயரை எடுத்துக்கூறியும் எதுவித பயனும் கிடைக்கவில்லை. எனது கணவரோ உளப் பாதிப்புக்கு உள்ளாகி கடுமையாகப் பாதிக்கப்பட்டவர். எனது மூன்று சிறிய குழந்தைகளையும் வறுமை ஒருபுறம் வாட்ட வாழ்ந்து வருகிறேன். எனது குறையை யாரிடம் முறையிடுவது? இனி ஆண்டவரிடம் முறையிடுவதைத்தவிர வேறு வழிகிடையாது? எனது நிலையை சம்பந்தப்பட்ட தரப்பினர் அறிந்தாவது எனக்கு நிம்மதியாக வாழ்வதற்கு ஒரு வீடு அமைத்து தருவார்களா? அல்லது தட்டிக்கழிப்பார்களா?

வரணி — திருமதி அருமைச்சந்திரன்

## யாழ்.குடாநாட்டில் மிருகக்காட்சிச் சாலை அமைக்கலாமா?

மிருகக்காட்சிச் சாலை என்றவுடன் எம் அனைவரதும் நினைவில் வருவது தெகிவளை மிருகக்காட்சிச் சாலைதான். நாம் அறிந்த வகையில் வடபகுதியில் பெயர் சொல்லி அழைக்க கூடியவகையில் பெரிதாக மிருகக்காட்சிச் சாலை இல்லை என்பதே உண்மை. போர்க்கால சூழலுக்கு முன்பு ஆங்காங்கே சிறுவர் பூங்காக்களில் ஒருசில சிறிய மிருகங்கள் காட்சிப் படுத்தப்பட்டாலும் தற்போது அவையும் செயலிழந்துள்ளன. வடபகுதியில் எமது மாணவர்களதும் ஏனையயோரினதும் அறி வாற்றலையும் பொழுதுபோக்குத் தேவையையும் நிவர்த்தி செய்யும் மிருகக்காட்சிச்சாலை ஒன்று வெற்றிடமாக உள்ளது என்பதே உண்மை. ஆனால் இதன் தேவை வெளிப்படையாக உணரப்படாமல் உள்ளது வருத்தத்துக்குரியதே!

ஒரு மிருகக்காட்சிச் சாலை அமைப்பதற்கான அடிப்படைத் தேவைகள் எவை? எமது யாழ். நாட்டில் அமைக்க முடியுமா? தொடர்ச்சியாகக் கொண்டு நடத்த முடியுமா? இது தொடர்பான துறைசார் வல்லுநர்களே! எமது மாவட்டத்தின் தேவை கருதி உங்கள் ஆலோசனையை எதிர்பார்க்கிறோம். எமது மாவட்ட அபிவிருத்தியில் முன்னின்று உழைக்கும் மாவட்ட செயலாளரே மாநாகர முதல்வரே இதுபோன்ற அபிவிருத்தி நடவடிக்கையில் உங்கள் ஆலோசனையையும் பங்களிப்பையும் எமது சமுதாயம் வேண்டி நிற்கின்றது.

மானிப்பாய் — கிறுக்கன்

## வணிகர் கழகத்தின் விளக்கம்

''உதயன்'' பத்திரிகையில் வாசகர் திருமுகம் பகுதியின் கீழ் ''ஏழைகளின் இன்னுமொரு வலி'' எனும் தலைப்பில் வெளியான வாசகர் கடிதத்துக்கு யாழ். வணிகர் கழகம் அனுப்பி வைத்துள்ள விளக்கம்.

'ஏழைகளின் இன்னுமொரு வலி' எனும் தலையங்கத்தில் வாசகர் திருமுகம் பகுதியில் குறிப்பிட்ட, யாழ். நகரில் கடந்த 09.06.2011 இல் சைவ உணவகம் ஒன்றில் ஒரு பணியாளர் தாக்கப்பட்ட சம்பவம் பற்றிய எந்தத் தகவலோ அல்லது முறைப்பாடோ இதுவரை எமக்குக் கிடைக்கவில்லை. எனவே குறிப்பிட்ட சைவ உணவகத்தில் வேலை செய்யும் தொழிலாளி எமக்கு முறையிடும் பட்சத்தில் நாங்கள் இது தொடர்பாக நடவடிக்கை எடுத்து இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கக்கூடியதாக இருக்கும்.

இது தொடர்பான விடயங்களைப் பத்திரிகையில் பிரசுரம் செய்ய முதல் நேரடியாக யாழ்ப்பாண வணிகர் கழகத்துக்குத் தெரிவித்தால் இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

சைவ உணவகத்தில் பாதிக்கப்பட்ட தொழிலாளியோ அல்லது யாழ். நகர வர்த்தக நிலையங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களோ எதிர்காலத்தில் ஏதும் பிரச்சினைகள் ஏற்படின் எமது கவனத்துக்குக் கொண்டுவருமிடத்தில் நாம் அதைச் சுமூகமாகத் தீர்க்கக்கூடியதாக இருக்கும்.- என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
17 செப்ரெம்பர் 2011 சனிக்கிழமை

# பாடசாலையில் சேர்க்க பணம் கேட்டால் கல்வி அமைச்சிடம் முறையிடுங்கள்

கொழும்பு, செப்.17

மாணவர்களைப் பாடசாலைகளுக்கு அனுமதிப்பதற்காக பணம் அல்லது வேறு நன்கொடைகள் கோரும் அதிபர்கள் தொடர்பாக கல்வி அமைச்சுக்கு முறைப்பாடு செய்யும்படி கல்வி அமைச்சின் செயலாளர் எச்.எம். குணசேகர பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மாணவர்களைப் பாடசாலைகளுக்கு அனுமதிப்பதற்காக பணம், நன்கொடைகளோ அல்லது பொருள்களோ வழங்கப்படுவது தடைசெய்யப்பட்டுள்ளது என்று அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான முறைப்பாடுகள் கிடைக்கும் பட்சத்தில் அதற்கான விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்த முறைப்பாடுகளைக் கல்வி அமைச்சுக்கோ அல்லது லஞ்சம் மற்றும் மோசடி தொடர்பான விசாரணைஆணைக்குழுவுக்கோ அறிவிக்கும்படியும் பொது மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2012 ஆம் ஆண்டு முதலாம் தரத்துக்கான மாணவர்களை அனுமதிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் இது தொடர்பாக அனைத்துப் பாடசாலை அதிபர்களுக்கும் பூரண விளக்கமளிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)



உலகப்புகழ் பெற்ற ஈரானிய ஓவியர் குலாம்ரெஸா ரெஹ்பேமா தமது ஓவியங்களில் சிறந்தொன்றை கொழும்பிலுள்ள தேசிய நூதனசாலைக்கு அன்பளிப்புச் செய்துள்ளார். கொழும்பிலுள்ள ஈரான் தூதரகத்தின் கலாசார பிரிவில் இடம்பெற்ற வைபவம் ஒன்றின்போது தேசிய நூதனசாலையின் பணிப்பாளர் விக்கிரமசிங்கவிடம் குலாம்ரெஸா ரெஹ்பேமா ஓவியத்தைக் கையளிக்கின்றார். (ச)

## வேலணை பிரதேச சபையின் முதலாவது அமர்வு

யாழ்ப்பாணம், செப். 17

வேலணை பிரதேச சபையின் உறுப்பினர்களுக்கான முதலாவது அமர்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு வேலணை பிர தேச சபைத் தலைவர் சி. சிவராசா தலைமையில் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-7)

## விழிப்புக் குழு

நவாலி, செப். 17

நவாலி கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் விழிப்புக் குழுக்கள் மனிப்பாய் பொலிஸாரின் அனுசரணையுடன் அமைக்கப்பட்டுள்ளன. (ச-100)

# மின் விநியோகம் பாதிக்கப்படலாம் அபாயமணி அடிக்கிறது மின்சக்தி அமைச்சு

கொழும்பு, செப். 17

டீசலால் இயக்கப்படும் மின்னுற்பத்தி நிலையங்களுக்கு அவசியமான சல்பர் குறைந்த விசேட எரிபொருள் போதியளவு கையிருப்பில் இல்லாததால் மின்விநியோகம் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்புகள் உள்ளன என்று மின்சக்தி எரிசக்தி அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த மின் உற்பத்தி நிலையங்களுக்குத் தேவையான சல்பர் குறைந்த விசேட எரிபொருளை அவசரமாக இறக்குமதி செய்யமுடியாது என்று அமைச்சு அதிகாரி ஒருவர் கூறினார்.

நீர் மின்சாரம் தயாரிக்கப்படும் நிலையங்களில் போதிய மழைவீழ்ச்சி இல்லாததனால் உற்பத்தி குறைந்துள்ளது.

இந்தச் சமயத்தில் கெரவலப்பிட்டிய மின்நிலைய உற்பத்தி, எரிபொருள் இன்றித் தடைப்படுமானால் நாளாந்தம் தேவைப்படும் ஆயிரத்து 800 தொடக்கம் 2ஆயிரத்திற்கும் இடைப்பட்ட மெகாவோட் சக்தி 300 மெகாவோட் ஆகக் குறையும். கெரவலப்பிட்டி மின் உற்பத்தி நிலையத்துக்கு நாளாந்தம் பத்து மெற்றிக்தொன் எரிபொருள் தேவைப்படுகின்றது.

நாட்டின் மின்தேவைக்கு தனியார் மின் உற்பத்தி நிலையங்களிலும் அரச அனல் மின்சார நிலையங்களிலும் இருந்து மின்சாரம் பெறப்படுகின்றது. இதனால் மின்சார சபைக்கு நாளாந்தம் 12 கோடி ரூபாவரை நட்டம் ஏற்படுகிறது.

மின் உற்பத்தி நிலையங்களுக்குத் தேவையான எரிபொருள் தட்டுப்பாடு நீடிக்குமானால் அரசு தனியார் துறையிடமிருந்து மேலும் மின்சாரத்தைப் பெறவேண்டிநேரிடும்.

அதனால் மின்சார சபைக்கு தற்சமயம் ஏற்படும் 12 கோடி ரூபா நட்டம் மேலும் அதிகரிக்க வாய்ப்புண்டு என்று மின்சார சபை தெரிவிக்கிறது. (ச)

# தாயகம் திரும்பினர் 28 அகதிகள்

கொழும்பு, செப்.17

யுத்தத்தினால் புலம்பெயர்ந்த 28 இலங்கைத் தமிழர்கள் மீண்டும் கடந்த செவ்வாய்க்கிழமை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

யுத்தம் முடிவடைந்து தற்போது சமாதானம் நிலைகொண்டுள்ளதால் தாய் நாட்டுக்குத் திரும்புவதற்குத் தாம் தீர்மானித்தனர் என்று அவர்கள் கூறினர் என்று விமானநிலைய சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

யுத்தம் முடிவ்டைந்துவிட்டது எனக் கேள்வியுற்ற நாள்முதல் தாய்நாட்டுக்குத் திரும்பி சுதந்திரமாக வாழ வேண்டும் எனத் தாம் பெரும் அவா கொண்டிருந்தனர் என்றும், தற்போது தாய்நாட்டுக்குத் திரும்பியுள்ளமை பெரும் பாக்கியம் எனவும் அவர்கள் விமானநிலைய அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய நாடுகளின் அகதிகள் தொடர்பான ஆணையகத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகள் குழுவொன்று இவர்களைப் பொறுப்பேற்பதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்றிருந்தது.

இவ்வாறு வருகை தந்தவர்கள் வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும், யுத்தம் காரணமாக இந்தியாவுக்கு புலம்பெயர்ந்து இதுவரை ஆயிரத்து 402 பேர் வான் வழி மூலம் நாடுதிரும்பியுள்ளனர் என்று விமான நிலைய அறிக்கையொன்றில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ச)


A/L பரீட்சை எழுதிய மாணவர்கள்
அனைவருக்கும் 75% கட்டணக்கழிவு



Diploma in Information Technology
Diploma in PC Application
Diploma in Microsoft Office
Adv. Dip. in Hardware & Networking
Dip. in Pre-Press Desktop Publishing
Dip.in Web Designing & Development
Dip. in Computerized Accounting
Tally Financial Accounting Training
Master Diploma in Multimedia & Animation

75% OFF

DMI COMPUTER EDUCATION

☑அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
☑சர்வதேச அங்கீகாரம் பெற்ற (ISO-9001:2008) CERTIFIED சான்றிதழ்கள்
☑இலகு தவணைக்கட்டண வசதிகள். ☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.
அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கணினி கல்விக்கு

புதிய பிரிவுகள் ஆரம்பம்.
பிரிவு IV - 17/09/2011 9.30 am
பிரிவு V - 19/09/2011 9.30 am

DMI COMPUTER EDUCATION

No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) நெல்லியடி. Tel. : 021-226 2470 | No.174, கண்டி வீதி, HNB அருகில் சாவகச்சேரி. Tel.:021-227 0243

கணனி மலிவு விற்பனை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Intel -5 | 500GB | 2GB DDRIII | DVD R/W | Option | 3YR | 51,000 |
| Intel -3 | 500GB | 2GB DDRIII | DVD R/W | Option | 3 YR | 37,000 |
| D/ CORE 3.2 | 500GB | 2GB DDR | DVD R/W | Option | 3 YR | 25,000 |
| 2.8GH2 | 80GB | 512 MB | CD R/W | 17'LCD | 1YR | 21,750 |
| 2.4GH2 | 80 GB | 512 MB | CD R/W | 16'LCD | 1YR | 20,750 |
| 2.0GH2 | 40GB | 512MB | CDR/W | 16.LCD | 1YR | 17,750 |

FREE – 4 GB PEN DRIVE / WEBCAM, KEYBOARD, MOUSE WITH PAD , SPEAKER

1.POWER S/Y – 1200/- *Dongle 2. 2GB DDR111 – 2000/-
3. 2000w WOOFER - 9250/- * Lcd monitor 4. 3000w WOOFER – 13750/-
5. 5000w WOOFER- 15750 /-

அனைத்துக் கணனிகளுக்கும் உத்தரவாதம் உண்டு



SKY MEGA PC
737, KKS ROAD, JAFFNA.
(யாழ்.இந்துக் கல்லூரி முன்பாக)

021-2224865
0750698608
VISA card, Mastercard,
Amex card வசதியும் உண்டு



31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி சிவராசா
லிங்கேஸ்வரி

மலர்வு 29.12.1942
உதிர்வு 19.08.2011

அன்பினில்
அன்னையாய்
அணைத்தாய்
பாசம் பொங்கிடும்
வார்த்தையால்
நனைத்தாய்
கருணையும்
கனிவுமாய் இருப்பாய்
கடவுளின் அடியினில்
அடைக்கலம் ஆனாய்
இருவிழி நனைத்திட
அழுகின்றோம்
மறுமுறை பார்த்திடத்
துடிக்கின்றோம்
மீண்டும் ஒருமுறை
வந்திடுவீர்
எம்மடியினில்

"அமுதசுரபி",
பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பரமக்குடி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்:

# சி.பி.ஐ. விசாரணை நடத்தக் கோரி விடுதலைச்சிறுத்தைகள் ஆர்ப்பாட்டம்

சென்னை, செப்.17

பரமக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்து சி.பி.ஐ. விசாரணை நடத்த கோரி சென்னையில் விடுதலை சிறுத்தை கட்சியினர் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். சைதாப்பேட்டை பனகல் மாளிகை அருகே நடந்த இந்த ஆர்ப்பாட்டத்துக்கு விடுதலை சிறுத்தை கட்சித் தலைவர் திருமாவளவன் தலைமை வகித்தார்.

பொதுச் செயலாளர் ரவிக்குமார், பொருளாளர் முகமது யூசுப், வன்னி அரசு, வெற்றிச் செல்வன், சுப வீரபாண்டியன், விடுதலை ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் திருமாவளவன் பேசுகையில்:

அப்பாவி தலித் மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. இது திட்டமிட்டு நடத்திய தாக்குதலாகும்.

தமிழக அரசு அறிவித்த ஓய்வு பெற்ற நீதிபதி சம்பத் தலைமையில் விசாரணை நடத்துவதில் எந்தவிமான நம்பிக்கையும் இல்லை. இதனால் உண்மை வெளிவராது. அதனால் சி.பி.ஐ. விசாரணை நடத்த வேண்டும்.



தலித்துகளுக்கு பாதுகாப்பற்ற நிலை உள்ளது. அவர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றால் இம்மானுவேல் சேகரன் நினைவு நாள் அரசு விழாவாக நடத்த வேண்டும்.

துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களுக்கு வழங்கப்படும் நட்டஈடு போதுமானதாக இல்லை. கூடுதலாக வழங்க வேண்டும். காயம் அடைந்தவர்களுக்கு போதுமான சிகிச்சை அளிக்க வேண்டும்-என்றார் அவர். (வ)

# கச்சதீவை எப்படியும் மீட்டே தீரவேண்டும்

## ம.தி.மு.க. தீர்மானம்

தமிழக மீனவர்களின் உயிரையும், உடைமைகளையும் காப்பாற்ற இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்ட கச்சதீவை மீட்க தமிழக அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று நெல்லையில் நேற்று முன்தினம் நடந்த ம.தி.மு.க. மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அறிஞர் அண்ணாவின் பிறந்த தினத்தை யொட்டி, நெல்லை பொருள்காட்சி மைதானத்தில் நேற்று முன்தினம் ம.தி.மு.க. சார்பில் பிரமாண்ட திறந்தவெளி மாநாடு நடந்தது. அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த தொண்டர்கள் திரண்டு வந்து இருந்தனர். ம.தி.மு.க. கொள்கை விளக்க செயலாளர் நாஞ்சில் சம்பத் மாநாட்டுக்கு தலைமை தாங்கினார். வைகோ மற்றும் கட்சியின் முக்கிய தலைவர்கள், நிர்வாகிகள் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ராஜீவ்காந்தி கொலைச் சம்பவத்தில் குற்ற வாளிகளாக அறிவிக்கப்பட்ட சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோரின் தூக்குத் தண்டனையை, 8 வாரங்களுக்கு நிறுத்தி வைக்க சென்னை உயர்நீதிமன்றத் உத்தரவு பிறப்பித்தது வரவேற்கத்தக்கது. மரணதண்டனையை ரத்து செய்ய மத்திய அரசு முன்வராவிட்டால், மாநில அரசுகளின் அதிகாரத்துக்கு உட்பட்ட 161 ஆவது இந்திய அரசியல் சட்டப்பிரிவை பயன்படுத்தி அவர்களைக் காப்பாற்ற தமிழக முதல்வரை மாநாடு கேட்டுக் கொள்கிறது.

தமிழக மீனவர்களின் உயிரையும், உடைமைகளையும் காப்பாற்ற இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்ட கச்சதீவை மீட்க தமிழக அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மாநாட்டின் போது இலங்கை தமிழர்களுக்காக உயிர்த்தியாகம் செய்த முத்துக்குமரன் உட்பட 17 பேருடைய உருவப் படங்களுக்கு மாலை அணிவித்ததுடன், தியாகச் சுடரையும் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ ஏற்றினார். (வ)



தமிழக முதலமைச்சர்ஜெயலலிதாவால் இலவசத் திட்டங்கள் ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. அதன் ஓர் அங்கமாக பெண் ஒருவருக்கு இலவசமாக மாடு ஒன்றைக் கையளிக்கின்றார்.

## உண்ணாவிரதத்தை கைவிடுமாறு ஜெ. கோரிக்கை

கூடங்குளம் அணு மின் நிலையம் தொடர்பாக மீனவக் கிராம மக்கள் தொடர் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில்' கிராம மக்களின் உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிடுமாறு தமிழக முதல்வர்கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்:

கூடங்குளத்தில் அமைக்கப்பட்டு வரும் அணுமின் நிலையம் பாதுகாப்புடன் அமைக்கப்படுகிறது. பாதுகாப்பு குறித்து மக்கள் அச்சப்படத்தேவையில்லை என்றும் உண்ணாவிரத போராட்டத்தை கைவிடுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

# முதல்வர் பதவியில் இருந்து ஜெயலலிதாவை நீக்கிவிடுக

## உச்ச நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

டில்லி, செப்.17

வருமானத்துக்கு அதிகமாக சொத்துச் சேர்த்ததாக வழக்குப் பதிவாகி உள்ளதால் தமிழக முதல்வர் ஜெயலலிதாவை முதல்வர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று கோரி சமூக சேவகரான டிராபிக் ராமசாமி உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

அதில் குறிப்பிட்டுள்ளதாவது:

உயர் பதவி வகிப்பவர்கள் அப்பழுக்கற்றவர்களாக இருக்க வேண்டும் என்று கூறி, மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையராக இருந்த சி.வி. தாமஸைப் பதவி நீக்கம் செய்ய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

உயர் பதவிகளில் இருப்பவர்கள் மீது குற்றச்சாட்டு எழுந்தால் உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்ப அதிகாரம் உள்ளது என்று தாமஸ் வழக்கில் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இது போன்ற குற்றச்சாட்டுகளில் தனி நபரின் குணத்துக்குத்தான் முக்கியத்துவம் அளிக்க வேண்டுமே தவிர பதவிக்கு முக்கியத்துவம் அளிக்கக் கூடாது என்று 2009 இல் நீதிபதி கண்ணதாசன் வழக்கில் உச்ச நீதிமன்றம் கருத்துத் தெரிவித்தது. (வ)

# இளவயது மரணங்கள் இந்தியாவில் அதிகரிப்பு

## உலக சுகாதார மையம் தகவல்

இந்தியாவில் இருதய நோய், குருதி தொடர்பான நோய்கள், புற்று நோய், நீண்ட நாளைய மூச்சுக்குழல் பிரச்சினைகள், ரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற நோய்களால் இளம் வயதில் மரணமடைவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக உலகச் சுகாதார மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து உலக சுகாதார மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் நான்கு விதமான பழக்க வழக்கக் காரணிகள் இது போன்ற உயிரிழப்புகளை துரிதப்படுத்துவதாக அடையாளப்படுத்தியுள்ளது.

புகைப்பழக்கம், உடற்பயிற்சி செய்யாமல் இருப்பது, மதுப் பழக்கம், ஆரோக்கியமற்ற உணவுப்பழக்க வழக்கம், பணிச்சுமை காரணமாக ஏற்படும் மன அழுத்தம், சோர்வு, உயர் ரத்த அழுத்தம் போன்ற பழக்கவழக்கங்கள் தாழ்ந்த-நடுத்தர வருவாய் நாடுகளில் அதிகரித்துள்ள தாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

தாழ்ந்த-நடுத்தர வருவாய் நாடுகள் பட்டியலில் இந்தியா சேர்க்கப்பட்டுள்ளது. நடுத்தர வர்க்கத்தினருக்கு ஏற்பட்டுள்ள திடீர் வசதிகளால் அவர்களின் பழக்க வழக்கங்கள், அதேபோல் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளவர்களின் மோசமான சுகாதாரச் சூழல் ஆகியவற்றால் இளம் வயதுச் சாவுகள் அதிகரிக்கின்றன.

60 வயதுக்கும் கீழே உயிரிழப்போர் எண்ணிக்கையில் ஆண்களில் 38% பெண்களில் 32.1% இந்தியாவிலேயே நிகழ்ந்து வருகிறது. இதனால் ஆப்கானிஸ்தான் நீங்கலாக இந்தியா இளம் வயது சாவில் முன்னிலை பெற்றுள்ளது

மொத்த மரணங்களில் மேற்கூறிய காரணிகளால் ஏற்படும் நோய்களில் மரணமடைவோரின் எண்ணிக்கை 53% ஆக உள்ளது என்று உலகச் சுகாதார மையம் தெரிவித்துள்ளது. (வ)

# கலாநிதி-தயாநிதியிடம் சி.பி.ஐ. தீவிர விசாரணை

டில்லி, செப். 17

2 ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதி மாறன், சன் தொலைக்காட்சி நிர்வாக இயக்குநர் கலாநிதி மாறன், மலேசியாவைச் சேர்ந்த மேக்சிஸ்- அஸ்ட்ரோ நிறுவனத்தின் செயல் அதிகாரி ரால்ப் மார்ஷல் ஆகியோரிடம் சி.பி.ஐ. விசாரணை நடத்தியது.

தயாநிதி மாறன் தொலைத் தொடர்புத்துறை அமைச்சராக பதவி வகித்தபோது சிவசங்கரனின் ஏர்செல் நிறுவனம் இந்தியாவில் தனது சேவையை விரிவாக்கம் செய்ய 2ஜி ஸ்பெக்ட்ரம் கோரி விண்ணப்பித்தது.

ஆனால், அதை வழங்க தயாநிதி மாறன் காலதாமதம் செய்தார் என்று முறைப்பாடு கூறப்பட்டது.

இந்த நிலையில் ஏர்செல் நிறு வனத்தின் பங்குகளை மலேசியாவின் மேக்சிஸ் நிறுவனத்துக்கு விற்க தயாநிதி மாறன் நெருக்கடி தந்தார் என்று சி.பி.ஐயிடம் ஏர்செல் நிறுவனத்தின் தலைவர் சிவசங்கரன் குற்றம்சாட்டினார். இதனால் அதை மேக்சிஸ் நிறுவனத்துக்கு விற்றார் எனவும் அவர் வாக்கு மூலம் கொடுத்தார்.



தான் அதை மேக்சிஸ் நிறுவனத்துக்கு விற்ற பின், ஏர்செல் நிறுவனத்துக்கு 2ஜி ஸ்பெக்ட் ரம் வழங்கப்பட்டது எனவும் அவர் கூறியிருந்தார்.

இதற்குக் கைமாறாக சன் தொலைக்காட்சியின் டி.டி.எச். சேவையில் மேக்சிஸ் நிறுவனத்தின் துணை நிறுவனமான அஸ்ட்ரோ ரூபா 600 கோடியை முதலீடு செய்தது எனக் கூறப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டுகளையடுத்து மத்திய ஜவுளித்துறை அமைச்சராகப் பதவி வகித்து வந்த தயாநிதி மாறன் கடந்த ஜூலை மாதம் பதவி விலக நேரிட்டது.

இந்தநிலையில் கலாநிதி மாறனை கடந்த புதன்கிழமை டில்லி தலைமையகத்துக்கு வரவழைத்த சி.பி.ஐ. அவரிடம் தீவிர விசாரணை நடத்தியது.

அதேபோல மலேசியாவின் மேக்சிஸ்-அஸ்ட்ரோ நிறுவனத்தின் முதன்மைச் செயல் அதிகாரி ரால்ப் மார்ஷலிடமும் விசாரணை நடத்தியது.

கலாநிதி மற்றும் மார்ஷலிடம் சன் தொலைக் காட்சியில், ஆஸ்ட்ரோ நிறுவ னம் சார்பில் நடைபெற்ற முதலீடுகள், சிவசங்கரனின் குற்றச்சாட்டுகள் குறித்து கேள்விகள் கேட்கப்பட்டன.

அதேபோல முன்னாள் அமைச்சர் தயாநிதி மாறனிடமும் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

சி.பி.ஐ. தலைமை அலுவலகத்தில் சுமார் 5 மணி நேரம் அவரிடம் விசாரணை நடந்தது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Without IELTS STUDY IN UK Spot Admission!



# இலவச கருத்தரங்கும் உடனடி அனுமதிகளும்

## Free IELTS Class

***GENERAL /ACADEMIC for Student Visa & Settlement Visa Applicant***

**புதிய வகுப்புகள் யாழ் London Metropolitan College மற்றும் கொழும்பு நகரில் தற்பொழுது ஆரம்பம்**

Full Time | Part Time

2011 July 04 ம் திகதி அமுலுக்கு வந்த புதிய நடைமுறைகளுக்கு ஏற்ப லண்டனில் உயர்கல்வி கற்பது தொடர்பான இலவச ஆலோசனைகளுடன் ஒரே நாளில் அனுமதிகள் பெற்றுத்தரப்படும்.

பட்டதாரிகள் மற்றும் க.பொ.த சாதாரண தர பரீட்சையில் ஆங்கில பாடத்தில் A / B தர சித்திகள் பெற்றவர்கள் University /Higher Educational Institute (HEI) இல் அனுமதி பெறுவதற்கு IELTS தேவையில்லை

September மற்றும் October / November Intake ற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் பல வருடம் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்களது விசா தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.

**GCE(O/L) தகமை போதுமானது**

**காலம்** — **18th September 2011 : 10.00a.m. - 1.00pm.**

**இடம்** — **Exponet (Jaffna Branch)**
197 Arasady Road,Jaffna

**May/ June மாதங்களில் விசா கிடைத்து பயணமான மாணவர்களில் சிலர்**



| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Aravinthan | Antony | Anusha | Anushajini | Anushan | Anbalagan | Arulnesan | Gobiraj | Isuru | Jathishangar | Jegarajiny | Kabilan | Kabilraj | Kajakoban | Kajanany |
| **PULOLY** | **MATHAGAL** | **JAFFNA** | **KARAVEDDY** | **JAFFNA** | **COLOMBO** | **COLOMBO** | **JAFFNA** | **COLOMBO** | **KOKUVIL** | **INUVIL** | **KOKUVIL** | **CHANKANAI** | **VALVEDDYTHURAI** | **WATTALA** |



| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Kajanthan | Kalaivanan | Kalpana | Ketheesan | Logeshwaran | Nirojan | Niruthika | Nitharshini | Nithyadarsan | Pathmatheepan | Rajmohan | Rakeesan | Ramya | Rizmy | Rushanth |
| **COLOMBO** | **VAVUNIYA** | **VAVUNIYA** | **KARAINAGAR** | **COLOMBO** | **KONDAVIL** | **VADDUKKODAI** | **TRINCO** | **VAVUNIYA** | **COLOMBO** | **NELLIADY** | **URUMPIRAI** | **MALLAKAM** | **KANDY** | **JAFFNA** |



| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Sasivathana | Sathurna | Sathveehan | Sayanthan | Sowmya | Srivithyakaran | Subakalyani | Subasini | Tharaneetharan | Thargika | Tharshika | Thavalingan | Thushyandan | Thuvarahan | Vishnumohan |
| **POINTPEDRO** | **KAITHADY** | **JAFFNA** | **KONDAVIL** | **URUMPIRAI** | **NELLIADY** | **THOLPURAM** | **KARAVEDDY** | **COLOMBO** | **PALLAI** | **ANAIKODAI** | **PULOLY** | **JAFFNA** | **TRINCO** | **URUMPIRAI** |

**பதிவுகளுக்கு** | **Colombo - 0117 555511, Jaffna - 021 7538395**
**Hotline - 0117 555514, Fax - 0117 555517**

**EXPONET**
Overseas Consultants

Head Office : 379 - ½, Galle Road, Colombo 06.
Jaffna Branch : 197,Arasady Road, Jaffna.
(Between Kantharmadam Junction & Hindu Ladies College)
London Branch : 56, The Gardens Harrow Middlesex, HA1 4EY, UK.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடாபிக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு அனைத்து உதவிகளும் வழங்கப்படும்

## திரிபோலியில் கமரூன், சர்கோஸி உறுதி

திரிபோலி,செப்.17

லிபியாவில் தலைமறைவாகியுள்ள மும்மர் கடாபிக்கு எதிரான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதற்கான உதவிகளை வழங்குவதாகவும் கடாபியைக் கைதுசெய்து நீதியின் முன் நிறுத்துவதற்கான அனைத்து ஒத்துழைப்புக்களையும் பெற்றுக் கொடுப்பதாகவும் திரிபோலி சென்றுள்ள பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் மற்றும் பிரான்ஸ் அதிபர் நிக்கோலஸ் சர்கோஸி ஆகியோர் உறுதியளித்துள்ளனர்.

பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் மற்றும் பிரான்ஸ் அதிபர் நிகோலஸ் சர்கோஸி ஆகியோர் லிபியத் தலைநகர் திரிபோலிக்குத் திடீர் விஜயம் மேற்கொண்டுள்ளனர். கிளர்ச்சியாளர்கள் கடாபி படைகளிடமிருந்து லிபியாவை மீட்பதற்கு, நேட்டோ படையில் அங்கம் வகிக்கும் பிரான்ஸ்,-பிரிட்டிஷ் துருப்புக்கள் பெரிதும் உதவியிருந்ததால், குறித்த இரு நாட்டு அதிபர்களின் லிபிய விஜயம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

லிபிய இடைக்கால அரசினை திரிபோலியில் சந்தித்த அவர்கள், பெங்காஸியில் கிளர்ச்சிப்படையின் தலைவர்களையும் சந்தித்தனர். மேலும் திரிபோலி மருத்துவமனைக்கும் விஜயம் மேற்கொண்டு யுத்தத்தினால் பாதிப்படைந்தவர்களைப் பார்வையிட்டதுடன், மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலும் கலந்து கொண்டனர்.

தெருக்களில் வாகன நெரிசல் அதிகரித்துவிட்டது. மருத்துவமனைகள் மீள் இயங்கத் தொடங்கிவிட்டன. லிபியா மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்பிவிட்டது எனத் தெரிவித்த கமரூன், லிபியாவில் தலைமறைவாகியுள்ள் மும்மர் கடாபிக்கு எதிரான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதற்கான அனைத்து உதவிகளையும் வழங்குவதாகவும் கடாபியைக் கைதுசெய்து நீதியின் முன்நிறுத்துவதற்கான அனைத்து ஒத்துழைப்புக்களையும் பெற்றுக் கொடுப்பதாகவும் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் உறுதியளித்துள்ளார்.எனினும் கடாபியிடமிருந்து இன்னமும் ஆபத்திருக்கிறது. பொதுமக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் வரை நேட்டோ படையினரின் செயற்பாடுகள் தொடரும் என அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை தமக்குப் பல்வேறு ஒத்துழைப்புக்களை வழங்கியமைக்காக பிரிட்டன், பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளுக்கு நன்றி தெரிவிப்பதாக லிபியாவின் தேசிய மாற்றத்துக்கான பேரவை குறிப்பிட்டுள்ளது.

லிபியாவின் புதிய வர்த்தகத் திட்டங்கள், மீள் கட்டுமானப் பணிகளுக்கான ஒப்பந்தங்களில் கவனம் செலுத்துவதற்குப் பதிலீடாக, இடைக்கால அரசின் நடவடிக்கைகளிலும், கடாபியின் பிடியிலிருக்கும் இறுதிப் பிரதேசங்கள் மீட்கப்படுவது பற்றியும் பிரான்ஸ் கவனம் செலுத்தும் என அதிபர் சர்கோஸி தெரிவித்தார்.

## டென்மார்க்கின் முதற் பெண் பிரதமர் ஹெல்லே



டென்மார்க் நாடாளுமன்றத் தேர்தலில் மத்திய இடதுசாரிக் கட்சி அமோக வெற்றிபெற்றுள்ளது. ஆளும் கட்சியைத் தோற்கடித்து வெற்றிபெற்றுள்ள ஹெல்லே தொர்னிங், டென்மார்க்கின் முதலாவது பெண் பிரதமர் என்ற சிறப்பைப் பெறுகின்றார்.

வரி அதிகரிக்கப்படுகின்றமை, பொதுமக்களுக்கான செலவினங்கள் குறைக்கப்படு கின்றமை போன்றவற்றுக்கு எதிரான பிரசாரங்களை அவர் மேற்கொண்டிருந்தார். இதேவேளை வெற்றிபெற்றுள்ள ஹெல்லே தொர்னிங்கிற்கு வாழ்த்து தெரிவிப்பதாகப் பிரதமர் ரஷ்முஸின் குறிப்பிட்டுள்ளார்.

## ஜீ-20 நாடுகளின் உச்சிமாநாடு தென்கொரியாவில் ஆரம்பம்

சியோல்,செப்.17

தென்கொரியத் தலைநகர் சியோலில் ஜீ-20 நாடுகளின் உச்சிமாநாடு நேற்று ஆரம்பமாகியுள்ளது.

ஜீ-20 நாடுகளின் உச்சிமாநாட்டையொட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேச்சின் போது அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கருத்துத் தெரிவிக்கையில், ஜீ-20 நாடுகளின் தலைவர்கள் பொருளாதார மீட்பு தொடர்பில் இணைந்து பணியாற்ற வேண்டும். சர்வதேச பொருளாதாரத்தை ஊக்குவிப்பதற்கான பொறிமுறைகளை இந்தமாநாடு உள்ளடக்கியிருக்கும் என்றார்.

ஜீ-20 மாநாட்டில் பொருளாதார முன்னணி நாடுகள் 19 மற்றும் ஐரோப்பிய ஒன்றியமும் அங்கம் வகிக்கின்றன.

## அங்கோலா விமான விபத்தில் 30 பேர் மரணம்


லுவாண்டா, செப்.17

அங்கோலாவில் கடந்த புதன்கிழமை நிகழ்ந்த ராணுவ விமான விபத்தில் 30 பேர் உடல் கருகி இறந்தனர்.

தென்-மத்திய ஆபிரிக்க நாடான அங்கோலாவில் உள்ள ஹுவாம்போ விமான நிலையத்தில் இருந்து ராணுவ வீரர்களை ஏற்றிக் கொண்டு விமானம் ஒன்று புறப்பட்டது. புறப்பட்ட சிறிது நேரத்திலேயே அந்தவிமானம் வீழ்ந்து நொறுங்கித் தீப்பிடித்தது. இந்த விபத்தில் 3 ராணுவ ஜெனரல்கள் உட்பட 30 பேர் உயிரிழந்தனர். காயமடைந்த 6 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இறந்தவர்களை அடையாளம் காண முடியவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.



ஆண்டொன்று சென்றாலும் அகலாத நினைவோடு...



அன்னை மடியில்
16.03.1942
ஆண்டவனடியில்
30.08.2010
அமரர் பொன்னையா செல்லையா
மீசாலை கிழக்கு , மீசாலை

அப்பா!...
நேற்றுவரை எம்மோடு நீரிருந்த நினைவுகள்
காற்றொன்று வீசிக் கருமுகிலைக் கலைத்ததுவே!
வான்பார்த்த பயிர் நாங்கள் வாடியிருக்கின்றோம்
தேன் நிகர்த்த உம் பேச்சு எம் வீட்டிற் கேட்கவில்லை

தேடினோம் திசை எங்கும் உம் உருவம் தெரியவில்லை
ஓடினோம் தெருவெங்கும் உம் முகத்தைக் காணவில்லை
விதியொன்று எம் வீட்டில் விளையாடிப் போனதென்று
கதியற்ற எங்களுக்குக் கல்வெட்டு சொன்னதையா!

உற்றவரும் ஊரவரும் உம் நினைவு பேசுகின்றார்
கற்றவரும் மற்றவரும் உம் பெருமை உரைக்கின்றார்
அமரரடி நீரிருந்து எமக்கு ஆசிகள் கூறுகின்றீர் – அதனால்
ஆல விருட்சம் போல் உம் சந்ததிகள் தளைத்திடுமே

ஒன்று மட்டுமல்ல நூறாண்டு சென்றாலும் ஐயா!
குன்றாது உம் நினைவு குடும்பத்தை விட்டு

ஈர நினைவோடு,
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மீசாலை கிழக்கு, மீசாலை.
T.P:0777334374/ 0217333666

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலாபம் ஆனந்தாவை வென்றது யாழ். இந்து

யாழ்ப்பாணம், செப்.17

சஜீவனின் சிறப்பான துடுப்பாட்டம் கை கொடுக்க சிலாபம் ஆனந்தா தேசிய பாடசாலையை 5 விக்கெட்டுகளால் வெற்றி கொண்டது யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

இலங்கை பாடசாலை துடுப்பாட்டச் சங்கம் அகில ரீதியாக நடத்தும் பிரிவு 111 இற்கான 17 வயதுப்பிரிவு கிரிக்கெட் போட்டியின் கால்இறுதியாட்டம் கடந்த புதன்கிழமை கந்தனை டி மசினேற்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. ஆட்டத்தில் சிலாபம் ஆனந்தா தேசிய பாடசாலை அணியை எதிர்த்து யாழ். இந்துக்கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிலாபம் ஆனந்தா தேசிய பாடசாலை அணியினர் 46 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 186 ஓட்டங்களை பெற்றனர் மசஸ்பத்திரண 50 ஓட்டங்களையும், லக்சின்திசேர 22 ஓட்டங்களையும், மதுஷண்கவித்த 18 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் யாழ்.இந்துக் கல்லூரி அணி சார்பாக றுஸ்மன் 9 ஓவர்கள் பந்து வீசி 36 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் சாரங்கன் 9 ஓவர்கள் பந்துவீசி 26 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் மதுஷன் 9 ஓவர்கள் பந்துவீசி 26 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் யஸ்மினன் 10 ஓவர்கள் பந்துவீசி 38 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கல்கோபன் 7 ஓவர்கள் பந்துவீசி 45 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

187 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். இந்து கல்லூரி அணியினர் 23.3 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களையும் இழந்து 187 ஓட்டங்களைப் பெற்றனர்.சஜீவன் 37 பந்துகளில் 5ஆறுகள் 11 நான்குகள் உட்பட 82 ஓட்டங்களையும், றுக்ஸ்மன் ஆட்டம் இழக்காமல் 34 ஓட்டங்களையும், சஜீகன் 23 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்துவீச்சில் சிலாபம் ஆனந்தா தேசிய பாடசாலை அணிசார்பாக அரவிந்தபண்டார 8 ஓவர்கள் பந்து வீசி, 49 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சஜீந்தவிரஜீத் 2 ஓவர்கள் பந்து வீசி 11 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் அச்சிதராங்க, 3 ஓவர்கள் பந்துவீசி 30 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் லக்சன்சிசேர 4 ஓவர்கள் பந்துவீசி 34 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (ம-23)

## கண்டியில் தடகளப் போட்டி வடமாகாணம் வெண்கலம் வென்றது

யாழ்ப்பாணம், செப்.17

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கண்டி செஞ்சிலுவைச் சங்க ஏற்பாட்டில் கண்டி போகம்பரை மைதானத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமான தடகள விளையாட்டுப் போட்டியின் முதல் நாள் நிகழ்வில் வடமாகாணத்துக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்துள்ளது.

23 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்ட நிகழ்வில் வவுனியா செஞ்சிலுவைச்சங்கக் கிளையைப் பிரதிநிதிப்படுத்தி பங்கு கொண்ட ஓமந்தை மத்திய கல்லூரியைச் சேர்ந்த ரி.நிஷாந்தன் 2 நிமிடம் 4 வினாடிகளில் ஓடி முடித்து வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

இதில் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று இடம்பெறவுள்ளன. (ம-23)

## ராஜ்மோகன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ண கரபந்து

யாழ்ப்பாணம், செப்.17

நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழகம் அமரர் சிவசம்பு ராஜ்மோகனின் 8 ஆம் ஆண்டு ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக மாவட்ட ரீதியில் மின்னொளியில் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடத்தவுள்ளது.

இன்று பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் போட்டி ஆரம்பமாகின்றது.

முதல் இடம்பெறும் ஆட்டத்தில் கைதடி நவசக்தி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மட்டுவில் கண்ணகை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## பாடசாலை அணிகளின் கிரிக்கெட்; கொக்குவில் இந்து வெற்றி பெற்றது

வலி-வடக்கு, செப்.17

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தால் அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெறும் 17 வயதுப் பிரிவினருக்கான 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி 06 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் கொக்குவில் இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக்கல்லூரி 38.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றது.

கிருசாந் 36, நிக்ஷன் 29, டில்சான் 22, கஜன் 14 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 37 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஆதித்தன் 5.4 ஓவர்களில் 18 ஓட்டங்களுக்கு 06 விக்கெட்டுக்களையும் பார்த்தீபன் 08 ஓவர்கள் பந்துவீசி 23 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் லிங்கநாதன், தாருஜன் முறையே 20, 32 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப் பற்றினார்கள்.

150 ஓட்டங்கனீள வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 33.4 ஓவர்களில் 04 விக்கெட்டுக்களை இழந்து 152 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

லிங்கநாதன் 43, ஆதித்தன் ஆட்டமிழக்காது ஆறு ஆறுகளுடன் 37, சிலோகன் 31, கீர்த்திகன் 19 ஓட்டங்களைப் பெற்றனர்.

மானிப்பாய் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த நிலோஜன் 07 ஓவர்கள் பந்துவீசி 45 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் நிக்ஷன், கஜன் முறையே 18, 14 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள் (ம-86)



திருகோணமலை செஞ்சிலுவைச் சங்கக் கிளையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற தேசிய மட்டத்திலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட மொனறாகலை செஞ்சிலுவைச் சங்க அணித்தலைவரிடம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட திருகோணமலை நகரசபைத் தலைவர் கே. செல்வராசா வெற்றிக் கிண்ணத்தைக் கையளிக்கின்றார். (23)

## திக்கம், கரவெட்டி அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம், செப். 17

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் வல்வெட்டித்துறை கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் 9 பேர் பங்குபெறும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் திக்கம் இளைஞர் கழகம், கரவெட்டி கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழக அணிகள் வெற்றிபெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் திக்கம் இளைஞர் கழக அணியை எதிர்த்து அண்ணா சிலையடி விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது. இதில் திக்கம் இளைஞர் கழகம் 3: 1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மற்றைய ஆட்டத்தில் கரவெட்டி கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகம் மோதிக்கொண்டது.

இதில் கரவெட்டி கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழகம் 1: 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ஒ-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், செப்.17

கைதடி மத்திய வளர்மதி விளையாட்டுக்கழகம் தென்மராட்சி ரீதியாக நடத்திவரும் தாச்சி சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகள் விவரம் வருமாறு:

கைதடி விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி எதிர் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக்கழகம்.

மறவன்புலோ அம்பிகை விளையாட்டுக்கழக அணி எதிர் கைதடி உதயசூரியன் விளையாட்டுக்கழகம். (ம-23)

***

யாழ்ப்பாணம், செப்.17

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் இன்ர லீக் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் ஆட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை மாலை 3 மணியளவில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இந்தப் போட்டியில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து மட்டக்களப்பு உதைபந்தாட்ட லீக் அணிமோதவுள்ளது. (ம-23)

***

யாழ்ப்பாணம், செப்.17

இலங்கைப் பாடசாலை துடுப்பாட்டச் சங்கம் அகில இலங்கை ரீதியாக பிரிவு iii இற்கான 15 வயதுப்பிரிவு அணியினருக்கு கால் இறுதியாட்டத்துக்கு தெரிவு செய்வதற்கான கிரிக்கெட் ஆட்டத்தை இன்று சனிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தவுள்ளது. இதில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு சென்.பீற்றர்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. (ம-23)

## நீர்வேலி அத்தியார் இந்துவுக்கு கோலூன்றிப் பாய்தல் உபகரணம்

வலி-வடக்கு, செப்.17

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரிக்குக் கோலூன்றிப் பாய்தலுக்கு வேண்டிய கோல் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வடமாகாண ஆளுநரின் பணிப்புரைக்கு அமைவாக பாடசாலைகள் மட்டத்தில் விளையாட்டின் தரத்தை உயர்த்தும் முகமாக பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரும், உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளரும் இந்த உபகரணங்களை பாடசாலைக்கு வழங்கியுள்ளார்கள்.

இந்தப் பாடசாலையில் எண்ணூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இருக்கும் நிலையில் கோலூன்றிப் பாய்தலுக்கான மெத்தை தவிர ஏனைய உபகரணங்கள் வழங்கப்பட்டமையால் எதிர்காலத்தில் இந்தப் பாடசாலையில் இருந்தும் கோலூன்றிப் பாய்தல் வீரவீராங்கனைகள் உருவாகுவார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-86)

## அரையிறுதி ஆட்டங்கள்

வலி- வடக்கு, செப் 17

அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம், யாழ். மாவட்ட கிரிக்கெட் கழகங்களுக்கு இடையே நடத்தும் ஆறுபேர் பங்குபற்றும் 05 ஓவர்களுக்கான துடுப்பாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று காலை 8.30 மணிக்கு அளவெட்டிப் பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

* கொக்குவில் காமாட்சி விளையாட்டுக்கழகம் எதிர் சாவகச்சேரி சிவன் விளையாட்டுக்கழகம்.

* மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகம் எதிர் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்க ழகம்.

(ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாட்டம்...



சங்காவின் 100ஆவது டெஸ்ட் ஆட்டத்துக்காக 'கேக்' வெட்டுகையில்...

# ஆஸி. நிதான ஆட்டம்

முதலாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடி வரும் ஆஸ்திரேலிய அணி நேற்றைய முதலாம் நாள் முடிவில் 5 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 235 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது. மைக்கல் ஹஸி 63 ஓட்டங்களுடனும், பிரட் ஹடின் 21 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர்.

இலங்கை, ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையில் 3 டெஸ்ட் ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றது. இதில் காலியில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி வெற்றி பெற்றது. பல்லேகலவில் இடம் பெற்ற இரண்டாவது ஆட்டம் சமநிலையில் முடிவடைந்திருந்தது. இந்த நிலையிலேயே நேற்றைய ஆட்டம் கொழும்பிலுள்ள எஸ்.எஸ்.சி மைதானத்தில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

வொட்ஸன் - ஹீயூயெஸ் -ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். ஆரம்பத்திலேயே இலங்கையின் வேகத்தில் ஆஸியின் விக்கெட் பிடுங்கப்பட்டது. ஓட்டமெதனையும் பெறாத நிலையில் ஹீயூயெஸ், லக்மலின் பந்து வீச்சில் போல்டாகி வெளியேறினார். அறிமுக ஆட்டத்தில் அசத்திய மார்ஷ் மறுமுனையில் களமிறங்கினார். தொடர்ந்தும் அசத்திய இலங்கை வொட்ஸனை 8 ஓட்டங்களுடன் பவிலியனுக்கு திருப்பியது. எரங்கவின் பந்து வீச்சில் டில்ஷானிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய பொன்டிங் மற்றும் மார்ஷ் ஜோடி இலங்கையின் பந்து வீச்சை சமாளித்து ஆடியது. நிதானமாக ஆடி இந்த ஜோடி ஓட்டங்களைச் சேர்த்தது. 3 ஆவது விக்கெட்டுக்காக 79 ஓட்டங்களைப் பகிர்ந்த நிலையில் பொன்டிங் ஆட்டமிழந்தார். 48 ஓட்டங்களுடன் லக்மலின் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் பிரசன்ன ஜெயவர்தனவிடம் பிடி கொடுத்து பொன்டிங் ஆட்டமிழந்தார். அதனைத் தொடர்ந்து களமிறங்கிய அணித்தலைவர் கிளார்க் 6 ஓட்டங்களுடன் எரங்கவின் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் பிரசன்ன ஜெயவர்தனவிடம் பிடி கொடுத்து வெளியேறினார்.


இதன் பின்னர் இணைந்த மார்ஷ் - மைக்கல் ஹஸி ஜோடி பொறுப்பாக ஆடியது. சிறப்பாக ஆடிய மார்ஷ் தனது முதலாவது அரைச் சதத்தை பூர்த்தி செய்தார். 5 ஆவது விக்கெட்டுக்காக 70 ஓட்டங்கள் பகிரப்பட்ட போது மார்ஷ் 81 ஓட்டங்களுடன் ஹேரத்தின் பந்து வீச்சில் போல்டாகி வெளியேறினார்.

இதன் பின்னர் களமிறங்கிய ஹடின் சிறப்பாக ஹஸியுடன் இணைந்து ஆடினார். 90 பந்துகளில் தனது 26 ஆவது அரைச்சதத்தை ஹஸி பூர்த்தி செய்தார்.


இறுதியில் 81.2 பந்து வீச்சுக்களில் 235 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் ஆஸ்திரேலிய அணி துடுப்பெடுத்தாடி வருகின்றது. அந்த அணி சார்பாக மைக்கல் ஹஸி 63 ஓட்டங்களுடனும், பிரட் ஹடின் 21 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் பெற்றுள்ளனர். பந்து வீச்சில் இலங்கை அணி சார்பில் லக்மல், எரங்க இருவரும் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். ஆட்டத்தின் இரண்டாவது நாள் இன்றாகும்.

(15)

கோபமா ?...



பொன்டிங் 48 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்கையில்...



மார்ஷ் துடுப்பெடுத்தாடுகையில்...

# இறுதியாட்டமும் மழையால் பாதிப்பு

இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 5 ஆவது ஒரு நாள் ஆட்டத்தில் 270 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடி வரும் இங்கிலாந்து அணி 9.1 ஓவர்கள் நிறைவில் 53 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டினை இழந்துள்ளது. மீண்டும் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் தடைப்பட்டுள்ளது. குக் 17, ரொரட் 15 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர்.

இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையே 5 ஒரு நாள் ஆட்டங்களைக் கொண்ட தொடர் நடைபெற்று வருகின்றது. இதில் இங்கிலாந்து அணி 2-0 என்ற கணக்கில் ஏற்கனவே தொடரை வென்ற நிலையில் நேற்றைய 5 ஆவது ஒரு நாள் ஆட்டம் இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 304 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய பார்திவ் பட்டேல் - ரஹானே ஜோடி சிறப்பான அடித்தளத்தை இந்திய அணிக்கு அமைத்துக் கொடுத்தது. 12.1 பந்து வீச்சுக்களில் 52 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் முதலாவது விக்கெட் வீழ்த்தப்பட்டது. ரஹானே 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து அணி 57 ஓட்டங்களைப் பெற்ற போது பார்த்திவ் பட்டேல் 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

அடுத்தடுத்த இழப்புக்களால் இந்திய தடுமாறிய போதும் அடுத்து வந்த டிராவிட் - ஹோக்லி ஜோடி அதை மீட்டெடுத்தது. தனது இறுதி ஒரு நாள் ஆட்டத்தில் ஆடிய டிராவிட் மிகச் சிறப்பாக விளையாடினார். மறுமுனையில் ஹோக்லி அதிரடியாக ஆடினார். 54 பந்துகளை எதிர்கொண்ட ஹோக்லி தனது அரைச் சதத்தை பூர்த்தி செய்தார். மறுமுனையில் நிதானமாக ஆடிய டிராவிட் 62 பந்துகளை எதிர் கொண்டு 83 ஆவது அரைச் சதத்தை பூர்த்தி செய்தார்.

மூன்றாவது விக்கெட்டுக்காக 170 ஓட்டங்களைப் பகிர்ந்த நிலையில் டிராவிட்டின் விக்கெட் வீழ்த்தப்பட்டது. 79 பந்துகளில் 4 பவுண்டரிகள் அடங்கலாக 69 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் டிராவிட், சுவானின் பந்து வீச்சில் போல்டாகி வெளியேறினார். 1996 ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிரான ஒரு நாள் தொடரில் அறிமுகமான டிராவிட் தனது முதலாவது ஒரு நாள் ஆட்டத்தில் 3 ஓட்டங்களுடன் முரளிதரனின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறியிருந்தார். தனது இறுதி ஒரு நாள் ஆட்டத்திலும் சுழல் பந்து வீச்சிலேயே ஆட்டமிழந்து வெளியேறியுள்ளார்.

மிகச் சிறப்பாக அதிரடியாக ஆடிய ஹோக்லி 87 பந்துகளில் தனது 6 ஆவது ஒரு நாள் சதத்தை பூர்த்தி செய்தார். இந்திய அணி 236 ஓட்டங்களைப் பெற்ற போது 93 பந்துகளில் ஒரு சிக்ஸர், 9 பவுண்டரிகள் அடங்கலாக 107 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஹோக்லி, சுவானின் பந்து வீச்சில் 'ஹிட் விக்கெட்டில்' ஆட்டமிழந்தார்.

ரெய்னா 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். மறுமுனையில் அதிரடியாக ஆடிய அணித்தலைவர் டோனி 26 பந்துகளில் தனது 41 ஆவது அரைச் சதத்தை பூர்த்தி செய்தார். இறுதியில் இந்திய அணி 50 ஓவர்களில் 304 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. டோனி 26 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகள் அடங்கலாக 50 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் இங்கிலாந்து சார்பாக சுவான் 3 விக்கெட்டுக்களையும், டேர்ன்பெச் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இதன் பின்பு கடுமையான மழை பெய்ததால் ஆட்டம் தாமதமானது.

இதன் பின்னர் இங்கிலாந்து அணிக்கு 40 ஓவர்களில் 270 ஓட்டங்கள் வெற்றியிலக்காக நிர்ணயிக்கப்பட்டது. அதனடிப்படையில் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இங்கிலாந்து அணி வேகமாக ஓட்டங்களைக் குவிப்பதிலேயே முனைப்புக் காட்டியது. இருப்பினும் அணி 4.1 ஓவர்களில் 27 ஓட்டங்களைப் பெற்ற போது முதலாவது விக்கெட்டை இழந்தது. கீஸ்வெஸ்டர் 17 பந்துகளில் 4 பவுண்டரிகள் அடங்கலாக 21 ஓட்டங்களைப் பெற்ற போது ஆட்டமிழந்தார். தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி மீண்டும் மழை குறுக்கிடும் வரை 9.1 பந்து பரிமாற்றங்களில் ஒரு இலக்கு நஷ்டத்துக்கு 53 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது.

(15)

முடிந்தது ஆட்டம்...



டிராவிட் ஒரு நாள் ஆட்டங்களிலிருந்து இறுதியாக விடைபெறும் தருணம் ......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிநிலை வேண்டுகை

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு முன்னணி நிறுவனத்துக்கு பின்வரும் பணிகளில் வெற்றிடங்கள் நிலவுகின்றன.

**1. பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்**

பாதுகாப்புச் சேவையில் கடமையாற்றுவதற்கு 25-60 வயதுக்கு உட்பட்ட ஆண் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை. பகல், இரவு நேரங்களிலும் கடமையாற்றுவோர் விரும்பத்தக்கது.

**2. பராமரிப்பாளர்கள்**

★ துடிப்பும் உற்சாகமும் நிறைந்தவர்களாக இருத்தல்.
★ தேனீர் தயாரிக்கத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை

**அனுபவமும் ஆற்றலும் உள்ளவர்களுக்கு கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்**

பொது முகாமையாளர்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 567 7602

## கண்ணீர் அஞ்சலி



யாழ். மாவட்டத்தில் பொது சுகாதார பரிசோதகராகக் கடமையாற்றி, தற்போது கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகராக கடமையாற்றும் திரு. பத்மநாதன் சிவகுமார் அவர்களின் அன்புத் தாய்

### திருமதி மோகனவல்லி பத்மநாதன்

அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் உறவுகளுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மாவட்டம். (சி/3993)(34) பொதுச் சுகாதாரப் பரிசோதக நண்பர்கள்.

## கண்ணீர் அஞ்சலி



அமரர்
### பிரம்மஸ்ரீ கார்த்திகேய ஐயர் வைத்தியநாத ஐயர்
(ஓய்வுநிலை அதிபர், சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி)

மதிப்புக்குரிய எமது கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தன் அவர்களின் அன்பு மாமனாரும் சண்முக பவனம், மயிலணி, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், 5,1/4, 42ஆவது ஒழுங்கை, கொழும்பு - 6 ஐ வதிவிடமாகக் கொண்டவருமான பிரம்மஸ்ரீ கார்த்திகேய ஐயர் வைத்திய நாத ஐயர் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம். அவரது இழப்பினால் துயருற் றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதா பங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

யா/விக்ரோறியாக் கல்லூரி,
சுழிபுரம். (8249)(34) கல்லூரிச் சமூகம்.

## மரண அறிவித்தல்

### பிரம்மஸ்ரீ கார்த்திகேய ஐயர் வைத்தியநாத ஐயர்
(ஓய்வுநிலை அதிபர், சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி)



'சண்முகபவனம்', மயிலணி, சுன்னாகத்தை சொந்த இடமாகவும் 5,1/4, 42ஆவது ஒழுங்கை, கொழும்பு-6 ஐ வதிவிடமாகவும் கொண்ட பிரம்மஸ்ரீ கா.வைத்தியநாத ஐயர் நேற்று வெள்ளிக்கிழமை (16.09.2011) இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சி.கார்த்திகேய ஐயர் (ஓய்வு பெற்ற ஆசிரியர்)-பொன்னம்மா தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான பண்டிதர் ச.பஞ்சாட்சர ஐயர் (ஓய்வு பெற்ற அதிபர்)-வாலாம்பிகை அம்மா தம்பதியரின் மருமகனும் பிரேமதாம்பிகையின் அன்புக் கணவரும் சரோஜினி, ரவீந்திரன் (Accountant, Maldives), பாமினி, கலாநிதி சக்திதரன் (London) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெகதாம்பிகை, ஸ்ரீநிவாசன் (ஓய்வு பெற்ற வங்கியாளர்), ஜெகதீஸ்வரன் (ஓய்வுபெற்ற அரச இரசாயனப் பகுப்பாய்வாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பா.பாலசந்திரன் (ஓய்வுபெற்ற அதிபர்), ஜெயந்தி, வ.ஸ்ரீகாந்தன் (அதிபர், விக்ரோறியாக் கல்லூரி), சுசீலா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு 18.09.2011 (ஞாயிற்றுக்கிழமை) நாளை நண்பகல் இறுதிக்கிரியைகளின் பின் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5,1/4, 42ஆவது ஒழுங்கை, கொழும்பு - 6
தொ.பே. இல. 011 236 1406
தகவல்: குடும்பத்தினர்.

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் லக்ஸ்மன் யாப்பாஅபேவர்த்தன, கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனைத் தெளிவுபடுத்தினார்.

வடக்கில் துணை ஆயுதக்குழுக்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்த வேண்டும் என்றும், ஈ.பி.டி.பி. பலமான ஆயுதக் குழுவை வைத்துள்ளதாகவும் றொபேட் ஓ பிளேக் கூறியிருந்தார். யாழ். பல்கலைக்கழக மாணவர்களைத் தான் சந்தித்துப் பேசுவதை ஈ.பி.டி.பி. தடுத்தது என்றும் அவர் கூறி இருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும் விதத்தில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்த அமைச்சர் டக்ளஸ், பிளேக்கைக் கடுமையாக விமர்சித்திருந்தார். பொய்த் தகவல்களை பணம் கொடுத்து வாங்கினார் என்று பிளேக் மீது அவர் குற்றஞ்சாட்டினார்.

டக்ளஸ் தேவானந்தாவின் இந்தக் கருத்து குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன, அது அவருடைய தனிப்பட்ட கருத்து என்றும், அது அரசின் கருத்தல்ல என்றும் கூறியுள்ளார்.

வடக்கில் துணை ஆயுதக்குழுக்களை அடக்க வேண்டும் என்ற பிளேக்கின் இறுக்கமான கருத்தை நிராகரிக்காத அரசு, டக்ளஸ் தேவானந்தா வெளியிட்ட கருத்தை அவரது தனிப்பட்ட கருத்து என்று நிராகரித்துள்ளது.

அதேவேளை, வழக்கமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் பேச்சின் பின்னர் ஏட்டிக்குப் போட்டியாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையும் அழைத்துப் பேச்சு நடத்தும் அரசு நேற்றைய தினம் அவ்வாறு எதனையும் செய்யவில்லை. (உ)

## சிங்களம்

சாவகச்சேரியில் விசேட சிங்கள வகுப்புக்கள்
ஆரம்பம் 19.09.2011
வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு
ஆசிரியர் - யாழ். புகழ்
**ஸ்ரீ மாஸ்டர்** (8247)(34)
லிண்டன் கலைகூடக் கணினிப் பயிற்சி நிலையம்.
இல. 114, டச்சு வீதி, சாவகச்சேரி. 0773114902

## விற்பனைக்கு

45 நாள் பூர்த்தியான பொமேரியன் ஆண், பெண் குட்டிகளும் 1 வயது நிரம்பிய பொக்சர் பெடியர் ஆண், பெண் நாயும் 8 மாதம் பூர்த்தியான பொமேரியன் ஆண், பெண் நாயும் 3 மாதம் சினை யுடைய பக் ஆடும் மணிக்கூண்டு, வான்கோழி, பிலி, வெள்ளை, வண்டல், 3 மாத டபோசன் ஆண் குட்டியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வி.மதுரன், இல. 209, பலாலி றோட், ராஜா பிளாசா முன்பாக, கோண்டாவில். (8242)(34)

## அறைகள் வாடகைக்கு உண்டு

மருத்துவக் கல்லூரிக்கு அருகில், பல்கலைக்கழக மாணவர்களுக்கு அறைகள் வாடகைக்கு தரப்படும் ஆண்கள் மட்டும்.
தொடர்பு: 0774030493 (8247)(34)

## விற்பனைக்கு

யாழ். சுபாஸ் ஹோட்டலுக்கு அருகில் பழைய வீட்டின் கூரை, கதவு, நிலைகள், யன்னல்கள் விற்பனைக்கு உண்டு. கழற்றி எடுக்கக்கூடியவர்கள் மாத்திரம் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 0773867222 (8239)(34)

## தவறிவிட்டது

சரசாலை வடக்கு, சாவகச்சேரி என்னும் முகவரியில் வசிக்கும் சந்திரன் சகிலன் என்பவரது வாகன சாரதிப்பத்திரம் (13.09.2011) செவ்வாய்க்கிழமை நெல்லியடிக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் தவறி விட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் 0773876614 உடன் தொடர்புகொள்ளவும். யாழ்ப்பாண மின்னகம். (8251)(34)

## கடைகள் காட்சியறைகள் வாடகைக்கு

யாழ்ப்பாணம், விக்ரோறியா வீதியில் (பஸ் நிலையத்துக்கு சமீபமாக) போதிய வாகனத் தரிப்பிட வசதியுடன் 12,000 க்கு மேற்பட்ட சதுர அடிகளில் புதிதாக அமைக்கப்படவிருக்கும் Shoping Complex இல் வியாபார நிறுவனங்கள், காட்சியறைகள் அமைக்கவிரும்புவோர் தொடர்புகொண்டால் அவர்களுக்குத் தேவையான அளவில் ... 0778677222
e-mail : k.kumanan@yahoo.com (8238)(34)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிதம்பரப்பிள்ளை அன்னம்மா



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிதம்பரப்பிள்ளை அன்னம்மா நேற்று (16.09.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் நேசமலர் (கனடா), ஞானமலர் (கனடா), பரமசிவம் (கனடா), சிவராசலிங்கம், பரமேஸ்வரி, சிவயோகராணி, காலஞ்சென்ற சிவராசா ஆகியோரின் அன்புத் தாயும் இராசையா, காலஞ்சென்ற தம்பிமுத்து மற்றும் சண்முகராசா (கனடா), விஜயலக்சுமி (கனடா), இந்திராதேவி, பேராயிரவர், சிவஞானசேகரம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/சென். ஜோன்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2011) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஏ.எஸ்.சிவராசலிங்கம் (மகன்),
எஸ்.எஸ்.இராசதுரை (சின்னக்கிளி-சகோதரன்)
கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில். (8237)(34)

### முருகேசு சிவப்பிரகாசம்

(ஓய்வுபெற்ற பொது முகாமையாளர், யா.ப.நோ.கூ.சங்கம், ஓய்வுபெற்ற ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி, கொழும்புத்துறை மேற்கு, வதிரீபட மன்றலாம் விநாயகர் ஆலய முன்னாள் பொருளாளரும் தற்போதைய நிர்வாகசபை உறுப்பினரும் கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய பொருளாளரும்)



அளவெட்டி வடக்கு, சாத்தாகலட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறை, சுவாமியார் வீதியை வதிவிடமாகவும் கொண்ட முருகேசு சிவப்பிரகாசம் நேற்று முன்தினம் (15.09.2011) வியாழக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு-செல்லம்மா தம்பதியரின் செல்வப் புதல்வனும் நாகேஸ்வரியின் (கருணா) பாசமிகு கணவரும் சத்தியா, கோதை (லண்டன்), பிரணவன் (Kevilton Electrical Product (PVT) Ltd.) ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரதீபன் (பிரான்ஸ்), இராதேயன் (Doctor, London), வர்ஷினி (மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனும் மிருதுலா, மானசா, ஆதிரை ஆகியோரின் அருமைப் பேரனும் நகுலாம்பிகை கந்தரட்ணம், திலகவதி சதாசிவம் ஆகியோரின் சகோதரனும் விஜயலட்சுமி பரமானந்தத்தின் மைத்துனரும் சுலோசனா, பிரபாகரன் ஆகியோரின் சிறியதந்தையும் கௌரி, ராகவன், அழகேசன், சஞ்சயன், சான்றோன், சாதுரியன், சாயீசன் ஆகியோரின் தாய்மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.09.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

20/3, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (8240)(34)
தகவல்:
சி.பிரணவன் (மகன்),
(0773604486)

### திருமதி மோகனவல்லி பத்மநாதன்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



மாரீசன்கூடலைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மோகன வல்லி பத்மநாதன் நேற்று (16.09. 2011) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா-வேதவல்லி தம்பதியரின் ஏகபுதல்வியும் காலஞ்சென்ற பத்மநாதனின் மனைவியும் நாடாராசா, கவிமுத்துமணி, காலஞ்சென்ற திருஞானசம்பந்தர் மற்றும் சிவநேசன் ஆகியோரின் சகோதரியும் சிவகுமார், சுரேஸ்குமார் (ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்), விமலினி, கணேஸ்குமார், வினிதா ஆகியோரின் தாயும் பார்த்தீபன், ரஜனி, யாழினி (மக்கள் வங்கி), சிலோஜினி, மயூரன் ஆகியோரின் மாமியும் அர்ஜூன், மிதுன், மிர்த்திகா, சஹானுஜா, டுபாத்மினி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.09.2011) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு 'திருப்பதி', இல.15, மெமோறியல் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'திருப்பதி',
இல. 15, மெமோறியல் வீதி,
மானிப்பாய். (8253)(34)
தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13ஆம் திருத்தத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறினார். ''உடனடி மனிதாபிமானப் பிரச்சினைகள் மற்றும் 'கிறீஸ் பூத' விவகாரம் என்பன தொடர்பிலும் ஆராயப்பட்டாலும், அரசியல் தீர்வுக்கான முயற்சிகள் குறித்தே முக்கிய கவனம் செலுத்தப்பட்டது'' என்றார் சுரேஷ்.

கடந்த மார்ச் மாதம் 18ஆம் திகதி நடைபெற்ற பேச்சின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கையளித்த தீர்வு தொடர்பான யோசனைகளின் அடிப்படையில் தொடர்ந்து பேசுவதற்கான இணக்கம் நேற்றுக் காணப்பட்டதாக கூட்டறிக்கை கூறுகின்றது.

விரைவில் மேற்கொள்ளப்படும் அரசமைப்பு ஏற்பாடுகள் மூலம் ஓர் அரசியல் தீர்வை அடைவதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டதாகவும் அந்த அறிக்கை கூறுகின்றது.

''இதற்கு முன்னர் பகிரங்கப்படுத்தப்பட்ட தீர்வுப் பொதிகள் (சந்திரிகாவின் தீர்வுப் பொதி மற்றும் அனைத்துக் கட்சி குழுவின் தீர்வு யோசனைகள்) மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அறிக்கைகளை பேச்சுக்கான அடிப்படைகளாகக் கொள்வதற்கு இரு தரப்புக்களும் இணங்கி இருக்கின்றன'' என்றும், அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் ஆர்.சம்பந்தன் கையெழுத்திட்ட அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"அதிகாரப் பகிர்வு தொடர்பில் ஏற்கனவே 51 விடயங்கள் அடங்கிய யோசனை எம்மால் முன்வைக்கப்பட்டிருந்தது. அவற்றில் 18 அதிகாரங்கள் மாகாண சபையின் வரையறைகளைத் தாண்டிச் செல்வதாக அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எனினும் அடுத்துவரும் சந்திப்புக்களில் அவை குறித்துக் கலந்துரையாடி அவற்றைத் தீர்த்துக் கொள்ளலாம் எனக் கூறி இருக்கிறார்கள்'' என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

அதிகாரப் பகிர்வு தொடர்பில் மாகாண அலகுக்கு உரியவை என்று தாம் கேட்டிருந்த அதிகாரங்களில் சிலவற்றை மத்திய அரசும் கையாள வேண்டிய தேவை இருப்பதாக அரச தரப்பினர் தெரிவித்திருக்கிறார்கள் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கூறினார். ''எனினும் அவை என்ன விடயங்கள் என்று"அவர்கள் இன்னும் கூறவில்லை'' என்றார் அவர். (உ-15)


## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, சிவன் கோயில் தெற்கு வீதியில் அமைந்துள்ள 5 பரப்பு 11 குளி பழைய வீட்டுடன் உள்ள காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 021 321 6682

(8344)(34)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை தரம் 5 புலமைப் பரிசிற் பரீட்சையில் சித்தியடைந்தோர் விவரம் 2011**


பா.சானுயா 183


கே.நிதர்சன் 179


சி.சிவனுஜா 178


ஆ.ராகுலன் 165


கி.சங்கர்சன் 158




ச.ஷாரு 155


உ.பிரியங்கா 156

*மேற்படி சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களையும் அதற்கு வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*


ர.வினித் 155


இ.மதுர்ஜா 153


வை.ஜனோஜன் 153


ம.ரம்மியா 152


வி.யசோதரன் 152

### நூறு புள்ளிகளுக்கு அதிகமாகப் பெற்ற மாணவர் விவரம்

| | | | |
|---|---|---|---|
| 01) கெ.மாருதிகா- | 145 | 12) ர.நியோன்நபிசன்- | 125 |
| 02) ஜெ.அனுஜன்- | 144 | 13) இ.றம்மியா- | 124 |
| 03) ந.யான்ஷிகா- | 142 | 14) தெ.வினோஜா- | 121 |
| 04) வி.தர்சனா- | 139 | 15) க.பிலதாசன்- | 120 |
| 05) க.டிவிஜா- | 139 | 16) ர.கஜானன்- | 115 |
| 06) சி.சுவேதிகன்- | 139 | 17) அ.அனுஸ்ரன்- | 114 |
| 07) சி.யெதீஸ்வரன்- | 130 | 18) கு.தர்சிகா- | 112 |
| 08) கு.ஜதுர்சிகன்- | 130 | 19) பா.திலக்ஷனா- | 105 |
| 09) க.எஸ்தர்பேபி- | 129 | 20) ம.நிதர்சன்- | 103 |
| 10) உ.ஜெலக்ஷன்- | 128 | 21) மு.மதுரிகா- | 103 |
| 11) அ.அஸ்வினியா- | 126 | 22) ப.திலக்ஷன்- | 101 |

பாடசாலை அபிவிருத்திச்சங்கம்,
யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை,
கந்தரோடை, சுன்னாகம்.


## தமிழருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்களுக்கு நாம் நீதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்'' என்று வலியுறுத்தினார். தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாகச் சுதந்திரமான அனைத்துலக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

தொழிலாளர் கட்சி உறுப்பினர் இயன் ஒஸ்ரின், கொன்சர்வேட்டிவ் கட்சி உறுப்பினர்கள் ஜொனாதன் லோட், அன்றூ கிரிபத்ஸ் உள்ளிட்ட பலரும், இலங்கையில் தமிழர்களுக்கு தன்னாட்சி உரிமைகளை வழங்குவதே இந்தப் பிரச்சினைக்கான ஒரே தீர்வு என்று கூறினர்.

இந்த விவாதத்தில் பதிலளித்துப் பேசிய பிரிட்டிஷ் வெளிவிவகாரப் பணியக அமைச்சர் அலிஸ்ரெயர் பேர்ட், இலங்கையில் நடந்த போரின்போது இருதரப்பினரும் புரிந்த போர்க்குற்றங்கள் குறித்தும், மனிதஉரிமை மீறல்கள் குறித்தும் தாம் ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளார் என்று தெரிவித்தார். (உ)

## மோசடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2 லட்சத்து 90 ஆயிரம் ரூபா பணத்தைச் சுருட்டிச் சென்றார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரை யாழ்.பொலிஸார் கைது செய்துள்ளனர். அவரை யாழ் நீதிமன்றில் முற்படுத்திய போது எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சந்தேக நபர் யாழ். கொட்டடியைச் சேர்ந்தவர். சம்பவம் கடந்த மாதம் 24 ஆம் திகதி நடைபெற்றுள்ளது.

குறித்த நபர் தங்கமுலாம் பூசிய குறிப்பிட்ட போலி நகைகளை எடுத்துச் சென்று வங்கியில் அடகு வைத்து பணத்தை வேண்டிச் சென்றுள்ளார். வங்கியில் இருந்தவர்களும் உடனடியாக நகைசம்பந்தமான எவ்வித ஆய்விலும் ஈடுபடவில்லை. பின்னர் நகைகளைச் சோதித்த போது அவை போலிகள் என்பது தெரியவந்தது. (உ-4)

## சிதம்பரத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய அமைச்சர் அவ்வாறு தெரிவித்துள்ள போதிலும், எமது புலனாய்வுப் பிரிவிலிருந்து அப்படிப்பட்ட எவ்வித சமிக்ஞைகளும் கிடைக்கவில்லை. எவ்வாறாயினும், இலங்கையின் பாதுகாப்புத் தொடர்பாக அச்சம் கொள்ளத் தேவையில்லை - என்றார்.

இது குறித்து இராணுவ ஊடகப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் நிஹால் ஹப்பு ஆராய்ச்சி தெரிவித்ததாவது:-

இந்தியாவுக்குத் தெரியாமல் அங்கு தீவிரவாதிகள் பிரவேசிக்க முடியாது. அதேபோன்றே இலங்கைக்கு வெளியிலிருந்து தீவிரவாதிகள் பிரவேசித்தால் அதிகாரிகள் எதிர்ப்பாகவே இருப்பர். இந்திய அமைச்சர் தனது கருத்தையே கூறியுள்ளார். அதில் உள்ள உண்மைத் தன்மை தொடர்பாக எவராலும் உறுதிப்படுத்த முடியாது. எவ்வாறாயினும், இலங்கையின் பாதுகாப்பு உறுதியாகப் பேணப்படும் - என்றார்.

இது தொடர்பாகக் கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்ததாவது:-

எந்தவொரு வெளிநாட்டுத் தீவிரவாதிகளும் கடல் மார்க்கமாக பிரவேசிப்பதற்கு எவ்விதத்திலும் இடமளிக்க மாட்டோம். இலங்கையைச் சுற்றிலும் பாதுகாப்பு தற்போது போன்று எதிர்காலத்திலும் அதி உயர் தரத்தில் பேணப்படும் - என்றார். (உ-சி)


## நன்றி நவில்கின்றோம்



எமது புதல்வன் செல்வன்
**சு.ஜஜிநாத்**

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற மெய்வன்மைப் போட்டியில் 11 வயதுப் பிரிவு 75m ஓட்டநிகழ்வில் வெள்ளிப் பதக்கம் பெறுவதற்கு பயிற்றுவித்த யோகபுரம் மகாவித்தியாலய உடற்பயிற்சி ஆசிரியர் எஸ்.மெலிக்ஸ் அவர்களுக்கும் அதிபர் மற்றும் பாடசாலைச் சமூகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பெற்றோர்
எஸ்.சுவேந்திரன் ,யோகபுரம் மத்தி மல்லாவி.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**பெய்த் நியோமி பரதன்**
**(புனித ஜோன் பொஸ்கோ)**



**17.09.2011 இன்று தனது 10 ஆவது பிறந்தநாளில் தன்னுடைய புலமைப்பரிசில் சித்தியுடன் புதிய ஆண்டில் கால்பதிக்கும் அன்பு பெய்த் குட்டியை ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தில் மனதார வாழ்த்துகின்றோம்.**

**நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து உண்டாகி ஜோதிகளின் பிதாவினிடத்தில் இருந்து இறங்கி வருகிறது. (யாக்கோபு 1:17)**

வாழ்த்துவோர்
அப்பா, அம்மா, அண்ணா, அக்கா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், சித்திமார், சித்தப்பாமார், மச்சான்மார், மச்சாள்மார், சகோதரர்மார், சகோதரிமார்.



## German, Swiss மொழிகள்

தமிழ் மொழிபெயர்ப்புடன் தினமும் நடைபெறுகிறது. இங்கு கற்பவர்களுக்கு Video CD, Books வழங்கப்படும். Embassy இல் கேட்கப்படும் A1 Certificat க்கு ஏற்றவாறு கொழும்பு சென்று Exam எழுதுவதற்கு சகல வசதியும் செய்து கொடுக்கப்படும்.
Miss. Kajenthini, 10, Palaly road, Jaffna. T.P.:0771604823



## VACANCY

**Mobitel Customer Service Officer**

கணினி மற்றும் ஆங்கில அறிவும் உடைய பெண்கள் உடன் தேவை.
CV மற்றும் ஆவணங்களுடன் இன்று (17.09.2011) சனிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு நேரில் வரவும்.

**திருமுருகன் கொம் நெற்.**
**259, கே.கே.எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**



## Set your Business with Professionals

**Accounting, Book Keeping, Tax Consultancy and other Services**

- உங்கள் வியாபாரத்தின் நிதிக்கணக்குகளைத் தயாரித்தல்
- வருமான வரி ஆலோசனை
- ஏனைய கணக்கீட்டு தேவைகளுக்கு

தொ.பே: 0773298655 / 0772450495
e-mail: sardesen@gmail.com


### வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை பொது மக்களுக்கான முக்கிய அறிவித்தல்

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குள் வசிக்கும் மக்கள் எமது சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளை பின்பற்றும்படி கேட்டுக்கொள்கின்றேன். இந்த நடைமுறைகளைப் பின்பற்ற தவறுவோர் மீது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மனவருத்தத்துடன் அறியத்தருகின்றேன்.

1. *எமது சபையின் எல்லைக்குள் வசிக்கும் மக்கள் புதிதாக வீடு அமைத்தல், புனரமைப்புச்செய்தல், மதில் அமைத்தல் ஏனைய கட்டடங்கள் அமைத்தல் போன்ற நடவடிக்கைகளின் போது பிரதேசசபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பிரதேச சபையிடம் அனுமதியைப் பெற்றபின்னர் கட்டடங்களை அமைத்துக்கொள்ளல் வேண்டும்.*
2. *விளம்பரப்பலகைகள், பதாகைகள் போன்றவற்றை விளம்பரப்படுத்தும் போது உரிய கட்டணத்தைச் செலுத்தி எமது சபையிடமிருந்து அனுமதி பெறப்படவேண்டும்.*
3. *வீதியோரங்களில் குப்பைகளையோ பொலித்தீன் பைககளையோ வீசுவதை தவிர்த்து அங்கு வைக்கப் பட்டிருக்கும் கூடையினுள் போடவும். இச்செயற்பாடுகளைப் பின்பற்றி பிரதேசத்தைச் சுத்தமாக வைத்திருக்கவும்.*
4. *மீன் வியாபாரிகள் வீதியோரங்களில் மீன் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. எமது சபைக்குரிய சந்தைகளிலேயே மீன்கள் விற்பனை செய்யப்படவேண்டும்.*
5. *மரக்கறி வியாபாரம் செய்வோர், எமது சபைக்குரிய சந்தைகளிலிருந்து ஐந்நூறு மீற்றர் எல்லைக்குள் மரக்கறிகள் வியாபாரம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.*

**சோ.சுகிர்தன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை,**
**காங்கேசன்துறை. (மல்லாகம்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப் பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு உங்கள் கணனிகளை நீங்களே அமைத்துக் கொள்வதற்கான 100% பயிற்சி நெறி

♦Chip & Card level Trouble shooting ♦Assembling ♦Variours Mother Board Handling ♦Upgrading ♦Fault Finding ♦Repairing ♦Servicing ♦Printer, Scanner & Com device management ♦Software Installation ♦Configuring Internet Interfacing & Trouble shooting ♦Networking & Etc...

ஒவ்வொரு மாணவர்களுக்கும் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தப்படும்

பயிற்சிநெறி முடிவில் கம்பியூட்டர் ஹார்ட் வெயார் சம்பந்தமான பூரண அறிவைப் பெற்றுக் கொள்வதற்கான உத்தரவாதம்

ஆரம்பம் :- 17.09.2011

**Softview Computer College**
43, Arasady Rd, Thaddatheru Junction, Jaffna. T.P: 021 2225170

"உயிர்ப்பும் உயிரும் நானே"

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் பாவிலுப்பிள்ளை பேதுறுப்பிள்ளை
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

மலர்வு 07.07.1935 உதிர்வு 18.08.2011

கடந்த (18.08.2011) அன்று அமரத்துவம் அடைந்த பாவிலுப்பிள்ளை பேதுறுப்பிள்ளை அவர்களின் ஆத்மசாந்தி பிரார்த்தனை இன்று (17.09.2011) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்த ஆத்மசாந்திப்பிரார்த்தனையில் பங்கு கொண்டு நித்திய இளைப்பாற்றுக்காக செபிக்கும் படியும் எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் தொடர்ந்து இன்று மாலை 4 மணிக்கு புனித இராயப்பர் சின்னப்பர் தேவாலயத்தில் அன்னாரின் ஆத்ம சாந்தி திருப்பலி ஒப்புக் கொடுத்தலிலும் கலந்து கொள்ளுமாறு அவரின், உற்றார், உறவினர், நண்பர்களை அழைக்கின்றோம்.

நாரந்தனை தெற்கு, ஊர்காவற்றுறை. குடும்பத்தினர்.

## 10 ஆண்டுகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வாக்குமூலம் இவர் தன்னிச்சையாக வழங்கியதுதான் என நிரூபிக்க அரச சட்டவாதி தவறிவிட்டார் என்று மேல் நீதிமன்ற நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார். இந்த சந்தேகநபரிடமிருந்து வெடிப் பொருள்கள் பலவற்றைக் கைப்பற்றியதாக பொலிஸார் கூறினர். ஆனால் அதனை மன்றில் நிரூபிக்கப் பொலிஸார் தவறிவிட்டனர்.

## சயன்ஸ் சென்ரர்
நெல்லியடி

புதிய பிரிவுகள் ஆரம்பம்
குறுகிய காலத்தில் எழுத, வாசிக்க பேச
Spoken English With Grammar
Lectures by:- Mr.k.Nishanthan (Dip.in.Eng)
ஆரம்பம்: (19.09.2011) திங்கள் At 7.30 am (திங், புதன்)

Take Away
**HP Compaq 420 Laptop**



Intel Core 2 Duo (2.10GHz)
2 GB DDR3 RAM
320 GB HDD
14.0 Display
DVD RW
W LAN & BT
WebCam

Just Pay 9,999/= Interest Free

Limited Stock Conditions Apply

**Laptop Zone** Authorized HP Dealer
T.P:-021 492 3105 No 75, K. K.S. Road Jaffna

## பொருளியல்
NB.கஜந்ரன் B.A. (Jaf), H.N.Dip. in Acc.

A/L 2012, 2013
★ புதிய தேர்ச்சிகள் ஆரம்பம்
★ Model Paper Class
★ கூடிய நேர வகுப்புகள் வாரத்தில்
★ கூடிய விளக்கங்கள், பயிற்சிகள்
★ நேர அட்டவணை அலுவலகத்தில்

**NEC** பருத்தித்துறை வீதி, யாழ்.நகர்.
**BPI** சின்னக்கடையருகில், குருநகர்.




## விவசாயிகளுக்கு ஒரு நற்செய்தி

இந்தியாவின் முதற்தர டிரக்டர் ஆகிய Swaraj டிரக்டர் தற்போது யாழ்.நகரில்....
முதலாவது டிரக்டர் கொள்வனவாளருக்கு
★ பதிவு இலவசம் ★ துவிச்சக்கரவண்டி இலவசம்

தொடர்பு: ஆர்க் என்ட பிறைசஸ்
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே
ஆங்கிலத்தில் சர்வதேச சான்றிதழ்
(SPOKEN ENGLISH)

City & Guilds - UK ENGLISH COURSE @ ESOFT

IESOL - International English for Speakers of Other Languages.
ISESOL - International spoken English for Speakers of Other Languages.

ஆங்கிலத்தை ஆரம்பத்தில் இருந்து கற்க விரும்புபவர்களுக்கு புதிய பிரிவுகள் ஆரம்பம்

Batch I 18/09/2011
Batch II 20/09/2011
Batch III 22/09/2011

Esoft Computer Studies
No.166/3 Navalar Road, Jaffna.

| | | | |
|---|---|---|---|
| Jaffna | 021 222 4142 | Kilinochchi | 021 228 54.. |
| Nelliyadi | 021 226 4940 | Chavakachcheri | 077 625 078.. |
| Uduppiddi | 0213201303 | Kodikamam | 077 625 07.. |

Hotline: 077 309 9 308

## விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

புவியியல் By. P.S.V. தினேஸ்
A/L 2012
Sat, sun - 12 - 1.00 pm
சூழல் மூலகங்கள் அலகுரீதியான துரிதமீட்டலும் மாதிரிப் பரீட்சைகளும்
A/L 2013
sat, sun - (11.00 - 12.00 pm)
பாறைகளும் மண்ணும்
★ விடைத்தாள்கள் அனைத்தும் மதிப்பிட்டுக் கையளிக்கப்படும்.
★ மேலதிக வகுப்புக்கான நேர அட்டவணையை அலுவலகத்தில் பெறவும்.
ஆரம்பம்: 18.09.2011

அடுத்த பிரிவுகளுக்கான பதிவுகள் நடைபெறுகிறது **NIBM**
அரச சான்றிதழுடனான கற்கை நெறிகள்

Certificate in Compueter Science
(Week ends 9.00 am- 12.00, Week day- Full)
Certificate in English Language
(Week ends 9.00 am - 12.00, Week day- Full)
&
Certificate in Business Management
(Thursday, Friday 9.00am-12.00)

077 071 6974 , 021 222 0360
No-40 College Road , Jaffna

## DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING

100% செய்முறை பயிற்சிகளுடன் கூடிய 5 நாள் முழுநேர பயிற்சி நெறி

- அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்
- விரிவுரையாளர்கள் கொழும்பிலிருந்து
- ஒரு குழுவில் 10 பேர் மாத்திரமே
- 100% தொழில் வாய்ப்பை பெற
- வயதெல்லை கிடையாது

- Computer Assembling - O.S Installation
- Partitions and formatting - Trouble shooting
- Introduction to LAN networking

இலவச Study pack

பயிற்சிக் கட்டணம் Rs. 5950/=
A/L தோற்றிய மாணவர்களுக்கு 50% Discount

25 ஆம் திகதிக்கு முன்பு அனுமதிகளைப் பெற்று உங்கள் வரவை உறுதிப்படுத்திக்கொள்ளவும்

APSS Engineering (Pvt) Limited
242, Dr. Subramaniam Road
Chunnakam. 021-2241731
Hot Lines: 077 2306642
077 2418804, 077 3867695
City & Guilds

## முதன் முறையாக வவுனியா மாநகரினிலே
வெளிநாட்டிலும் (Overseas) உள்நாட்டிலும் (Sri Lanka)



மாணவர்களின் உயர் கற்கை நெறிகள் தொடர்பான

## மாபெரும் இலவசக் கருத்தரங்கு

நீங்கள் பட்டதாரியாக வேண்டுமா?
சர்வதேச அங்கீகாரம் கொண்ட சான்றிதழ் வேண்டுமா?
சமூகத்திலே நீங்களும் உயர்ந்த நிலைக்கு வரவேண்டுமா?

கவலையை விடுங்கள்
இன்றே எம்மிடம் விரையுங்கள்

இக்கருத்தரங்கின் முக்கிய நோக்கம்

G.C.E. (O/L) & G.C.E. (A/L) இன் பின்னர் மாணவர்கள் எதிர்கால கற்கைநெறிகளை பின்வரும் நிறுவனங்களில் எவ்வாறு தெரிவு செய்வது என்பது தொடர்பாகவும், தேவைப்படும் அடிப்படைத் தகமைகள் தொடர்பாகவும் முழுமையாக ஆராயப்படும்.

100% விசா உத்தரவாதம்

வெளிநாடு (Overseas)
U.K., U.S.A, Canada, Newzealand | பல்கலைக்கழகங்கள் - (Universities) | கல்லூரிகள் - (Colleges)

அனுமதிகள் மற்றும் ஆவணங்கள் தொடர்பான முழுமையான அறிவினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

உள்நாடு (Sri Lanka)

| | |
|---|---|
| பல்கலைக்கழகம் - University | கல்வியற் கல்லூரி - College of Education |
| திறந்த பல்கலைக்கழகம் Open University | Professional Courses - CIMA, ACCA, AAT, IAB |
| வெளிவாரிப் பட்டப்படிப்புகள் External Degree | இலங்கை சட்டக் கல்லூரி Sri Lanka Law College |
| தொழில் நுட்பக் கல்லூரிகள் Technical College | உயர் தேசிய பட்டப்படிப்பு H.N.D |
| தொழில்சார் பயிற்சி நிலையங்கள் Vocational Training Centres | தனியார் நிலைய பயிற்சி Private Institution Courses |
| | ஆங்கிலப் பயிற்சி நெறிகள் (IELTS) Language Courses AI, BI, Diploma |

## இடம்: வவுனியா நகரசபை மண்டபம்

காலம்: 18.09.2011 காலை 10.00 மணி தொடக்கம் 01.00 மணிவரை
பிள்ளைகளுடன் பெற்றோரும் சமூகமளிப்பது நன்று

தொடர்புகளுக்கு: **British College of Higher Studies**

Second Floor No. 15, Sirambiyadi Lane, (Off Stanley Road) Jaffna. Tel: 021 222 4550

Head Office: No.30, 1/14, W.A. Silva M.W. Colombo -06 Tel: 0112500207
Hot Line(s): 0777 585913, 0777 222 422, 0714 299 935

No. 13A, Annai Teresa Lane, (Near Rambaikulam Girls Convent) Rambaikulam, Vavuniya. Tel: 024 324 5287

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.09.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.